Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20 ரூபா 13/50

දිනමුරසු වාරමලර් ஜன.27-பெப்.02,2002

வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 444

அதிகரிக்கும் நெருக்கடிகள் தாக்குப்பிடிப்பாரா ரணில்

இராணுவத்தின் திருடன் பொலிஸ் விளையாட்டு

ரோஜா தற்கொலை!?

ஆன்மீகம்

அபிஷேகம் என்பது என்ன?



பூஜையின் அம்சங்கள் ஐந்தாகும். அவைகள் பிரதிஷ்டை அபிஷேகம், அர்ச்சனை, நைவேத்யம், ஆரத்தி, இறுதியாக நமஸ்காரம் என்பனவாகும். அபிஷேகம் என்பது தனக்கு ஒளிதந்த இறைவனுக்கு பெருமையுடன் போற்றி மந்திரம் சொல்லும் போது பால் அல்லாது பஞ்சாமிர்தம் கொண்டு அந்த இறைவனுக்கு (விக்கிரகத்திற்கு) சிறிது; சிறிதாக மெல்ல முறையாக, பயபக்தியுடன் பணிவுடன் நன்றி கலந்த உணர்வோடு ஊற்றிக் குளிப்பாட்டுவதே ஆகும். பால், தேன், பழம், தயிர், நெய், ஆக ஐந்து அமிர்தங்களையும் கொண்டதே பஞ்சாமிர்தமாகும். பூஜையின் இரண்டாம் நிகழ்வாக இடம் பெறும் அபிஷேக ஆராதனை பல தத்துவார்த்த உண்மைகளை எடுத்துக்காட்டுகிறது.

பக்தனே உனக்குள் அடங்கிப் போய் கிடக்கும் மனசு, புத்தி, சித்தம், அகங்காரம், உள்ளம் என்ற ஐந்து அமிர்தங்களையுமே என்றைக்கோ அழியப் போகும் உடலுக்குள் கொண்டுள்ளது. உனக்குள் இருக்கும் இவ்வைந்தையும் பரிசுத்தப்படுத்தி, கலந்து, எல்லோருள்ளும் உறையும் இறைவன் மீது அபிஷேகம் செய்வதே "அந்தர அபிஷேகம்"ஆகும். இதையே உள்ளூரக் குளித்தல்; தியானம், அல்லது ஐம்புலனின் அடக்கிக் சிவயோகம் செய்தல் எனப்படுகிறது. இந்த உயர் நிலைக்கு உடனடியாக உன்னால் செல்ல இயலாது. அதனால் உன் கண் முன்னால் காணும் விக்ரஹத்திற்கு அபிஷேகம் செய்ய வேண்டியுள்ளது.

சிலாபம்-க.பொ.புஷ்பராஜா.

அற்புதத் திருமறையின் ஆழிய போதனை

இன்று தனவந்தன் தான் தேடும் செல்வம் எல்லாம் தனக்கே பயன்பட வேண்டுமென்ற குறுகிய சுயநல நோக்குடன் வாழ முற்பட்டுள்ளான்.

உழைப்போர் பலர் தாங்கள் மெய் வருந்தப்பாடு பட்டும் பசிதீர வழியில்லாது பதை பதைக்கும் போது தனவந்தன் தான் தோன்றித் தனமாக மாடி வீடு கட்டி மண்ணை உயர்த்தி மார்க்கத்தை தாழ்த்தி வாழ்கின்றான்.

ஏழையை வஞ்சிக்கும் செல்வந்தனின் மாட மாளிகை எதற்கு? வாழ்வை வளப்படுத்தி, சீராக்கி செம்மையாக்குவ தற்குரிய ஓர் கருவிதான் செல்வம் இத்தகைய செல்வம் படைத்தோர் அது இல்லாதோருக்கு வாரி வழங்கி வாழ்வளிக்க வேண்டும்.

வலியவன் வாழ்வதும் வறியவன் நலிவதும் கூடாது. அற்புதத் திரு மறையின் ஆழிய போதனை அனைத்துலக மாந்தருக்கும் இவ்வாறு எடுத்துரைக்கிறது.

அல்லாஹ் உனக்களித்திருப்பதிலிருந்து பிறர்க்கு நன்மை செய்து மறுமை வீட்டைத் தேடிக் கொள், இம்மையில் உன் பாகத்தையும் மறந்து விடாதே.

அல்குர் ஆன் (28:77)

எம்.சி.கலீல்-கல்முனை-05.

ஐங்காயங்கள்!

"நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு..." (ஏசாயா 53:5)

ஆம் நம் ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்முடைய மீறுதலினிமித்தம் காயப்பட்டார் என்று நாம் ஒவ்வொரு வரும் வழி தவறிப்போன ஒவ்வொரு தடவையிலும் சொல்லக்கூடுமோ? அவர் எனது மீறுதலினிமித்தமும் தப்பிதங்களின் நிமித்தமும் கல்வாரிச் சிலுவையிலே நொறுக்கப்பட்டார் எனக்காக' என்று திரும்ப திரும்ப சொல்லிப்பாருங்கள்.

அன்பானவர்களே நமது நிலைமைதான் என்ன? சற்று சிந்தித்துப் பாருங்கள் இன்னும் இன்னும் பாவத்திலே விழுந்து கொண்டு பாவத்துக்கு அடிமைப்பட்டு வாழ்ந்து கொண்டிருக்கிறோமா? நமது வெளியரங்க வாழ்க்கையை கட்டுப்படுத்தினாலும் மாசபடிந்த நமது அந்தரங்க வாழ்வில் நமக்கு மீட்பளிப்பவர் யார்?

இதற்காகவே பாவமற்றவர் பாவமானார் நம்மை மகிமையில் கொண்டு சேர்ப்பதற்காக இரட்சிப்பின் அதிபதியை தேவன் உபத்திரவத்தினாலே பூரணப்படுத்தினார் இதனாலே நாம் விடுவிக்கப்பட்டோம். நாம் காயப்படக்கூடாது என்பதற்காகவே அவர் காயமடைந்தார். எனவே நாம் இன்னும் பாவ வழியில் செல்லாமல் நமக்கு வரும் எந்த சோதனையிலும் அவர் எனக்காக காயப்பட்டார் என்று கூறும் போது பெரிய மாற்றத்தை எமது வாழ்க்கையில் காணமுடியும்.

தி.தேவன்-மட்டக்களப்பு.

கவிதைப் போட்டி இல.444

எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 02.02.2002

கவிதைப் போட்டி இல.444
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

மண் ஆசை

"மண் ஆண்ட அரசர் எங்கே?
மாட மாளிகை எங்கே?
கண் முடி காடு போனால்
கல்லறையே சொந்தம் அங்கே!
பின்லேடன் 'மண்' ஆசையால்
பெரும் தொல்லையில் 'ஆப்கான்' இங்கே."

நா.ஜெயபாலன்-பிபிலை.

மனப் போர்

போராட்டத்தை வெறுக்கிறேன்
ஆனால்..
போராளியாய் திரிகிறேன்;
ஆளொற்றுமை வேண்டுகிறேன்
ஆனால்...
ஆயுதத்தோடு அலைகிறேன்!

லைலா அக்ஷியா அக்ரம்-குருணாகல.

வேடிக்கை!

பின்லேடன்
ஒளிந்திருப்பது
தெரியாத அமெரிக்காவுக்கு
வீரப்பனை பிடிக்கமுடியாத
தமிழ் நாட்டரசு
ஒசாமா ஒளிந்திருப்பதை
காட்டிக் கொடுத்திருப்பது
வேடிக்கையாக இருக்கிறது!

வி.ஸ்ரீரஜனி-முதூர்.

உயிர் வணிகம்!

'இறைவன் படைத்த
உயிர்களை!'
இரவலாக வாங்கும்
போர் வாடிக்கையாளர்கள்
இவர்கள்...!

ஏ.எப்.எம்.றியாட்-முள்ளிப்பொத்தானை.

போர்ச்சூழல்

மானிடர் மண்ணில் மடிவதற்காக?
இயற்கை அன்னையின் பரிசங்கள்
இல்லவே இல்லை-சிந்தனையின்
புரட்சியால் சிகரமாய் உயரவேண்டிய
எமக்கு-வேண்டவே வேண்டாம்
இந்த போர்ச் சூழல்

இராசதுரை ஜர்மி-மட்டக்களப்பு.

கவிதைப் போட்டி இல.441

பரிசுக்குரிய கவிதை

ஈரமுண்டோ..!

நான்கு விழிகள்
திறந்து கொண்டாலும்,
இரண்டு-இதயங்கள்
ஏனோ...!
மூடிக்கிடக்கின்றனவே.

க.பரமேஷ்வரி-தலவாக்கலை.

இடம் உள்ள வரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

வேண்டாம்...!

விவாதத்தால் வரும்
கருத்துவாதம்
பிடிவாதத்தால் வரும்
வகுப்பு வாதம்
தீவிரவாதத்தால் வரும்
பயங்கரவாதம், எங்களோடு
முடியட்டும் இது இனியும்
வேண்டவே வேண்டாம்.

எம்.புனிதன்-பசறை.

வாருங்கள்!

புனிதச் சமரால்
புதுமைச் செய்யத் துணிந்து
சகாக்களைத் தொலைத்ததுதான் அத்துமீறலுக்கு
சாதனையென்றால்
புதுமையும் வேண்டாம்
புரட்சியும் வேண்டாம்
துப்பாக்கிகளை
தூர எறிந்துவிட்டு...!
புரிந்துணர்வோடு
கைக்கோர்த்துக் கொள்வோம்
இந்தப் புத்தாண்டில்!

து.பிரபாஹர்-ஹப்புத்தளையூர்.

என்ன பட்டம்?

நிலமீட்புக்கு
பயங்கரவாதி பட்டம்
ஜனநாயக பட்டம்
இவர்களுக்கு?

சி.சுரேஸ்குமார்-வவுனியா.

அமைதிக்காய்

நிலவான எமக்குள்ளே
நீங்காத இருள்
பூ வான எமக்குள்ளே
போர் புயல்
நித்தம் ஒரு அமைதி தேடி
யுத்தம் செய்கின்றோம்

எஸ்.கண்ணாளன்-மன்னார்.

எத்தனை உயிர்கள்

எத்தனை உயிர்களை
மண்ணில் சாய்த்துவிட்டு
சாதுகள் போல -இங்கு
சாந்த மாய் அமர்ந்திருக்கின்றீர்கள்?

ஆர்.ஜோதி-கடற்கரைச்சேனை.

மரங்களை வீழ்த்தும் மரப்பிடிகள்

தலீபான் மரங்களை வீழ்த்த
அமெரிக்க கோடாரியிற்கு ஒத்தூதும்
வடக்குக் கூட்டணியின் இரண்டு
மரப்பிடிகள்
மரங்கள் வீழ்ந்தாயினும்
ஆணிவேர் உயிருடன்

அஸ்ரின் அனீபா-மாளிகாவத்தை.

வாசகர் சாலை

முரசே,

உனக்கு என் அன்பிற்கினிய வணக்கம். உன் ஆம்சங்கள் அனைத்தும் சூப்பர். உன்னை எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது. நீ சுமந்து வரும் ஆக்கங்களில் 'மன்னாதி மன்னன்', 'சிறு கதைகள்', 'பாப்பா முரசு' அனைத்தும் சூப்பர். என்னையும் உன் வாசகராக ஏற்றுகொள்.

ஆர்.நித்தியப்பிரியா-கலஹா.

யானைக்கு அடி சறுக்கினாலும்...?

முத்தான முரசில் மலரும் மலர்கள் அனைத்தும் அவசியமானவை; அற்புதமானவை; ஆனாலும் ஆங்காங்கே துளிர்விடும் எழுத்துப் பிழைகள் (முரசு 442 ஸ்போர்ட்ஸ்) என்மனதை புண்படுத்துகின்றன. இனியும் இவை தொடராதிருக்க ஆவன செய்யுங்கள். யானைக்கு அடி சறுக்கினாலும் முரசுக்கு சறுக்கலாமோ? கூடவே கூடாது! எம் அபிமான உயிர் முரசுக்கு சறுக்கவே கூடாது!

கவனம் செலுத்துங்கள்.
ஆவன செய்யுங்கள்.

தினமுரசு சார்ந்த அனைவருக்கும் இனிய தைப்பொங்கல் வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்!

எஸ்.பத்மா-லோஜினி-கொழும்பு-10.

முத்தான தினமுரசே!

கடந்த வார முரசை படித்தேன் நீலப்பட விவகாரம் படு ஜோர். அதன் தொடர்ச்சியை எதிர்வரும் காலங்களில் தருவாயா? ஒரு சிறிய வேண்டுகோள் எங்கள் பகுதியில் முரசு வந்து ஒரே நாளில் அழிந்து விடுகின்றது. நாங்கள் ஒரு நாள் தாமதித்து சென்றாலும் கிடைப்பதில்லை. இதற்கான ஏற்பாட்டை மேற்கொள்வாயா?

கிருஸ்னன், சிவா-மஸ்கெலியா.

என் உயிர் முரசே,

உன் வரவிற்கு ஒவ்வொரு வாரமும் வழிமேல் விழிவைத்துப் பார்த்துக்கொண்டிருப்பேன். நீ சுமந்து வரும் அனைத்து ஆக்கங்களும் சூப்பரோ சூப்பர். அதிலும் பாப்பா முரசு, மன்னாதி மன்னன், சிறுகதை இவைகள் பிரமாதம் மென் மேலும் உனது பணி தொடர என் வாழ்த்துக்கள்.

எம்.எஸ்.ரமீஷா-பசறை.

அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள்.

'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

அன்பின் முரசே!

உன் இனிய அனைத்து ஆக்கங்களின் சுறு சுறுப்பினை பார்க்கும்போது பலகோடி வாழ்த்தினை கூறுகிறேன். இருந்தும் இப்புத்தாண்டில் உன்சேவை மீண்டும் மேலோங்க எனது இனிய புத்தாண்டு வாழ்த்துக்கள்.

எஸ்.சச்சி-நாராயணபுரம்.

அன்பு முரசுக்கு

441 ஆவது முரசில் உங்கள் பக்கம் பகுதியில் கிழக்கில் வெளுக்கும் சாயம்!" என்ற கட்டுரையில் கிழக்கிலங்கையின் மூத்த பத்திரிகையாளர் ஒருவரது உண்மைகளை வெளிக்கொணர்ந்த தினமுரசுக்கு வாழ்த்துக்கள் கூறியிருந்தார்.

ஆம், உண்மைகளை எதிர்வு கூறுகையிலும் பத்திரிகைகள் பின்னிற்கக் கூடாது என்பது பத்திரிகைத் தர்மம். அந்த வகையில் முரசுக்கு எப்போதும் முன்னுரிமை உண்டு. அதுதான் உண்மை. பணி தொடர வாழ்த்துக்கள்.

மல்லிகை வீ.ஸ்ரீதர்-முதூர்.

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு

தமிழ் பேசும் இதயங்களை கவர்ந்து வரும் இனிய முரசே, சென்ற வாரம் இடம்பெற்ற அம்சங்கள் சிறப்பானவை. 'முயன்றால் வெற்றி' சிந்தனைக்கு விருந்தாக அமைந்த அருமையான படைப்பு. மேலும், சமையலறை உபகரணங்களை பராமரிப்பது எப்படி' குறிப்புகள் பெண்களுக்கு மிகவும் பயனுள்ளதாக அமைந்திருந்தது.

மங்களா வாமதேவன், தங்களா வாமதேவன்-மட்டக்களப்பு.

உங்கள் பக்கம்

பயணிகளை தவிக்கவிடும் களுவாஞ்சிக்குடி பஸ் டிப்போ...

கிழக்கு மாகாணத்தில் களுவாஞ்சிகுடியில் இயங்கி வரும் நியூ ஈஸ்ரன் பஸ் கம்பனி டிப்போவின் செயற்பாடுகள் பொது மக்களுக்கு குறிப்பாக பஸ் பயணிகளுக்கு உதவுவதை விட்டு உபத்திரவத்தையே ஏற்படுத்தி வருவது கண் கூடு.

இந்த டிப்போவில் தேவைக்கு அதிகமாக ஊழியர்கள் பணியாற்றி வருவதாக தெரிகிறது. இருப்பினும் பேரூந்துகளை சரிவர பராமரித்து சேவையில் ஈடுபடுத்துவது என்பது சீராக இல்லை. உதாரணமாக கொழும்பு போன்ற தொலைதூர இடங்களுக்கு பயணம் மேற்கொள்ளும் பயணிகள் தமக்குரிய ஆசனங்களை முற்கூட்டியே பதிவு செய்த போதிலும் பல தில்லுமுல்லுகள் இடம் பெறுவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. பஸ் புறப்படும் நேரம் குறிக்கப்பட்டிருந்தபோதும் அவ்வாறு குறிப்பிடப்பட்ட நேரத்துக்கு அது புறப்படுவதில்லை. ஆசனங்களைப் பதிவு செய்த பயணிகளும் ஏனைய பயணிகளும் வந்து சேர்ந்த பின்னர்தான் வண்டியை ஓட்டும் சாரதி யார்? நடத்துனர் யார் என்பதை அறிய டிப்போ அலுவலர்கள் விசாரிப்புகளில் ஈடுபடுவது வழக்கமாகி விட்டது.

வண்டி புறப்படும் நேரம் கடந்த பின்னர்தான் எந்த வண்டி புறப்படுகிறது என்பது தீர்மானிக்கப்பட்டு சாரதி, நடத்துனர்கள் தேடிக்கண்டு பிடிக்கப்பட்டு பயணத்துக்குரிய ஒழுங்குகள் நடைபெறுவதும் வழக்கமாகி விட்டது.

கொழும்பு போன்ற தூர இடங்களுக்குச் செல்ல வேண்டிய வண்டி பொதுவாக நல்ல நிலையில் இருப்பதில்லை. பாடாவாரி பஸ்களை தூரப்பயணத்துக்கு ஏற்பாடு செய்வதனால் பயணத்தின் போது வண்டிகள் இடைநடுவில் பழுதடைந்து ஓட மறுத்துவிடுவதும் உண்டு.

இதே போன்று தான் கடந்த 16ம் திகதி புதன்கிழமை காலை 7 மணிக்கு களுவாஞ்சிகுடி டிப்போவிலிருந்து கொழும்புக்கு புறப்பட வேண்டிய வண்டி காலை 8.30ஐக் கடந்த பின்னர்தான் புறப்பட்டது. மட்டுநகர் டிப்போ வாயிலை பஸ் வந்து அடைந்ததும் தொடர்ந்து பயணம் செய்ய முடியாதவாறு பழுதடைந்து விட்டதாக சாரதியும் நடத்துனரும் கூறி பயணிகளை கீழே இறக்கி விட்டனர். அது மட்டுமல்லாமல் களுவாஞ்சிகுடியிலிருந்து மட்டக்களப்பு வரைக் குமாக பஸ் கட்டணச் செலவு 20/ ரூபா என்றும் முன்பதிவு செய்த கட்டணம் 15 ரூபா என்றும் மொத்தம் 35 ரூபாவைக் கழித்து விட்டு எஞ்சிய தொகையை பயணிகளிடம் திருப்பிக் கொடுத்து விட்டு பஸ்சையும் எடுத்துக் கொண்டு களுவாஞ்சிக்குடி திரும்பி விட்டனர்.

பயணிகளின் இரண்டும் கெட்டான் நிலையை உணர்ந்த மட்டக்களப்பு டிப்போ நிர்வாகி திரு.வை.சிதம்பரநாதன் தனியான ஒரு பஸ்ஸை ஏற்பாடு செய்து கொழும்புக்கு பயணிகளை அனுப்பிவைத்தார்.

இவ்வாறு காலம் கடந்து பயணத்தை தொடர விரும்பாத பலர் திட்டித்தீர்த்து விட்டு திரும்பிச் சென்று விட்டனர்.

தூர இடங்களுக்குச் செல்வதற்குரிய பஸ்கள் பொதுவாக ஓரளவு சௌகரியம் உள்ளதாக இருத்தல் அவசியம். மேலதிகமான பயணிகள் செல்வதற்கு இந்த வண்டிகளில் இடமளிக்கலாகாது இருக்கைகளுக்கு ஏற்ற வகையில்தான் ஆசனப் பதிவுகள் எடுக்க வேண்டும். ஆனால் இந்த வண்டிகளில் நின்று பயணம் செய்ய ஏராளமான பயணிகளையும் ஏற்றிக் கொள்ளுகின்றனர்.

இத்தகைய குறைபாடுகளை நீக்கி தொலைதூரப் பிரயாணிகள் சௌகரியமாக பயணம் செய்ய சம்பந்தப்பட்ட மேலதிகாரிகள் உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறோம்.

எம்.மகேந்திரன்-
ஒரு பாதிக்கப்பட்ட பிரயாணியிடமிருந்து

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):-074-513266

நிரந்தர யுத்தநிறுத்தத்திற்கு நோர்வே முயற்சி!

தடைநீக்கம் குறித்து ரணில் அச்சம் கலந்த அபிப்பிராயம்

அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஒன்றை ஏற்படுத்துவது தொடர்பாக இலண்டனில் நோர்வே தூதுக் குழுவினர் புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கத்துடன் பேச்சு வார்த்தை நடத்தியிருக்கும் அதே வேளை பரஸ்பரம் இணங்கிக் கொண்ட போர் நிறுத்தம் ஒன்றை அமுல் செய்வது தொடர்பில் அரசாங்க தரப்பில் இருந்தும் சாதகமான சமிக்ஞைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை காலை எரிக்சொல் ஹெய்ம் உள்ளிட்ட நோர்வே விசேடத் தூதுக் குழு இலண்டனில் வைத்து அன்டன் பாலசிங்கத்தை சந்தித்தது. கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கை வந்திருந்த போது நோர்வேக் குழுவினர் போர் நிறுத்தம் தொடர்பாக அரசாங்கத்துடன் நடத்திய பேச்சு வார்த்தைகள் குறித்து பாலசிங்கத்துடன் ஆராயப்பட்டது.

இரண்டு தரப்புக்களாலும் கடைபிடிக்கப்படவேண்டிய போர் நிறுத்த விதிமுறைகள் அடங்கிய ஆவணமொன்றை தயாரிப்பதில் நோர்வே ஈடுபட்டிருப்பதாகவும் இரண்டு தரப்பினரதும் கருத்துக்களைப் பெற்று இந்த ஆவணம் விரைவில் பூர்த்தி செய்யப்படுமென்றும் ஒஸ்லோ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இந்த ஆவணத்தின் நகலை அடுத்த வாரம் அன்டன் பாலசிங்கத்திடம் ஒப்படைக்க செவ்வாய் அன்று நோர்வேக் குழுவினர் இணக்கம் தெரிவித்துள்ளனர்.

பாலசிங்கத்தின் கருத்தைப் பெற்றபின்னர் இதுதொடர்பாக மேலதிகப் பேச்சுக்களை நடத்த அவர்கள் அடுத்தவாரமே கொழும்பு வருவார்கள் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க செவ்வாய்க்கிழமை பாராளுமன்றத்தில் ஆற்றிய தனது முதலாவது கொள்கை விளக்க உரையில் புலிகள் இயக்கம் மீதான தடையை நீக்குவது குறித்து உறுதியாக எதனையும் தெரிவிப்பதை தவிர்த்துள்ளார். இது சமாதானத்துக்கான இறுதி சந்தர்ப்பம் என்றும் இதனைத் தவறவிடக் கூடாது என்றும் கூறிய ரணில் விக்கிரமசிங்க அரசும் புலிகளும் தனித் தனியாக போர் நிறுத்தம், மோதல் தவிர்ப்பை கடைபிடிப்ப தன் மூலம் இலங்கை அரசியலில் சில குழப்பகரமான நிலைகள் தோன்றியிருப்பதாக கூறியிருக்கி றார். தாங்கள் ஏற்கெனவே வகுத்த கால அட்டவணைக்கு அமைய சமாதானப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப் படுவது தொடர்பில் சந்தேகம் தெரிவித்திருக்கும் பிரதமர் விக்கிரமசிங்க புலித் தடை நீக்கம் குறித்த விடயத்தில் பலராலும் மாறு பட்ட முறையில் வியாக்கியானம் செய்யக்கூடியவாறு தனது கொள்கை விளக்க உரையை ஆற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

புலிகள் மீதான தடையை இலங்கை அரசாங்கம் நீக்கினால் தற்போது பயங்கரவாதத்திற்கெதிராக சர்வதேச ரீதியில் ஏற்பட்டிருக்கும் கூட்டமைப்பிலிருந்து இலங்கை பின்வாங்குவதாக அர்த்தப்பட்டுவிடுமோ என்று தான் அஞ்சுவதாக பிரதமர் விளக்க மளித்திருக்கிறார். இவரது இந்தக் கருத்தை ஊடகங்கள் பல்வேறு விதத்தில் வெளியிட்டுள்ளன. ■

விடுதலை கோரி களுத்துறைச் சிறைக் கைதிகள் பிரதமருக்கு கடிதம்!

நாட்டில் சமாதானத்துக்கான சூழ்நிலை தோன்றியிருக்கும் இந்தத் தருணத்தில் மனிதாபிமான அடிப்படையில் தம்மை விடுதலை செய்யுமாறு கோரி களுத்துறைச் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளனர்.

அங்கு தடுத்து வைக்கப்பட்டிருக்கும் 102 சிறைக் கைதிகள் கையொப்பமிட்டு அனுப்பியிருக்கும் இந்தக் கடிதத்தில் இந்த நாட்டில் இரு தசாப்தகாலமாக புரையோடிப் போயுள்ள இனப் பிரச்சனைக்கு அரசியல் தீர்வு காண்பதற்குகாக கடந்த டிசம்பர் 5ம் திகதி மக்கள் ஆணையைப் பெற்று பிரதமராகத் தெரிவாகிய தங்களை சிறைக் கைதிகளாகிய நாங்கள் வாழ்த்துவதுடன் தாங்கள் மேற்கொள்ள இருக்கும் சமாதான முயற்சிகள் யாவும் வெற்றிபெற இறை ஆசி வேண்டிப் பிரார்த்திக்கிறோம் எனவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

கடந்த அரசினால் வகை தொகையின்றிக் கைதுசெய்யப்பட்டு சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டு போலியான குற்றச்சாட்டுக்களின்போில் நீண்டகாலமாக நாம் சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளோம். திகதி குறிப்பிடப்படாது விசாரணை இன்றி தடுத்துவைக்கப்படல், நீதிமன்றங்களில் ஒரு வருடம் ஆறு மாதம் என நீண்ட காலத் தவணை வழங்கப்படுத்தல் அரச தரப்பு சாட்சிகள் வழக்குத் தவணைக்கு சமுகம் தராமை. சட்டவைத்திய அதிகாரிகள் அறிக்கையைச் சமர்ப்பிக்கக் காலம் தாழ்த்துவது, பெரும்பாலான நீதி மன்றங்களில் தமிழ் அரசியல் கைதிகளுக்கு பிணை வழங்கப் படாமை போன்ற காரணங்களால் எமது விடுதலை தாமதமாகின்றது. தொடரும் எமது அவல நிலைகளைக் கருத்திற்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் சமாதான சூழ்நிலை ஏற்படுகின்ற இக்காலகட்டத்தில் எவ்வித நிபந்தனையும் இன்றி எங்களை துரிதமாக விடுதலைசெய்து எங்கள் குடும்பத்தினருடன் நாங்கள் வாழ்வதற்கு வழிசமைத்துத் தருமாறு வேண்டுகிறோம் எனவும் சிறைக் கைதிகள் பிரதமருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளனர்.

ஐ.தே.க. அரசின் 100 நாள் வேலைத்திட்டத்தின் கீழ் தங்களது விடுதலை சாத்தியப்படும் என்று நம்புவதாகவும் அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. ●

ஜனாதிபதியின் செயலாளர் இராஜினாமா?

ஜனாதிபதியின் செயலாளர் கே.பாலப்பட்டபெத்தி தனது ராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடம் ஒப்படைத்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதத்திலிருந்து தான் ஓய்வுபெறுவதால் தனக்கு முன்கூட்டிய ஓய்வு விடுமுறையை அனுமதிக்குமாறு அவர் ஜனாதிபதியிடம் விண்ணப்பித்திருக்கிறார். திருமதி குமாரதுங்க பாலபட்டபெந்தியின் பதவி விலகல் கடிதத்தை ஏற்றுக்கொண்டிருக்கிற போதிலும் அது குறித்து இன்னமும் முடிவு எதனையும் தெரிவிக்கவில்லை என அரசியல் வட்டாரங்களிலிருந்து அறியக் கிடைக்கிறது.

இதேவேளை ஜனாதிபதி செயலகத்தில் தற்போது பணியாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது தொடர்பாக யோசனை ஒன்றும் முன்வைக்கப்பட்டுள்ளது. எவ்வாறெனினும் தனது அனுமதியின்றி ஆட்குறைப்பு எதனையும் மேற்கொள்ள வேண்டாமென ஜனாதிபதி தனது அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருப்பதாகக் கூறப்படுகின்றது. ■

புலிகள் வீடுவீடாகச் சென்று விபரம் சேகரிப்பு!

கிழக்கில் மீண்டும் ஆட்சேர்ப்பு, யுத்தப்பயிற்சி!

கிழக்கில் புலிகள் வீடுவீடாகச் சென்று விவரம் சேகரித்து வருகின்றனர். படையினரின் கண்காணிப்பின் கீழுள்ள மற்றும் தமது கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகள் முழுவதிலும் இந்த விவரம் திரட்டும் வேலைகள் முழுமூச்சாக இடம் பெறுகின்றன.

வீடு வீடாகச் செல்லும் புலிகள் குடும்ப அங்கத்தவர்களினதும் மற்றும் வருமானம் முதலிய விவரங்களையும் சேகரித்து வருகின்றனர்.

இதுபோன்ற குடும்ப விவரங்களைச் சமர்ப்பிக்குமாறு ஏற்கெனவே சமுர்த்தித் திட்ட அலுவலர்களுக்கும் கிராம சேவர்களுக்கும் புலிகள் உத்தரவிட்டிருந்தன்படி அவர்களாலும் அந்த விவரங்கள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் நிலையில் புலிகளும் நேரடியாகச் சென்று விவரம் திரட்டுவதில் ஈடுபட்டு வருகின்றனர்.

தம்மிடம் ஏற்கெனவே உள்ள விவரங்களின்படி ஒப்பிட்டு வீட்டிலுள்ளோர் கூறும் தகவல்களில் முரண்பாடுகள் இருப்பின் அது பற்றி புலிகள் தீவிரமாக விசாரிக்கின்றனர்.

இதேவேளை யுத்த நிறுத்தம், மோதல் தவிர்ப்பு என்பன ஒரு புறம் கடைப்பிடிக்கப்பட்டு வரும் வேளையில் மறுபுறம் ஆட்சேர்ப்பு, விஷேட பயிற்சிகள், முகாம்களை பலப்படுத்தல், பங்கர்கள் அமைத்தல் என்பன கிழக்கில் தீவிரமாக நடைபெறுகின்றன.

சமீப சில நாட்களாக ஒய்ந்திருந்த வீட்டுக்கொருவர் ஆள் திரட்டும் வேலைகளும் கடந்த சில தினங்களாக மீண்டும் தீவிரமாகத் துவங்கிவிட்டன. வீட்டுக்கு வீடு சென்று அங்கத்தவர்களின் விவரங்களைத் திரட்டுவோர் வீட்டில் இல்லாத இளைஞர் யுவதிகள் எங்கே அனுப்பப் பட்டிருக்கிறார்கள் என்றும் அவர்களைத் திரும்ப அழைக்குமாறும் கோரி வருகிறார்கள். அத்துடன் வீட்டுக்கு வீடு 10 சாக்குகளும் சேகரிக்கப்படுகின்றன. விஷேட போர்ப் பயிற்சிகளும் இடம் பெறுகின்றன. நிலக்கீழ் கொங்கிறீற் பங்கர்களுடன் புதிய முகாம்களும் விமானத்தாக்குதலுக்கு ஈடுகொடுக்கத்தக்கதாக மாற்றப்படுகின்றன.

இதே போன்று கிழக்கில். சீருடைத் தரப்பாரும் தமது நடவடிக்கைகளையும் தயார்படுத்தலையும் தீவிரப்படுத்தியுள்ளார்கள்.

இரு தரப்பாரினதும் தயார் படுத்தும் தீவிரத்தை நேரில் காணும் மக்கள் வெகுவாகக் குழம்பிப் போயுள்ளார்கள். ■

மனிதாபிமான அடிப்படையில் 10 கைதிகள் புலிகளால் விடுவிப்பு

சமாதானத்துக்கான நல்லெண்ண சமிக்ஞையாக 10 சிங்கள போர் கைதிகள் வன்னி சென்றுள்ள காணாமல்போன படையினர் பெற்றோர் சங்கம், போரால் பாதிக்கப்பட்ட பெண்கள் அமைப்பு ஆகியவற்றின் பிரதிநிதிகளிடம் திங்கள் மாலை 6.30 மணிக்கு தமிழீழ அரசியல் துறை பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச் செல்வனால் கையளிக்கப்பட்டனர்.

10 போர் கைதிகள் கையளிக்கப்பட்ட இந்த வைபவத்தில் உரையாற்றிய தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ் செல்வன் தெரிவித்துள்ளதாவது:-

இன்றும் தேசியத் தலைவரின் பணிப்பிற்கு அமைய மனித நேய அடிப்படையில் நீங்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட உள்ளீர்கள்.

இலங்கைத்தீவிலே இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் அர்த்த மற்ற போரின் காரணமாக பல்லாயிரக்கணக்கான அப்பாவி பொது மக்கள் கொல்லப்பட்டும் பலநூறு கோடி சொத்துகள் அழிக்கப்பட்டும் உள்ளன. இவை தவிர காரணங்கள் எதுவுமின்றி ஆயிரக் கணக்கான தமிழ் இளைஞர்கள், யுவதிகள் கைது செய்யப்பட்டு விசாரணைகள் எதுவுமின்றி நீண்ட காலமாக தடுத்து வைக்கப்படுதல், கொடூரமான சித்திரவதைகள், கைதிகள், சிறைக்காவலர்கள் மற்றும் சக கைதிகளால் படுகொலை செய்யப்படுதல் போன்ற நிகழ்வுகள் தென்னிலங்கை சிறைகளிலே தொடர்ச்சியாக இடம் பெறும் சம்பவங்களாகிவிட்டன.

வெலிக்கடை, பிந்துனுவெவ, களுத்துறை சிறைச்சாலை சம்பவங்கள் மேலே கூறப்பட்டவைகளுக்கு சில உதாரணங்களாகும். எவ்வாறாயினும் எமது பராமரிப்பில் இதுவரை காலமும் தங்கியிருந்த நீங்கள் அனைவரும் மிகுந்த மனிதாபிமானத்துடனும் தோழமையுடனும் கவனிக்கப்பட்டு வந்த துடன் எதுவித சித்திரவதைகளோ பகைமை உணர்வோ எதுவும் இன்றி பராமரிக்கப்பட்டுள்ளீர்கள். அத்துடன் உங்களது விடுதலை தொடர்பாக மாறி மாறி பதவிக்கு வந்துள்ள சிங்கள அரசாங்கங்களுடன் நாம் பல தடவைகள் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டிருந்த போதிலும் எமது மனிதாபிமானக் கோரிக்கையானது சிங்கள அரசுகளால் புறக்கணிக்கப்பட்டே வந்துள்ளது எனத் தெரிவித்தார். ●

அரசியல் அழுத்தம் காரணமாக சந்தேக நபர்கள் கைதாகாத நிலை!

கடந்த பொதுத் தேர்தல் தினத்தன்று கண்டி மடவளையில் 10 முஸ்லிம்கள் கொலைசெய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான இரண்டு சந்தேக நபர்களாகக் கருதப்படும் முன்னாள் அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் மகன்மார் இருவரும் கடந்த 18ம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராவதாக இருந்தபோதிலும் அவர்கள் இதுவரையில் நீதிமன்றத்தில் ஆஜர்செய்யப்படவில்லை.

இந்த இருவரையும் கைது செய்து நீதிமன்றில் ஒப்படைப்பதைக்க வேண்டாம் என அரசியல் முக்கியஸ்தர்களிடமிருந்தும் சில உயர் மட்ட பொலிஸ் அதிகாரிகளிடமிருந்தும் விசாரணைக்குழுவுக்கு கடுமையான அழுத்தம் பிரயோகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கடந்தவாரம் இந்த இருவரையும் கைதுசெய்ய பொலிஸார் சகல ஏற்பாடுகளையும் செய்திருந்த போதிலும் இவர்கள் நீதிமன்றத்தில் ஆஜராக இருப்பதால் தற்போது கைதுசெய்ய வேண்டாம் என பலர் விசாரணைக் குழுவிற்கு அறிவுரைகூறி அந்த முயற்சியைத் தடுத்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ■

முரசம்

நிரந்தரப் போர் நிறுத்தம் தேவை

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.

நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதியை சூழ்ந்திருந்த போர் மேகம் தற்போது தற்காலிகமாக கலைந்து சென்றுள்ளது.

இந்த அமைதியின் பிரதிபலிப்பு வடக்கில் மாத்திரமன்றி தெற்கிலும் தெளிவாகத் தெரிகிறது.

வீதித்தடைகள் அகற்றப்பட்டு பயத்தாலும் சந்தேகங்களாலும் நிரம்பியிருந்த தலைநகர வாழ்க்கை ஓரளவு சுமூக நிலையை அடைந்திருக்கிறது.

தென்னிலங்கை மக்கள் உணரும் இந்த அமைதியின் ஆனந்தத்தை யுத்தப் பிரதேசங்களில் வாழும் மக்கள் இதைவிடப் பன் மடங்கு உணர்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

அவர்களுக்கு துப்பாக்கிச் சத்தங்களில் இருந்தும், செல் அதிர்வுகளிலிருந்தும் மீண்டு தமது அன்றாடப் பணிகளை மேற்கொள்ள கிடைத்திருக்கும் இந்தச் சந்தர்ப்பம் நிச்சயம் அளவில்லாத மகிழ்ச்சியைக் கொடுக்கும்.

ஆனால் இந்த சந்தோஷங்களுக்கு அப்பால் அடிமனதில் ஒளிந்து கிடக்கும் ஒரு அச்சம் கலந்த சந்தேகத்தையும் நிராகரிப்பதற்கில்லை. அது இந்த அமைதியும் பன்சிரிப்புக்களும் இன்னும் எத்தனை நாளைக்கு நீடிக்கும் என்பது குறித்துத்தான்.

காரணம் தற்போது அமுலில் இருக்கும் இந்த அமைதி குறுகிய காலங்களால் வரையறை செய்யப்பட்டிருக்கிறது. இரண்டு தரப்பினர்களதும் போர் நிறுத்தம் இரண்டாவது மாதத்திற்கு நீடிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இது ஒரு பரஸ்பர அமைதியல்ல. புலிகள் யுத்த நிறுத்தத்தை அறிவித்தார்கள் அரசாங்கமும் மோதல் தவிர்ப்பை கடைப்பிடிக்கிறது.

இந்த நிலைமை "நீ தாக்காதவரை நான் தாக்கமாட்டேன்" என்பது போலவே இருக்கிறது. வேறு மாதிரிச் சொன்னால் "நீ தாக்கினால் நானும் தாக்குவேன்" என்றும் அர்த்தப்படுத்திக் கொள்ளலாம்.

எவ்வாறெனினும் தற்போது தோன்றியிருக்கும் அமைதிச் சூழ்நிலை நிரந்தர சமாதானத்திற்கான ஒரு சாதகமான அம்சமென்பதில் சந்தேகமில்லை. இந்த நிலைமையை இரு தரப்பும் நோ்மையாக கையாளும் பட்சத்தில் சமாதான முயற்சிக்கான அடுத்த அடியை முன்வைக்கலாம். ஆனால் அதுவரை போர் நிறுத்தம் எந்தவொரு காரணத்தாலும் சிதைந்துபோகாமல் இருக்கவேண்டும். இதற்கான உடனடித்தீர்வு தற்போதைய அமைதியை இரு தரப்பினரதும் உடன்பாட்டுடனான நிரந்தர போர் நிறுத்தமாக பரிணமிக்கச் செய்வதுதான். இதற்குரிய முயற்சியில் நோர்வே அரசு தீவிரமாக ஈடுபட்டுள்ளதென கூறப்படுகின்றது. அந்த முயற்சிக்கு அரசும் புலிகளும் தங்களது பங்களிப்பை உடனடியாக வழங்கவேண்டும்.

■■

மீண்டும் மறுமடலில் வந்து கலக்கும்வரை
என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

அதிகரிக்கும் நெருக்கடிகள் தாக்குப்பிடிப்பாரா ரணில்?

தேர்தலின்போது வரிக்குறுதிகளை அள்ளி வீசிவிட்டு அதிகாரத்தைக் கைப்பற்றிய அளவுக்கு சுலபமாக ஆட்சி நடத்தி அத்தனை அவசரத்தில் இந்த நாட்டை கட்டி எழுப்பிவிட முடியாது என்பதை ரணில் விக்கிரமசிங்க இப்போதே உணரத் தொடங்கியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை.

அரசாங்கம் பதவியேற்றதன் பின்னர் உடனடி செயற்திட்டமாக நூறுநாள் அபிவிருத்தித் திட்டமொன்றை அறிவித்தது. இப்போது அதில் நான்கில் ஒரு பங்கிற்கும் அதிகமான காலப்பகுதி கடந்து விட்டது. ஆனால் சமாதான முயற்சி தவிர்ந்த வேறெந்த துறையிலும் நான்கில் ஒரு பகுதி வெற்றியையேனும் அரசாங்கம் பெற்றிருக்கிறதா என்பது கேள்விக்குறியே.

முதலில் விலைவாசிப் பிரச்சனை, தற்போது அரசதரப்புக்கு பெரும் நெருக்கடியாக உருவெடுத்துள்ளது. அரிசி, கோதுமை மா, என்று அத்தியாவசியப் பொருட்கள் மிக அதிக அளவில் விலை ஏற்றம் கண்டுள்ளன.

இறக்குமதி வரி அதிகரிக்கப்பட்டதை அடுத்து ஏனைய சகல பொருட்களும் சந்தையில் கூடுதல் விலையை எட்டியுள்ளன. மறுபறம் தாம் ஆட்சிக்கு வந்தால் 24 மணி நேரமும் தொடர்ச்சியாக மின் சாரத்தைத் தருவதாகக் கூறிய அரசாங்கம் இப்போது ஒரு மணி நேரத்தில் ஆரம்பித்து இரண்டரை மணி நேரமாக மின்வெட்டை அதிகரித்துள்ளது.

நீரேந்து பகுதிகளில் மழை இல்லை என்ற வழமையான கதையே இப்போதும் காரணமாக கூறப்பட்டு வருகின்றது.

இவ்வாறிருக்க மார்ச் மாதம் முதல் மின் கட்டணம் வேறு அதிகரிக்கப்பட இருப்பதாக அமைச்சர் கரு ஜயசூரிய கூறுகிறார்.

உண்மையில் மின் நெருக்கடியை அரசாங்கத்தினால் உடனடியாக தீர்க்கமுடியாது என்பதை ஏற்றுக்கொண்டாகவேண்டும். எனினும் அதற்குரிய நீண்டகாலத் தீர்வுக்கான திட்டம் ஏதும் அரசாங்கத்திடம் இருப்பதுபோலவும் தெரியவில்லை. மின்சாரம் குறித்து மாத்திரமல்ல, ஏனைய விடயங்களிலும் நோ்த்தியான செயற்திட்டம் ஒன்றுடன் தான் அரசு பதவிக்கு வந்ததென நம்ப முடியாத விதத்திலேயே அதன் செயற்பாடுகள் அமைந்துள்ளன.

ஜனநாயக சீர்திருத்தமும் நிர்வாக ஒழுங்கீனங்களை சீராக்குவதுமே தனது முதற்பணியாக இருக்கும் என்று கூறிவந்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் அமைச்சரவை உறுப்பினர்களின் செயற்பாடு அல்லது ரணில் விக்கிரமசிங்கவின் வழி நடத்தல் தீர்க்கமான விடயங்களில் எந்தளவு வெற்றியை அளிக்கும் என்பது குறித்து அவசரமாகவே சிந்திக்கவேண்டிய நிலைக்கு மக்கள் உள்ளாக்கப்பட்டுள்ளார்கள்.

சுமார் 60க்கும் மேற்பட்ட அமைச்சர்கள் இருந்த போதிலும் பல அமைச்சுக்கள் கண்டதுண்டமாக வெட்டப்பட்டு சிறு சிறு பிரிவுகளாக ஒவ்வொரு வரிடமும் ஒப்படைக்கப்பட்டிருந்தபோதிலும் அவற்றை நிர்வகிப்பதிலும் ஒழுங்கு முறைப்படுத்துவதிலும் இந்த அமைச்சர்கள் ஒரு மாத காலத்துக்குள்ளேயே ஏராளமான குளறுபடிகளை செய்திருக்கிறார்கள்.

ஐக்கிய தேசியக் கட்சியிலுள்ள இளம் அமைச்சரும் சிறந்த பொருளாதார விமர்சகர் என்று கருதப்படுபவருமான ரவி கருணாநாயக்க கூட்டுறவு மொத்த விற்பனை நிலையத்தை 24 மணி நேரமும் திறந்து வைக்க முடிவு செய்தார். எந்தவித ஆய்வுகளும் முன்னேற்பாடுகளும் இன்றி எடுக்கப்பட்ட இந்த முடிவு ஐ.தே.க.வின் நூறுநாள் செயற் திட்டத்தின் முதலாவது தோல்வியாக கருதப்படக் கூடிய ஒன்றாகும்.

போக்குவரத்து அமைச்சராக இருந்த காமினி அத்துக்கோரளவின் திடீர் மரணத்தை அடுத்து அவர் வகித்த அமைச்சுப் பதவி பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

யுத்த நிறுத்தம் ஒன்று அமுலில் இருக்கும் சமயத்தில் அதுவும் பரஸ்பரம் போர் தயாரிப்புக்களில் ஈடுபடலாம் என்ற சந்தேகம் நிலவும் இரண்டு தரப்புக்களின் இடையில் போர் நிறுத்தம் அமுலில் இருக்கும் வேளையில் பாதுகாப்பு அமைச்சரின் பணி எத்தனை தூரம் பாரதூரமானது என்பது புரியும். அப்படி இருக்க அவருக்கு மிக அத்தியாவசிய பொதுமக்கள் சேவையான போக்குவரத்துத் துறையை மேலதிகமாக ஒப்படைத்திருப்பது எந்த வகையிலான நியாயப்படுத்தலுக்கு உட்படும் என்று புரியவில்லை.

மறுபறத்தில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்பாக குறிப்பிடத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருவதாக தோன்றிய போதிலும் கடந்தவாரம் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க தெரிவித்திருக்கும் கருத்துக்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு பெரும் சவாலாக அமையும் என்பதில் ஐயமில்லை.

ராய்ட்டர் செய்திச் சேவைக்கு பேட்டியளித்த திருமதி குமாரணதுங்க ஐ.தே.க. வுடன் இணைந்து செயற்படுவது தனது வாழ்நாளில் மிகவும் கசப்பான அனுபவம் எனக் குறிப்பிட்டிருந்தார்.

அத்தோடு புலிகள் தொடர்பாக தனது நம்பிக்கையீனத்தை மீண்டும் வெளிப்படுத்தியிருக்கும் ஜனாதிபதி ஐ.தே.க. மக்களை ஏமாற்றவில்லை என்று கருதும்வரை சமாதான முயற்சிக்கு ஆதரவளிப்பதாக கூறியிருந்தார்.

அதாவது அரசாங்கம் மக்களை 'ஏமாற்று

கிறது' என்று ஜனாதிபதி கருதும் பட்சத்தில் அவர் தனது அதிகாரத்தை பயன்படுத்த முற்படுவார். இன்றும் முப்படைகளுக்கும் ஆணையிடும் அதிகாரம் திருமதி குமாரதுங்க வசமே இருக்கிறது. அவரே ஆயுதப்

எம்.பீ.எம். பர்ஸான்

படைகளின் பிரதம தளபதி. சமாதானப் பேச்சுக்கள் குறிப்பிட்ட ஒரு கட்டத்தை அடைந்து தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலையில் உணர்ச்சிகரமான வெளிப்பாடுகளால் அதற்கு சிலவரையறைகளை வகுக்க ஜனாதிபதியால் முடியும். மறுபறத்தில் ஜே.வி.பி.யும் பாரிய அச்சுறுத்தலை விடுத்து வருகிறது. ஆனால் புலிகள் மீதான தடையை நீக்குவதுபோன்ற சில விசயங்களில் ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்க தேரர்களின் உதவியுடன் உள்நாட்டு எதிர்ப்பை சமாளிக்கும் விதத்தில் காய் நகர்த்துவதை அவதானிக்க முடிகிறது.

உண்மையில் புலிகளின் தடையை நீக்கினால் பிரச்சனையில்லை என்று பீடாதிபதிகள் கூறிவிடுவார்களாயின் அதன் பின்னர் ஜே.வி.பி.யின் கோஷம் பெருமளவில் எடுபடாது.

ஆனாலும் பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சியின் ஆதரவின்றி சமாதானத்துக்கான அரசியல் தீர்வுத் திட்டமொன்றை நிறைவேற்ற முடியாது. இது கடைசிக்கட்ட சவாலாக இருந்தபோதிலும் இதற்கு முன்னுள்ள விடயங்களைக்கூட அரசு எதிர்த்தரப்பு கருத்தொருமைப்பாட்டுடன் கையாளக்கூடியதாக இருக்குமா என்பது சந்தேகமே.

பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் அரசாங்கத்தின் பணி சுலபமானதல்ல என்பதை அரசதரப்பு நன்கு உணர்ந்துள்ளது. எதிர்காலத்தில் பொருட்களின் விலைஏற்றம் தவிர்க்க முடியாமல் போகும் என்பதை உணர்ந்ததாலோ என்னவோ முடியுமான அவசரத்தில் உள்ளூராட்சித் தேர்தல்களை நடத்தி கூடுதலான சபைகளை கைப்பற்றி வைத்துக்கொள்ள வேண்டும் என்று அரசு தரப்பு திட்டமிடுகிறது.

எவ்வாறெனினும் தற்போதைய நிலையில் பொருளாதாரம், சமூகம் சார்ந்த எந்தவொரு விடயத்திலும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தை காண்பிக்க அல்லது அதற்கான அறி

குறியைக்கூட காண்பிக்க முடியாத நிலையில் இருக்கும் ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தின் உயிர், தற்போது அவர்கள் கயிற்றின்மேல் நடப்பது போல் முன்னெடுக்கும் சமாதானப் பேச்சிலேயே தங்கியிருக்கிறது. அது தப்பித்தவறி தோல்வியில் முடியுமானால் அதன் பின்னர் அரசாங்கத்தின் இருப்பு பற்றி அதிகம் நம்பிக்கை வைக்க வேண்டிய அவசியம் இருக்காது. மற்ற அனைத்து விடயங்களும் தோல்வி கண்டு சமாதானம் மாத்திரம் கிட்டினால் கூட எதிர்க்கட்சிகள் அரசாங்கத்தை இப்போதே கவிழ்ப்பது குறித்து கனவுகாணத் தேவையில்லை.

ஏனெனில் இந்த நாட்டு மக்களுக்கு மற்ற அனைத்தை விடவும் பெறுமதியானது நிரந்தர அமைதிதான். அதனைப் பெற்றுக் கொடுக்கும் எந்தத் தலைவரையும் அவர்கள் நிரந்தரமாக அல்லது மிக நீண்டகாலத்திற்கு அங்கீகரிப்பார்கள் என்பதில் சந்தேகமில்லை. அந்த அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள ரணில் விக்கிரமசிங்க மிக நீண்ட தூரம் பயணிக்க வேண்டி இருக்கிறது. அவர் தாண்டவேண்டிய தடைகள் சுலபமானவை அல்ல. உள்நாட்டு அழுத்தங்கள் புலிகளின் இறுக்கமான பிடி இவற்றுக்கப்பால் ஆணை பெண்ணாகவும் பெண்ணை ஆணாகவும் மட்டும் மாற்றமுடியாமல் மற்ற அனைத்தையும் செய்யக்கூடியளவு அதிகாரம் மிக்க ஒரு நிறைவேற்று ஜனாதிபதியையும் சமாளிக்க வேண்டியிருக்கிறது.

தற்போதைய நிலையில் திருமதி குமாரதுங்கவின் கூற்றுப்படி உண்மையான சமாதானத்திற்காக அவர் திறந்த மனதுடன் உதவிசெய்வார் என்றே கருதப்படுகிறது. ஆனால் அந்த உதவியை உதவியாகப்பெறுவதா அல்லது தங்கள் பலத்தைக் காண்பித்து ஜனாதிபதியை பதவி இறக்கிவிட்டு ஜனாதிபதியின் அதிகாரத்தை தமது கைக்கு எடுத்து தீர்வொன்றை நோக்கி செல்வதா என்ற கேள்வி ரணில் விக்கிரமசிங்கவின் முன்னிலையில் இருக்கிறது. அவர் எதைத் தேர்ந்தெடுக்கப்போகிறார் என்று இப்போதே கூறமுடியாது. அவரது தேர்வு எதுவாக இருந்தாலும் அதில் ஏற்படப்போகும் தடைகள் ஏராளம் என்பது மட்டும் தெளிவானது. ■

சாதுரணின் வழுக்கு

மரியாதைக்குரிய அமைச்சர் மகேஸ்வரன் அவர்களுக்கு, என்ர முதல் கடிதத்தை பிரபாகரன் அவர்களுக்கோ, பிரதமர் ரணிலுக்கோ அல்லது டக்ளசுக்கோ எழுதுவதாகத்தான் இருந்தேன்.

ஏனெண்டால், எனக்கு அப்பப்ப எழும்புற சந்தேகங்களைக் கேட்டுத் தெளிவடைஞ்சு கொள்ளுறதுதான் என்ர கடிதத்தின் நோக்கம். நேற்றுவரை உங்களைப் பற்றி எனக்குச் சந்தேகங்கள் இருக்கவில்லை. இந்த மில்லேனியத்தின் தொடக்கம் வரை எல்லாருக்கும் தெரிஞ்ச ஒரு யாவாரியாகவே இருந்த நீங்கள், தீடீரெண்டு சுழண்டடிக்கிற காத்தில கீளிசறியாச் சருகு மேலெழும்பின மாதிரி சடாரெண்டு எம்.பியாகி னீங்கள், அடுத்த வரியமே மந்திரியுமாகினதைப் பாத்து எனக்கு மலைப்பாத்தான் இருந்தது. ஆள் வலு சுழியன்தான் எண்ட அபிப்பிராயமு மிருந்தது.

பாளிமெண்டிலையும் பதவியேற்ற நேரத்திலயும் கமெரா உங்களைக் காட்டேக்க நீங்கள் வாயை 'யா' வெண்டு திறந்து கொண்டிருக்கிறதைப் பாத்துத்தான் எனக்குச் சாடை வெக்கம் வந்து, 'அசிங்கமாய்க் கிடக்கு, வாயை மூடுங்கோ' எண்டு ஆரிட்டையேனும் சொல்லி உங்களுக்குத் தெரியப்படுத்திவிடவேணும் எண்டு நினைச்சனான். நீங்கள் தெரியாமல்தான் வாயைத் திறந்துகொண்டிருக்கிறியள் எண்டெனக்குத் தெரியும். நானும் தமிழ் வாத்தியாற்றை வகுப்பில பேச்சு வாங்கியிருக்கிறன். 'வாயை மூடுடா, இலையான் பூந்திடப் போகுது' எண்டு அவர் அப்பப்ப திட்டேக்க வகுப்பே சிரிச்ச, அதில கண் மயக்கம் கலைஞ்சு உற்சாகப்பட்டுக் கொள்ளும். கடைசிவரை, அவருக்குத்தான் நாங்கள் 'இலையான்' எண்டு பட்டம் வைச்சிருக்கிறமெண்டு தெரியாமல் அதைச் சொல்லிச் சொல்லிச் சிரிப்பு மூட்டிக் கொண்டிருந்தார்.

எப்பிடியிருந்தாலும், வாயைத் திறந்து வைச்சுக் கொண்டிருந்தால் இலையான் பூந்திடும் எண்ட நினைப்பே இண்டைக்கும் எனக்கு ஒரு அந்தரந்தான். அது ஒண்டைத்தான் உங்களுக்கும் சொல்ல வேணுமெண்டு இருந்தனான்னே தவிர, உங்களைப்பற்றி வேறையொரு விமர்சனமும் எனக்கு இருக்கேல்லை. இண்டைக்குச் சொன்னால், சக்தி ரீ.வியில உங்கட பேட்டி பாத்ததில இருந்து எனக்குள்ளையும் நடப்பேறின மாதிரிதான்.

வன்னிக்குச் சாமான் அனுப்பாட்டில் புனரமைப்பு அமைச்சுக்கு வெளிநாட்டிலிருந்து வாற வளங்களை நிப்பாட்டிப் போடுவன் எண்டு ஐயலத் ஐயவர்த்தனாவிட்டையும், டக்ளசை இண்டைக்குச் சந்திக்க வேண்டாம் எண்டு தீலக் மாரப்பனவிட்டையும், சட்டவிரோத ஆயுதங்களை உடனடியாய்ப் பறிக்கச் சொல்லி ரணிலிட்டையும் எச்சரிக்கை செய்து போட்டுத்தான் வந்திருக்கிறன் எண்டு நீங்கள் சர்வ சாதாரணமாய்ச் சொல்லிக் கொண்டு போகேக்கையே, தலை வண்ங்காத் தமிழன் ஒருத்தன் கொழும்பில வந்திருந்து காலுக்கு மேல கால் போட்டுக் கொண்டு கலக்கிறான் எண்ட நினைப்பில எனக்குத் தலை கிறுகிறுத்துப் பெருமை பொங்கினது உண்மை.

குமாரண்ணைக்குப் பிறகு கொழும்பைக் கலக்கிறதுக்கு ஒரு தன்மானத் தமிழனைக் கண்ட பூரிப்பில, உங்களைப் பற்றின பழைய குற்றச்சாட்டுக்களும்கூட, உங்கள் வீரத்தின் பகுதிகள்தான் என்று நினைக்க ஆரம்பித்திருந்தேன்.

முன்னாள் மாவட்ட அமைச்சர் ஒருவரின் இனிஷியல் உங்கள் பெயரோடு ஒட்டிக் கொண்டதற்கு ஏதோ கள்ள வேலைதான் காரணம் என்றும், எம்.பியாகு முன்னம் எத்தனையோ தடவை செக் பொயின்ற்களில சாமான் கொண்டு சென்ற லொறியை விட்டுவிட்டு நீங்கள் தப்பியோடியதாகவும் வருகிற கதைகளையெல்லாம் உங்கள் வீரத்தின் விழுப்புண்களாகவே எண்ணியிருந்தேன்.

எல்லாத்தையும் குழப்பி இந்தக் கடிதத்தை எழுதப் பண்ணியது எங்கடை கடைக்கு வாற லெக்சரர் க.என்பவர்தான். அந்தாள் கேள்வியளைக் கேக்கக் கேக்க இந்தாளிட்டைப் படிக்கிற பொடியளும் பழுதாகிப் போகப் போறாங்களே எண்ட பயம்தான் எனக்கு வந்தது. நீங்கள் அதுக்கெல்லாம் கலங்காமல் மறுப்பு விட வேணுமெண்ட ஆதங்கத்திலதான் இந்தக் கடிதத்தை உங்களுக்கு அவசரமாய் எழுதவேண்டி வந்தது. ஏனெண்டால் என்ர மறுப்புகளை அந்தாள் சட்டை செய்யிறதாய் இல்லை. படிச்ச தீமிர்!

உங்களை நக்கலடிச்சு அவர் கதைக்கேக்கையே சொன்னனான், "சேர், எங்களுக்கிருக்கிற ஒரேயொரு தமிழ் அமைச்சர் அவர்... அவரைப் பற்றி நக்கல் கிக்கல் ஒண்டும் வேண்ணா"மெண்டு. அதுக்கு அவர் சொல்லுறார்; கோயில் அமைச்சை மட்டும் ஏன் எடுத்தவராம், புக்கை பொங்கித் தின்னவோ? புனர்வாழ்வு அமைச்சராக எல்லோ வருவனெண்டவர், அதுமட்டுமில்லை, மார்கழி 1ம் திகதி ஸ்ரீதர் தியேட்டரை விட்டு டக்ளசை வெளியேற்றுவன் எண்டார், ஜனவரி 15ந் திகதிக்கு முன் ஆமியை யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேற்றுவன், தரைப்பாதையைத் திறப்பன், ஆயுதக் குழுக்கள் ஒண்டையும் இஞ்சை இயங்கவிடமாட்டன் எண்டெல்லோ பேசினவர்.... இப்ப அதுகளைப் பற்றி ஒரு கதையையும் காணன். புலிகளுடன் பேச வேணும், தடைநீக்க வேணும் எண்டு பத்துப் பதினைஞ்சு வரிசமாய் கூட்டணிக்காறர் செய்துவாற அரசியல் கோஷங்களை முழக்கிகிட்படி. இனி அடுத்த எலக்ஷன் வரட்டும் எண்ட கணக்காயெல்லே அடங்கிப் போனார்..." எண்டு நக்கல் சிரிப்போட சொல்லுது மனுசன்.

நல்லாய்க் குடுக்கவேணும் எண்டு நான் வாயெடுக்க முந்தி அந்தாள் என்னை அடக்கிப் போட்டுச் சொல்லுது, "எலக்சனுக்கு முந்தி சாமானுக்கெல்லாம் GST ஏன் குடுப்பான் எண்டெல்லே கம்பீரமாய்க் கேட்டவர், இப்ப விலை உயர்வை எதிர்த்துப் போராட்டம் நடத்த வெளிக்கிட்டால், அவையை அடக்கிறதுக்கு பொலிசோடையும் ஆமியோடையும் போய்க் கதைக்கிறார். போதாக்குறைக்க புதுசா வந்திருக்கிற மேயர் வேறை. "விலையுயர்வுப் பிரச்சனை ஒரு முக்கிய பிரச்சனை இல்லை எண்டு பேசுறார். இதெல்லாத்தையும் கேட்டுக் கொண்டு உங்கடை அமைச்சர் என்னவாம் பண்ணுகிறார்?" எண்டு கொக்கரிக்குது மனுசன்.

நான் சொன்னன், "அமைச்சர் மக்களின்ர பிரச்சனைகளைப் பற்றி அக்கறைப்படாமலில்லை. போக்குவரத்து, பாதைக் கஷ்டங்களை நீக்க இரவு விமான சேவையை ஒழுங்கு பண்ணினவர்தானே?"

"ஓமோம் கொஞ்சநாள் ஓடியிருந்தாலும் அது வெறும் 48 பேரோட மட்டும் ஓடல்ல. அமைச்சரின் 500 கிலோ சாமான்களையும் ஏத்திக் கொண்டுதான் தினசரி ஓடினது" எண்டு

[தொடர்ச்சி 17ம் பக்கத்தில்]

பாவலரேறு பெருஞ்சித்திரனார் என்பவர் தமிழினவாதிகளில் முக்கிய நபராகத் திகழ்ந்தவர். முன்னொரு காலத்தில் புளொட் இயக்கத்தலைவர் முகுந்தனுக்கு மிக நெருக்கமாய் இருந்து, பின்னர் தம்பி பிரபாகரனை சுவீகரித்துக் கொண்டு, அவரே தமிழினத்தின் விடிவெள்ளி என்று கவிதை எழுதிக்கொண்டிருந்தவர். அவரது மகன் பொழிலன் எம்.ஜி.ஆர் ஆட்சிக்காலத்தில் கொடைக்கானல் டி.வி. டவரைத் தகர்க்க முயற்சித்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு சிறையில் இருந்தவர்.

பெருஞ்சித்திரனாரின் நினைவிடத்தில் பாவலரேறு தமிழ்க்களம் என்ற பெயரில் அமைப்பொன்று கடந்த சனிக்கிழமையன்று சென்னையில் துவங்கப்பட்டது. நிலவழகனார், சொல்லழகனார், இளங்குமரனார் என தூய தமிழ்ப்பெயர் கொண்டோர் பலர் பங்கேற்றனர், தி.மு.க தலைவர் கலைஞர் கருணாநிதியும் கலந்து கொள்வதாக இருந்தது. மாறாக ஒரு செய்தியினை மட்டும் அனுப்பி விட்டு ஒதுங்கிவிட் டார் தமிழினத்தலைவர். மற்றபடி நெடுமாறன், சுப.வீரபாண்டியன், மணியரசன், தியாகு என வழக்கமான தமிழின ஜனநாயக் கூட்டணியின் ஒருங் கிணைப்புக் கூட்டத்தில் நாங்கள் வெளிப்படுத்துவோம் என்றார் அந்த வீரமறவர். திராவிடக்கழகம் மற்றும் பெரியார் திராவிடக்கழகம் போன்ற அமைப்புக்கள் பாலசிங்கத்திற்கு அனுமதிவழங் கப்படவேண்டுமென கோரின. புலிகளின் ஊது குழல் பழ நெடுமாறன், அப்படியொரு கோரிக் கையிருப்பதாகவே எனக்குத் தெரியவில்லை. எல்லாம் பத்திரிகைகளில் வரும் உடான்ஸ், புலிகளைத்திட்டுவதற்கு இது ஒரு சாக்கு என்றார் முதலில். பின்னர் பாலசிங்கமே அத்தகைய வேண்டுகோள் விடுத்திருப்பதாக செய்தி வந்தது. அதன் பிறகும் நெடுமாறன் அப்படி ஏதும் அனுமதி கோரப்படவில்லை யென்று சாதித்தார்.

இலங்கையில் சமரசப் பேச்சு வெற்றி பெறக்கூடாது என விரும்பி, எதிர்க் கூச்சல் போடுபவர்கள் உள் நோக்கத்துடன் செயல்படுகிறார்கள். இவர்கள் தங்கள் போக்கினை மாற்றிக் கொள்ளாவிட்டால் தமிழர்களால் தூக்கி எறியப்படுவர் என்று வேறு எச்சரிக்கை செய்தார். அவரது எச்சரிக்கையினை யாரும் பொருட்படுத்தவில்லை என்பது வேறு விடயம்.

விடுதலைப் புலிகளுக்கு தமிழ்நாட்டில் மீண்டும் புகலிடமா?

மேடைப் போராளிகள்தாம். கடந்த ஆண்டு கூட, விடுதலைப்புலிகள் யாழ்ப்பாணத்தை கைப்பற்றி விடுவார்கள் என்ற பரபரப்பு அதிகமாக இருந்த நேரத்தில் இதே பாவலரேறு நினைவு தினத்தைக்கொண்டாடுவதாக அறிவித்து, வைகோவை அழைத்திருந்தனர். கடைசி நிமிடத்தில் புரட்சிப்புயல் ஒதுங்கிக் கொண்டார். சென்னையில் தங்கியிருந்து அன்டன் பாலசிங்கம் இலங்கை அரசுடன் பேச்சுவார்த்தை நடத்த அனுமதிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையெழ, தமிழகத்தில் பலியெதிர்ப் புக்குரல்கள் உக்கிரமானதன் பின்னணியில் நடைபெற்ற அமர்க்களத் துவக்க விழாவில், கலைஞர் பங்கேற்பதாகச் சொல்லப்பட்டது, பரவலான எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. ஆனால் நமக்கேன் வம்பு என்று ஒதுங்கிக் கொண்டார் அவர். பிரபாகரனின் பெயரைக் கூறும்போதே நாடிநரம்புகள் முறுக்கேறுவதாகக் கூறிக்கொள்ளும் புயலே அமைதியாக இருக்கும்போது, நமக்கென்ன வந்தது என்று நினைத்தாரோ என்னவோ! கவனிக்க வேண்டிய விஷயமே விடுதலைப்புலிகளுக்கு நேரடியாக வக்காலத்து வாங்க தமிழகத்தின் முக்கியத்தலைவர்கள் எவரும் தயாரில்லை என்பதுதான்.



செய்தி வெளியானவுடன் தமிழ் மாநில காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரும் முன்னாள் அமைச்சருமான எஸ். ஆர். பாலசுப்பிரமணியன் கண்டித்து அறிக்கைவெளியிட்டார். இடது, மற்றும் வலது கம்யூனிஸ்டுகள், முதல்வர் பன்னீர்செல்வம், பின்னர் புரட்சித்தலைவி யென்று ஒவ்வொருவராக மற்றவர்களும் கண்டனக்குரல் எழுப்பினார்கள்.

விடுதலைப்புலிகள்மீதான தடை நீக்கப்பட வேண்டும், இங்கிருந்து பேச்சுவார்த்தை நடத்த அனுமதிக்கப்பட வேண்டும், ஆனால் வாஜ்பேயி அரசை நான் வற்புறுத்தப் போவதில்லையென நீக்குப்போக்காக வை.கோ கூறிவிட்டார்.

இன்னொரு புலி ஆதரவாளர் பாட்டாளி மக்கள் கட்சித்தலைவர் டாக்டர் ராமதாசோ, இந்தியாவில் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்ற தங்கள் நிலையில் மாற்றமில்லை. பாலசிங்கம் சென்னையில் தங்க அனுமதிக்கப்படலாம்தான், ஆனால் இங்கு தேவையில்லாத பிரச்சனைகள் எழுகின்றன, பேசாமல் அவர் பம்பாயில் தங்கி, தனக்கு தேவையான சிகிச்சையினையும் பெற்றுக் கொண்டு, அங்கிருந்தே பேச்சுவார்த்தை நடத்திக் கொள்ளட் டும் என்று கூறிவிட்டார். தமிழ் நாட்டைவிட அங்கே விடுதலைப்புலிகளுக்கு ஆதரவு அதிகம் இருக்கும் என்றார் அவர் வெறுப்பாக. சூப்பர் நிலைப்பாடு கருணாநிதியுடையது தான். எங்களுக்கென்று இதில் கருத்து எதுவுமேயில்லை என்றார் அவர். வாஜ்பேயி அரசு நாட்டு நலன் கருதி எதைச் செய்தாலும் அதை நாங்கள் ஏற்றுக்கொள் கிறோம். என்றார் அவர்.

சரி, தனிப்பட்ட முறையில் நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று நிருபர்கள் வற்புறுத்திக் கேட்ட போது, எங்கள் கருத்தை தேசிய மத்திய அரசு விடுதலைப்புலிகளின் வேண்டுகோளை மறுத்துவிட்டது என்று தற்போது தகவல்கள் வந்திருக்கின்றன. ஜெயலலிதா கடும் ஆட்சேபம் தெரிவித் திருக்கும் வேளையில் மத்திய அரசு விரும்பினாலும், சென்னையில் தற்காலிகமாகக் கூட, அன்டனாருக்கு புகலிடம் கொடுக்கப்படும் என்று தோன்றவில்லை.

தமிழகத்தில் அந்த அளவு தமிழினவாதத்திற்கு ஆதரவு என்பதைத்தான் சமீபத்திய நிகழ்வுகள் மீண்டும் எடுத்துக்காட்டியிருக்கின்றன. கண்ணகி சிலையினை அப்பறப் படுத்தியதற்கு என்ன பெரிய எதிர்ப்பு நடந்து விட்டது?

கணவனது தவறுகளையெல்லாம் பொறுத்துக் கொண்டு, தன்னிடம் வந்தவுடன் முழுமனதுடன் ஏற்று, பின் தவறான ஒரு தீர்ப்பின் விளைவாக அவன் கொலை செய்யப்பட, கொதித்தெழுந்து, ஒரு மாநகரையே தீக்கிரையாக்கிய கண்ணகியினை எந்த அளவு பெண்மைக்கு இலக்கணமாக கருதலாம் என்ற பிரச்சனை ஒரு புறமிருக்கட்டும். அதை வைத்துக் கொண்டு மீண்டும் இன எழுச்சியை உருவாக்க மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் தோல்வி அடைந்திருக்கின்றன என்பதைத் தான் இங்கே கவனத்தில் கொள்ள வேண்டும். வாஸ்து சாஸ்திரம் என்று சொல்லி, ஏதோ தனக்குச் சொந்தமான கட்டிடத்தில் மாற்றங்கள் செய்வதுபோல், ஜெயலலிதா சாலை விபத்து நாடகமாடி, சிலையினைத் தூக்கிக் கொண்டுபோய் அருங் காட்சியகத்தில் வைத்துவிட்டார். அவசர அவசரமாக மெரினா கடற் கரையில் அந்த சிலை இருந்த பகுதி யில் புதிதாக சாலையே போடப் பட்டுவிட்டது. மிக மோசமான அதிகார துஷ்பிரயோகம் அது. ஆனால் தி.மு.க அப்பிரச்சனையைக் கையிலெடுத்தபோது மக்கள் ஏன் கண்டு கொள்ளவில்லை? கலைஞர் தமிழனப் பற்று பற்றி அவ்வளவு மரியாதை.

(தொடர்ச்சியை 17ம் பக்கத்தில் பாருங்கள்)

கவிஞர் மட்டுநகர் முத்தழகுக்கு சென்னை கலைவாணர் அரங்கில் தஞ்சை இதயகீதம் இலக்கியப் பொது நல இயக்கம் ஏற்பாடு செய்திருந்த உலகத்தமிழ் கவிஞர்கள் மாநாட்டில் 'தமிழருவி' பட்டத்தை வழங்கி கௌரவித்துள்ளனர். டிசம்பர் 28ம் திகதி நடைபெற்ற விழாவில் தமிழக வேளாண்மைத்துறை அமைச்சர் இரா.ஜீவானந்தம் விருதினை வழங்கினார். அமைச்சர் விருது வழங்கும் போது எடுக்கப்பட்ட இப்படத்தில் மேற்படி இயக்கத் தலைவர் இரா.எழிலரசு, கவிஞர் சுரதா ஆகியோரும் உள்ளனர்.

பண்டாரவளை த.ம.க.யில் நிதி மோசடிகள் இடம்பெற்றதாக பெற்றோர் புகார்!

கடந்த 443வது முரசில் பண்டாரவளை தமிழ் மத்திய கல்லூரியில் இடம்பெறும் பல விடயங்கள் பற்றிய கருத்துக்களை வரவேற்றுள்ள பெற்றோர்கள், மாணவர்கள் பலரும் மேலும் பல புதிய விடயங்களை பிரசுரிக்குமாறு கேட்டுக் கொண்டுள்ளனர்.

மேற்படி கல்லூரியின் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர், செயலாளர், உறுப்பினர்கள் இருந்தும் கடந்த இரண்டு வருடத்திற்கு மேலாக இவ்வபிவிருத்திச் சங்க பொதுக் கூட்டம் ஒன்றுகூட இதுவரை நடைபெறவில்லையென பலர் புகார்கள் தெரிவித்துள்ளனர். இதற்கான காரணத்தை அதிபர் உடனடியாக தெரிவிக்க வேண்டும். என பெற்றோர் கேட்கின்றனர்.

மேலும் 'டொனேசன்' விடயத்தை எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு அரசாங்க பாடசாலைகளுக்கும் கல்வி அமைச்சு ஒதுக்கும் நிதி இந்த கல்லூரிக்கு கிடைக்கவில்லையா என பெற்றோரும் நலன் விரும்பிகளும் கேள்வி எழுப்பியுள்ளனர். நிதியை பெற்றுக்கொள்ள போதிய முயற்சிகள் செய்யாமல் கல்லூரி அனுமதி கேட்டு வரும் 1ம் வகுப்பு முதல் உயர் தரம் வரை சகலரிடமும் ரூபாய் 3000 வரை பணம் அறவிடுவது முறையா என விசனம் தெரிவிக்கின்றனர்.

இப்போது 'டொனேஷன்' கொடுத்த பெற்றோர்கள் கேட்பது இததான், இதுவரை எங்களிடம் பெற்ற பணத்தைக்கொண்டு பாடசாலைக்கு செய்தது என்ன? என்பதையேயாகும்.

பணம் பெற்ற ரசீதுகளையும் கணக்கு விபரங்களையும் பகிரங்கப் படுத்துமாறு பலரும் வேண்டுகின்றனர். இதற்காக உடனடியாக அபிவிருத்தி சங்க கூட்டத்தை கூட்டுமாறும் கேட்டுக் கொள்கின்றனர்.

பாடசாலையில் டொனேஷனை கையாடுவதற்கென்றே ஒரு குழு இயங்குகின்றதென்பது மாணவர்களின் குற்றச் சாட்டு.

கடந்த இதழில் வெளியான கட்டுரையினால் இந்த விடயத்தில் சம்பந்தப்பட்டவர்கள் மாணவர்கள் மேல் கோப முற்று தமது கோபத்தை பல்வேறு வழிகளில் அவர்கள் மேல் காட்டுவதாக தகவல்கள் கிடைத்திருக்கின்றன.

இந்த விடயங்களைப் பற்றி கல்வி அமைச்சு நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் இது ஒரு மாணவர் போராட்டமாக மாற்றமடைய இடமுண்டு என்று எச்சரிக்கப்பட்டுள்ளது.

வட்டகொடை-சிவலிங்கம் சிவகுமாரன்.

மலையாள மாந்திரீகம்

பரம்பரை பரம்பரையாக 39 வருடகால தன்னிகரற்ற சேவையாற்றும் மலையாள மாந்திரீக தெய்வீக சக்தியால் எண்ணியது எண்ணியவாறு மின்சார வேகம் போல நடைபெறுவது திண்ணம். அதற்கெடுத்துக்காட்டாக, மக்களின் வெற்றியின் பலனாக எமக்களித்த சான்றிதழ்களை நேரில் கண்டறிய வாருங்கள்!

சுவிஸ் அன்பரின் "கணவன்/மனைவி பிணக்கு தீரல் மடல்"

"மனித தெய்வமாகிய ஐயாவுக்கு, ஸ்ரீ துர்க்கையம்மனின் கிருபையாலும் தங்களது ஆசீர்வாதத்தாலும் சின்னாபின்னமான எமது குடும்பத்தை 7000 KM க்கு அப்பால் இருந்த வண்ணம் ஒற்றுமையாக்கிய மனித தெய்வமாகிய தங்களுக்கு என்றென்றும் கடமைப்பட்டுள்ளோம்."

சுவிஸ் அன்பரின் மடல் "ஸ்ரீ துர்க்கையம்மனின் சக்தியால் பேசும் மழலை"

"மனித தெய்வமே! உங்கள் தெய்வீக சக்தியால் பேசாத எம் 3 வயது மழலையை பேச வைத்து எம்மை ஆனந்த வெள்ளத்தில் முழ்கவைத்த உங்களுக்கு எமது கோடானு கோடி நன்றிகள்."

ஜெர்மன் அன்பரின் மடல், "மகளின் திக்குவாய் குணமாகியது"

"அன்புத் தெய்வமாகிய ஐயாவுக்கு, பிறவியிலிருந்து திக்குவாயாக இருந்த எனது 9 வயது மகளை திக்குவாயிலிருந்து குணமாக்கிய உங்களுக்கு ஆனந்தக் கண்ணீரால் நன்றி கூறுகிறோம்!"

லண்டன் அன்பரின் மடல், "எண்ணியவள் என்னிடமே வந்து சேர்ந்தாள்"

"பெருமதிப்புக்குரிய ஐயாவுக்கு, என்னை வெறுத்து என்னை பிரிந்து சென்ற என் ஆருயிர் காதலியை, மீண்டும் என்னிடத்தில் வந்து சேரவைத்து என்னை சந்தோஷத்தில் ஆழ்த்திய உங்களுக்கு ஆயிரமாயிரம் நன்றிகள்!"

கொழும்பு அன்பரின் மடல், "39 வயதில் அதிசயத் திருமணம்"

"பெருமதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, எமது 39 வயது மகளுக்கு இனிமேல் திருமணமே நடக்காது என்று எண்ணிய நாம், உங்களிடம் மகளுக்கு பரிகாரம் செய்ததால் அதிசயிக்கத்தக்க வகையில் வெளியூரிலிருந்து வரன் கிடைக்கச் செய்து மகளின் திருமணத்தை இனிதே நடந்தேறச் செய்தமைக்கு கோடானுகோடி நன்றிகள்!"

குருணாகல் அன்பரின் மடல், "நெடுநாளாக தடைப்பட்ட திருமணம் 16 நாளில் வெற்றி"

"தெய்வகடாட்சம் பொருந்திய ஐயா, எனது சகோதரிக்கு திருமணம் தடைப்பட்ட வண்ணம் இருந்ததால், உங்களிடம் பரிகார நிவர்த்தி பெற்ற பின் ஆச்சரியப்படத்தக்கவகையில் சகோதரியின் திருமண நடைபெற உதவிய உங்களை என்றுமே மறக்கமாட்டோம்."

பிரான்ஸ் அன்பரின் மடல், "குறிப்பிட்ட நேரத்தில் குறிப்பிட்ட பயணம் வெற்றி"

"அன்புக்கும் மதிப்பிற்குமுரிய ஐயா, வெளிநாடு செல்லமுடியாமல் மிகவும் கஷ்டப்பட்ட எனக்கு பிரயாணத்தடை நீக்கி பரிகாரம் செய்து குறித்த நாளில் பிரயாணத்தை கைகூட வைத்து என்னைப் பிரான்ஸிலிருந்து இக்கடிதத்தை நன்றியாக எழுதுகிறேன். என்றுமே உங்களை மறவேன்."

ஹட்டன் அன்பரின் மடல், "தீராத் தலைவலி தீர்ந்துவிட்டது"

"மதிப்பிற்குரிய ஐயாவுக்கு, நெடுநாளாக எனக்கிருந்த தீராத் தலைவலியைக் குணமாக்கி என்னை பெரும் கஷ்டத்திலிருந்து விடுவித்தமைக்கு கண்ணீரால் நன்றிகள்."

இத்தாலி அன்பரின் மடல், "சந்தேகத்தால் பிரிவுபட்ட காதல் வெற்றி"

"வணக்கத்துக்குரிய டாக்டர் ஐயா, வீண் சந்தேகத்தால் பிரிய நேர்ந்த நாம் மீண்டும் சந்தோஷமாக சேர்ந்தது உங்களால் தான். என்றென்றும் உங்களுக்கு நன்றிகள்."

பதுளை அன்பரின் மடல், "போதை அடிமைத்தனத்திலிருந்து விடுபட்டவர்"

"அன்புக்குரிய ஐயாவுக்கு, எனது கணவரை நீண்ட நாள் போதைப்பொருள் அடிமைத்தனத்திலிருந்து மீட்டு எமது குடும்பத்துக்கு புது ஒளியேற்றினீர்கள். நாலும் எனது குடும்பத்தாரும் என்றென்றும் கண்ணீரால் நன்றியாக இருப்போம்"

கனடா அன்பரின் மடல், "ஜாதகத்தில் கூறியது பலிதம்"

"மரியாதைக்குரிய ஐயா, உங்களிடம் ஜாதகம் பார்க்க வந்தபோது வெளிநாடு செல்வதைப் பற்றியே அறியாதிருந்த எனக்கு, இத்தனையாம் திகதி வெளிநாடு செல்வாய் எனக்கூறியது பலித்தது கண்டு ஆச் சரியமும் சந்தோசமும் அடைந்தேன். என்றும் உங்களை மறவேன் என்றும் உங்கள் சேவை தொடரட்டும்."

நீர்கொழும்பு அன்பரின் மடல், "புத்தி பேதலித்திருந்தவர் என்ன கூறுகிறார்"

"மாட்சிமை பொருந்திய ஐயா, சூனியத்தின் பிடியில் சிக்குண்டு புத்திபேதலித்து பலரது ஏளனத்துக்கும் அவமரியாதைக்கும் உள்ளான என்னை பரிபூரண குணமாக்கி மீண்டும் மனிதனாக இயல்பாக வாழச் செய்தமைக்கு கண்ணீரால் என்றும் நன்றி கூறுகிறேன் ஐயா!"

யாழ்ப்பாண அன்பரின் மடல், "அதிசய அக்னி குண்டல பூஜை"

"மதிப்பும் மரியாதையும் கொண்ட ஐயா, என்னையும் எனது குடும்பத்தாரையும் மறவாது மாதந்தோறும் விசேஷமாக நடைபெறும் அக்னிகுண்டல பூஜையின் சக்தி பெற்ற விபூதியை அனுப்பி எம்மை துன்பத்திலிருந்து காத்து வருவதற்கு என்றுமே நன்றி கூறுகிறோம் ஐயா,"

கொழும்பு அன்பரின் மடல், "அச்சொட்டான கைரேகை பலன்"

"மதிப்பிற்குரிய சாமிகங்காதரனுக்கு, எனது கைரேகையின் பலனைக் கொண்டு தெளிவான முறையில் கடந்த கால, நிகழ் கால, எதிர் கால பலன்களை கூறி என்னை ஆச்சரியப்பட வைத்ததுக்கு நன்றி. உங்களது சேவை தொடரட்டும்."

டென்மார்க் அன்பரின் மடல், "அதிசயிக்கத்தக்க முடி வளர்ச்சி"

"அன்புள்ளம் கொண்ட ஐயா! தலையில் முடியுதிர்வதைத் தடுத்து நீண்ட கூந்தலுடன் இவ்வுலகில் நலமுடன் வாழ எனக்கு வழிகாட்டியமைக்கு என்றென்றும் தங்களுக்கும் துர்க்கையம்மனுக்கும் நன்றி கூறுகின்றேன்."

இனியென்ன உங்கள் குறை?, திருமணம் நடக்கவில்லையென்ற அங்கலாய்ப்பா?
வெளிநாட்டு பிரயாணத்தடையா?, காதலில் தோல்விகண்டு விட்டீர்களா?
இன்னும் சகலவற்றுக்கும் உள்நாட்டவர்களும் வெளிநாட்டவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

குறிப்பு : இங்கு தீமையான வேலைக்கு இடமில்லை.

39 வருட மாந்திரீக துறையில் நிலையான சேவை புரியும் உலக மாந்திரீக சக்கரவர்த்தி கௌரவ பேராசிரியர் கருணாகர பூசணம் சொல்லின் செல்வன் டாக்டர் பி.கே. சாமி (J.D.G.A.N)JP

உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி
Dr.P.K.Saamy J.D.G.A. NL JP
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirika
Uchchada Peedam.

கொழும்பில்
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

நுவரெலியாவில்
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 342463
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-342463, 431137,47065- Fax: 344831
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

சுவிஸ் பேர்ண் மாநகரில்.

Suji Jewellery Works

நங்கையர் மனதை கொள்ளை கொள்ளும் நவீன டிசைன்களில் (22 கரட்) தங்க நகைகள் செய்து கொள்ள சுஜி ஜுவல்லரி வேர்க்ஸ் தொடர்புகட்கு:-

K. Thurai
Belpbergstrasse-10
3123. Belp Bern ,
Swiss.
T.P. 0041-31-8191837

உங்கள் பழைய நகைகளை நீங்கள் விரும்பிய புதிய டிசைன்களில் குறித்த தவணையில் செய்து தரப்படும்.

மனோதத்துவ வைத்தியம்

GENARAL PSYCHO THERAPHY

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர்

Dr.P. ஆறுமுகம் அவர்களை.

கொழும்பில் ஜனவரி 20 முதல் 27 வரை

DR.P.ARUMUGAM (S.A.M.P) REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building, Entrance Bankshall Street,
No. 10, Reclamation Road, Colombo 11. T.P. 074-715547, 074-715546 செல்டெல் - 072 664867.

கண்டியிலும் சந்திக்கலாம்

கண்டியில் ஜனவரி 28 - 29 திகதிகளில்

ஆசிரி மெடிக்கல் ஹோல் 45, பேராதெனிய ரோட், கண்டிT.P.074-474156

கல்முனையில் பெப் 02, 03 திகதிகள்.

T.M.M. பாமசி கல்முனை T.P. 067 29329

வவுனியாவில் பெப் 09, 10 திகதிகள்.

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)

VANNI INN 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோவில் ஒழுங்கை, வவுனியா.T.P. 024 22074, 21406.

கடிதத்தொடர்பு : RESIDANT T.P 065 24019
DR.P.ARUMUGAM NO.51/5, KOOLAVADY ROAD, BATTICALOA. SRI LANKA.

ஈராண்டு நினைவஞ்சலி

தோற்றம்
22.06.1934

மறைவு
17.01.2001

அமரர்
திரு.சுப்பையா
செல்வநாயகம்
முன்னாள் பொலிஸ்
உத்தியோகஸ்தர்
பணிப்புலம்
பண்டத்தரிப்பு

வாழ்க்கையை எமக்கு
கலங்கரை விளக்காக்கு விட்டு
நீங்கள் மட்டும் தனியாக எங்கு சென்றீர்கள்!
ஈராண்டு ஆனதாய்யா
நெஞ்சு நீர் பெருக்கெடுத்து எம்
இதயமும் அழுகின்றதே!
ஆயிரம் உறவுகள் இருந்தாலும்
ஐயா என்றழைக்க உறவொன்றில்லை.
நித்திரை தனை மறந்து நித்தமும் அழுகின்றோம்
உங்கள் நினைவால் கலங்கித் துடிக்கும்
மனைவி பரமேஸ்வரி, பிள்ளைகள் மருமக்கள்.

தொடர்பு: 00495215601087
0049 5113362362

தகவல்: மனைவி பரமேஸ்வரி
பணிப்புலம்,பண்டத்தரிப்பு.

|| श्रीविष्णवे परमात्मने नमः ||

கோள மட்டக்களப்பு மஹா மாந்திரீக மருத்துவம்

INTERNATIONAL TRADITIONAL & HOMOEOPATHY MEDICAL & RESEARCH & SERVICE
தூரதேச மந்திர உட்சாடன ஆஹர்ஷ்ண பிராண தியான யோக ஆன்மீக அலைகள்
(Cosmic Vibration) மருத்துவம்



MAHARISH MAHESHYOGI
MY GURU

முனிவர்களின் குருகுல வைத்திய பரம்பரை
(டாக்டர் "மந்திரயோகி")
YOGI. DR. T. MYALVAGANAM
R.H.M.D-D Acu-(இலங்கை) P.I.S.M (இந்தியா)
REGISTERED BY MINISTRY OF HEALTH SLMCNO.061

விதியினால், அல்லது சதியினால் பிரிந்த காதலர்கள், கணவன்-மனைவி குடும்பங்கள் எங்கிருந்தாலும் ஒன்று சேர, வெறுப்பவர்கள் வேண்டியவர்கள் வந்து உறவாக உதவிபெற, தகாத ஆண் பெண் உறவை போதைவஸ்த்தை மறப்பிக்க, தியசக்திகளினால் ஏற்பட்ட திராத உடல் நோய், மன நோய், பிரச்சனைகளைத் தீர்த்து. எத்துன்பங்களும் அணு காமல் உடல், வீடு வளவு, வியாபார நிலையங்கள், வாகனங்களை காவல் செய்ய காதல் திருமணம் பெற்றோர்களின் சம்மதத்துடன் நிறைவேற கல்வி, தொழில், வியாபாரம், வெளிநாட்டுப் பிரயாணம், வேறு காரியத்தடைகள் ஏற்படாமல் நினைத்த செய்கின்ற போகின்ற காரியங்கள் வெற்றிபெற, வேறு நன்மையான காரியங்களுக்கு தீங்கில்லாத தெய்வீக மஹா மாந்திரீக வசிய வைத்தியங்கள் செய்து கொள்ள வரமுடியாதவர்கள்கடல்கடந்த வெளிநாட்டவர்கள் பதிவுத்தபால், பகஸ், தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மனோதத்துவ மாந்திரீக ஆன்மீக மருத்துவ அறிவுரைகளோடு எல்லாமதத்தினர்களுக்குமேற்ற இறைபக்தியோடும் யோகசக்தியோடும் செய்யப்படும். புனித பரிகார பொருட்களை துரித விஷேட தபாலில் பெற்றும் தூரதேச ஆகாய ஆஹர்ஷ்ண மந்திர உட்சாடன பிரான தியான யோக ஆன்மீக அலைகள் மருத்துவ முறைப்படியும் உடன் நிறைவேற்றிக் கொள்கிறார்கள்

GURUSACKTHY CENTER
(INDIAN CLINIC)
KALLADY - BATTICALOA.(P.O.)
(SRI LANKA)

குரு சக்கி நிலையம்
(இந்தியன் வைத்தியசாலை)
கல்லடி மட்டக்களப்பு. P.O
(ஸ்ரீலங்கா)

ரெலிபோன், பக்ஸ்
உள்நாட்டவர்களுக்கு 065-24872காலை 8 இருந்து இரவு 9 மணி வரை
வெளிநாட்டவர்களுக்கு 00946524872 காலை 8 லிருந்து இரவு 11 மணி வரை
கடல் கடந்த வெளிநாட்டவர்களுக்கான விஷேட சேவை.
REGISTERD BY MINISTRY OF HINDU RELIGIOUS & CULTURAL. AFFAIRS
கொழும்பில் மாதத்தில் இருதடவைகள் நேரில் ஆலோசனைகள் பெறலாம்.

சிங்கப்பூரில் திருமணம்

சிங்கப்பூரில் திருமணப்பதிவு செய்து திருமணம் செய்ய வருபவர்களுக்கு சகல வசதியும் தளபாட சாமான்களோடு கூடிய தங்குமிட வசதியும், இலங்கை முறைப்படி கல்யாண ஏற்பாடும் அவர் அவர்கள் வசதிகேற்ப செய்து தரப்படும். இலவச விமானநிலைய வாகன வசதி, இலவச காலை உணவு, சலுகை கட்டணத்தில் வாடகை கார்.

மேலதிக விபரத்திற்கு:-

LINGAM WEDDING SERVICE
0, Anson Road # 15-14 International Plaza, Singapore. 079903
Tel: Appu, கை தொலைபேசி எண்:
அப்பு, 00,65 97514941 Tel. Fax:- 0065 2857494.
E.mail: Sakun @Singnet Com.Sg

ஆரோக்கிய வாழ்வுக்கோர் ஆயுர்வேத இயற்கை மருத்துவம்

சுவிஸ் நாட்டின் இயற்கை வைத்தியர் சங்கம் (NVS), மாற்றீட்டு மருத்துவர்கள் சங்கம் (EMR) ஆகியவற்றின் அங்கீகாரம் பெற்று பின்வரும் வைத்திய முறைகள் கீழுள்ள முகவரியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

* ஆயுர்வேத மருத்துவ ஆலோசனைகள்
* ஆயுர்வேத 'தெரப்பி' முறைகள்
* ஏழுநிலை மசாஜ் (முதுகு வலி)
* ஒற்றைத்தலைவலி மசாஜ்
* பிராணசக்தி மூலம் சிகிச்சை
* கிசு உப்பு மருத்துவம்
* அதிர்வு முறையிலான சீன மருத்துவம் (அலர்ஜி)

அனேகமான மருத்துவக் காப்புறுதி நிறுவனங்கள் இவற்றுக்கான செலவினை ஏற்றுக்கொள்கின்றன. (பெண்களுக்கான தனி மருத்துவ பிரிவும் உண்டு)

தொடர்புகளுக்கு:- Dr.இளங்கோ ஏரம்பமூர்த்தி (ஆயுர்வேத இயற்கை வைத்தியர்)
Dip.in Ayurvedischer Medizin, A.Mitglied NVS, Praxis Ayurveda Siddha, Bellevuestr.12
3095 Spiegel b.Bern, Switzerland

Tel.031 9742021 Nat.0764112021
Fax. 031 9742024

அலசுவது-இராஜதந்திரி

விரிவடையும் நல்லெண்ணம்!

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவு முக்கியஸ்தர் சு.ப.தமிழ்ச் செல்வன் வன்னியின் மல்லாவிப் பிரதேசத்தில் விரிவான பத்திரிகையாளர் மகாநாடொன்றைக் கடந்த வாரம் நடத்தியிருந்தார்.

உள்நாட்டு, மற்றும் வெளிநாட்டு ஊடகவியலாளர்களூடாக இச் செய்தியாளர் மகாநாடு குறிப்பிடத்தக்களவு முக்கியத்துவத்தைப் பெற்றிருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய பாராளுமன்ற அரசு அமைக்கப்பட்டதையடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகள் ஒருமாதகால யுத்த நிறுத்தத்தை அறிவித்தனர். இதன் பின்னர் அந்த ஒருமாதகால யுத்த நிறுத்தத்தை தற்போது மேலும் ஒரு மாதகாலம் நீடித்துள்ளனர்.

புதிய ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் பாராளுமன்ற ஆட்சியைப் பொறுப்பேற்ற பின்னர் மல்லாவியில் தமிழ்ச்செல்வன் நடத்திய முதலாவது செய்தியாளர் மகாநாடு தமிழீழ விடுதலைப் புலிகளது தற்போதைய நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தியிருந்தது.

புலிகளது அரசியல் பிரிவைச் சேர்ந்தவர் என்ற ரீதியில் தமிழ்ச் செல்வனே பெரும்பாலும் தமது தரப்பின் கருத்துக் கண்ணோட்டங்களை வெளியிடுபவராக இருந்து வருகிறார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தலைவர் வே.பிரபாகரன், ஊடகத்துறையினர் விடயத்தில் மிக அவதானமாகவே நடப்பவர். விரல்விட்டு எண்ணக் கூடியளவு பேட்டிகளை மட்டுமே அவர் இதுவரை காலமும் வழங்கியுள்ளார். அத்துடன் குறிப்பிட்ட சில செய்தியாளர்களை மட்டுமே அவர் சந்தித்துமிருக்கின்றார்.

இப்பத்திரிகையாளர்களில் அண்மையில் 'குருதித் தீவு' என்ற நூலை ஆங்கிலத்தில் வெளியிட்ட அனித்தா பிரதாப் என்ற இந்தியப் பத்திரிகையாளர் முக்கியமானவர். இவர் மட்டுமே பல்வேறு சந்தர்ப்பங்களில் திரு.பிரபாகரனுடன் பேட்டிகளை எடுத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

இது தவிர ஆண்டு தோறும் நவம்பர் மாத இறுதியில் மாவீரர் வாரப் பூர்த்தியின்போது தமது நிலைப்பாடுகள் தொடர்பாக நீண்டதொரு உரையை நிகழ்த்துவதை திரு.பிரபாகரன் வழக்கமாகக் கொண்டு வருகிறார்.

புலிகளது அரசியல் பிரிவு முக்கியஸ்தர் சு.ப.தமிழ்ச் செல்வன் மல்லாவியில் ஊடகத்துறையினருடனான சந்திப்பின்போது தெரிவித்த கருத்துக்கள் வடக்கு-கிழக்குப் பிரச்சனைக்கான அரசியல் தீர்வென்பது மிக நீண்ட பயணமாக இருக்கின்றதென்பதையே வெளிப்படுத்தியிருந்தது.

சில பத்திரிகையாளர்கள் நுனிப்புல்மேய்ந்தது போன்ற கேள்விகளையும் கேட்டிருந்தனர். அவர்களது சில கேள்விகள் தற்போது தோன்றியுள்ள நல்லெண்ணச் சூழல் இனப்பிரச்சனைக்கான தீர்வை கைக்கெட்டிய தூரத்தில் கொண்டு வந்துள்ளது என்ற தோரணையில் அமைந்திருந்ததையும் அவதானிக்க முடிந்தது.

கடந்த காலங்களில் தோன்றிய நல்லெண்ணச் சூழ்நிலைகளில்கூட யுத்த நிறுத்தங்கள் ஏற்பட்டன. அத்துடன் அத்தியாவசியப் பொருட்கள்கூட வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தன.

ஆனால் முன்னைய சமரச முயற்சிகள், யுத்த நிறுத்தம் மற்றும் அத்தியாவசியப் பொருட்களை வடக்கு-கிழக்குப் பிரதேசங்களுக்கு அனுப்பிவைப்பது வரை மட்டுமே முன்னேறியிருந்தனவே தவிர, அரசியல் ரீதியாக எவ்வித பேச்சுக்களும் காத்திரமாக ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்களைப் பொறுத்தவரை இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு உணவு, மருந்துவகை, எரிபொருள் போன்ற பொருட்கள் அனுப்பிவைக்கப்படவேண்டியது அத்தியாவசியமானதாகின்றது.

ஆனால் உணவுக்காகவும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களுக்காகவுமே வடக்கு-கிழக்கில் கடந்த இருபது வருடகாலமாக யுத்தம் இடம் பெற்று வருகிறது என்ற அபிப்பிராயம் ஏற்படாமல் இருக்க வேண்டியதே இன்றியமையாததாகின்றது.

வடக்கு-கிழக்குப் பிரதேசங்கள் மிகவும் வளமான தரையமைப்பையும், கடல் வளத்தையும், கொண்டவை. ஆயினும் வடக்கு-கிழக்குப் பிரதேசங்களில் இடம்பெற்று வருகின்ற யுத்தம் இப்பிரதேசங்களின் அனைத்து மூலவளங்களையும் முடக்கிவிட்டுள்ளது.

மிகவும் உன்னதமான நிலையில் கல்வி, தொழில், பொருளாதாரம், என்பவற்றில் சிறப்புற்றிருந்தவர்களே வடக்கு-கிழக்கு மக்கள்.

ஆனால் பேரினவாதம் தலையெடுக்க ஆரம்பித்ததும் வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் அரசியல் உரிமைகள் ஒன்றன்பின் ஒன்றாகப் பறிபோகத் தொடங்கின. இறுதியாக யுத்தம் என்ற ரீதியில் அவர்களது உயிர்வாழும் உரிமையும் கேள்விக்குறியாகியிருந்தது.



பகுதிகளிலுள்ள அப்பாவிப் பொது மக்களே அத்தியாவசியப் பொருட்களின்மையால் மிகுந்த பாதிப்பை எதிர் நோக்கியிருந்தனர்.

இத்தடவைத் தைப் பொங்கலையடுத்து பிரதமர் ரணிலின் அமைச்சர்கள் பலர் முன்னிலையில் வன்னியில் தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்குப் பொருட்கள் அனுப்பிவைக்கப்பட்டன.

இது தவிர புனர்நிர்மாணத்துறை அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கே சென்று பொங்கல் பண்டிகையையும் கொண்டாடியிருந்தார்.

ஏறத்தாள இது போன்ற நிகழ்வுகளே ஜனாதிபதி சந்திரிகாவின் பொதுஜன ஐக்கிய முன்னணி அரசாங்கம் ஏழுவருடங்களுக்கு முன்னர் பதவிக்கு வந்தபோது கூட இடம்பெற்றிருந்தன.

சமாதானம் குறித்து ஏகப்பட்ட எதிர்பார்ப்பு நிலவியது. யுத்த நிறுத்தம் ஏற்படுத்தப்பட்டது. இருந்தபோதிலும் வடக்கு-கிழக்கு யுத்தம் எவ்வகையிலும் தளர்வடைந்துவிடாது, அரச தரப்புக்கு மேலும் சவால்களை ஏற்படுத்துவதாகவே விளங்கியிருந்தது.

வடக்கு-கிழக்கின் இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அத்தியாவசியப் பொருட்களை அனுப்பிவைப்பது தொடர்பாகப் போடப்பட்ட தடை, தமிழீழ விடுதலைப் புலிகளையே கருத்தில் கொண்டதாக அமைந்திருந்தது.

ஆனால் தமிழீழ விடுதலைப்புலிகள் தொடர்ந்து பலமான நிலையிலேயே இருந்ததுடன், அவ்வப்போது வியப்பைத் தரக்கூடிய விதத்திலான தாக்குதல்களையும் மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில் இராணுவக்கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாழும் மக்களின் அத்தியாவசியப் பொருட்களின் தேவை மிகவும் அவசியமானதாகின்றது.

இதனை உணர்ந்தே அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களை அனுப்பிவைப்பதற்கான தடையை நீக்கியுள்ளது.

இதனை வரவேற்கும் அதேவேளை, இதனை மேலும் விரிவுபடுத்தி, இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளுக்கு அனுப்பிவைக்கப்படும் பொருட்களின் பட்டியலை மேலும் விரிவுபடுத்தி, அரசாங்கம் சமரச முயற்சிகளை முன்னெடுக்கவேண்டும்.

இதனை விடுத்து, தமிழீழ விடுதலைப் புலிகளை மேலும் பலவீனப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் செயற்படுமானால் அது சமாதானத்துக்கு மேலும் பாதகமாகவே அமையும்.

அதேவேளை, தமிழீழ விடுதலைப் புலிகளும் தமது கட்டுப்பாட்டுப் பகுதிகளில் மனித உரிமைகளை மதிக்கவேண்டும். அரசியல் ரீதியாக மாற்றுக் கருத்துக்களை முன்வைக்கும் தமிழ் அமைப்புக்களை அழிக்கும் நோக்கில் செயற்படுவதை நிறுத்தவேண்டும்.

இவ்வாறான நிலைமைகள் ஏற்படுமானால் தமிழ் மக்களின் ஆதரவு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மேலும் அதிகரிக்கும்.

இந்நிலையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் தனது நிலைப்பாட்டை மேலும் விரிவுபடுத்தி, சர்வதேச சமூகத்தினதும் தமிழ் மக்களினதும் நம்பிக்கையை வென்றெடுக்கவேண்டும்.

இதனை விடுத்து, தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளை மறுத்து, தனிநாட்டுக் கோரிக்கையை முன்வைத்து, தமிழ் மக்களின் ஆதரவை இழக்கும் நிலைமை ஏற்படுமானால் அது தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு மிகப்பெரும் பின்னடைவாகவே அமையும்.

இந்நிலையில் சமரச முயற்சிகள் தொடர்பான நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதேசமயம், ஜனாதிபதி சந்திரிகா புதிய ஆட்சியாளர்களை எச்சரித்து வருபவராகவும் இருக்கின்றார்.

அத்துடன் ஜே.வி.பி என்ற மக்கள் விடுதலை முன்னணியினர் வீதியில் இறங்கி தமிழீழ விடுதலைப் புலிகளுடனான சமரச நடவடிக்கைகளுக்கெதிரான பிரசாரங்களை ஆரம்பித்துள்ளனர்.

இந்நிலையில் எதிர்காலத்தில் சமரச முயற்சிகள் மேற்கொள்ளப்படும்போது, அதனைக் குழப்பி விடக்கூடிய சக்திகளும் விழிப்பாகவே இருப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க முக்கியஸ்தர் சு.ப.தமிழ்ச்செல்வன், மல்லாவியில் ஊடக வியலாளர்கள் முன்பாக வெளியிட்ட கருத்துக்களில், தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை முதன்மையானதாக விளங்கியிருந்தது.

இக் கோரிக்கையை விடுத்திருப்பதன் மூலம் எதிர்காலப் பேச்சுவார்த்தைகளில் எவ்வித கட்டுப்பாடுகளுமற்ற நிலையில் எல்.ரி.ரி.ஈ.யினர் ஈடுபட விரும்புவதையே உணரமுடிகிறது.

தமிழீழ விடுதலைப் புலிகளை வடக்கு-கிழக்குப் பிரச்சனைத் தீர்வுக்கான பேச்சு வார்த்தைகளை நடத்துவதற்கான ஏக பிரதிநிதிகளாக கடந்த பொதுத்தேர்தலில் போட்டியிட்ட நான்கு தமிழ்க் கட்சி கூட்டமைப்பு அறிவித்திருந்தது. அத்துடன் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் அத் தமிழ்க் கட்சிக் கூட்டமைப்பு முன்வைத்திருந்தது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தடை நீக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கை தமிழ் மக்கள் மத்தியில் மட்டுமன்றி, சர்வதேச சமூகத்திடமும் புலிகள் மீதான தடையைப் போடுமாறு பிரசாரம் செய்திருந்தது.

இருந்தபோதிலும் சர்வதேச சமூகத்தின் தற்போதைய நிலைப்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளை முற்றிலும் நிராகரிக்காததாகவே இருக்கின்றது.

அண்மையில் கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதுவர் ஆஷ்லி வில்ஸை யாழ்ப்பாணத்திலிருந்து வந்த பல்கலைக்கழக மாணவர்கள் குழுவொன்று சந்தித்திருந்தது.

அச்சந்திப்பின்போது அமெரிக்க தூதுவர் ஆஷ்லி வில்ஸ் தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கம் மீதும் அதன் தலைவர் வே.பிரபாகரன்மீதும் தமக்கு நம்பிக்கை ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கையின் வடக்கு-கிழக்குத் தமிழ் மக்களது கோரிக்கைகள் நியாயமானவை என்பதையும் திரு.ஆஷ்லி வில்ஸ் ஏற்றுக் கொண்டிருந்தார்.

இந்நிலையில் சமரச முயற்சிகளில் இறங்கியுள்ள புதிய ஆட்சியாளர்கள் ஒரு முற்று முழுதான அரசியல் அணுகுமுறையைக் கையாளுவதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான அழுத்தங்களை நீக்குவது பற்றியும் பரிசீலிக்க வேண்டியுள்ளது.

மீளவும் ஒரு யுத்தம் ஏற்படுவதை எத்தரப்பினரும் விரும்புவதாக இல்லை. இரண்டாவது தடவையாகவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இம்மாதம் முதல் அடுத்த மாதம் வரை நீடித்துள்ள யுத்த நிறுத்தத்துக்கு அரச தரப்பும் சாதகமான முறையில் பதிலளித்துள்ளது.

இதுவோர் வரவேற்கத்தக்க நடவடிக்கையாகவும் சமரச முயற்சிகள் குறித்து கூடுதல் நம்பிக்கைகளை ஏற்படுத்துவதாகவும் இருக்கின்றது.

அடுத்த கட்ட நடவடிக்கையாக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை இருதரப்புக்குமிடையே கொண்டு வருவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இத்தகைய நல்லெண்ண நடவடிக்கைகள் மேலும் விரிவடைந்து யுத்த அச்சுறுத்தலற்ற ஒரு முற்று முழுதான அரசியல் அணுகுமுறை தோற்றம் பெற வேண்டுமென்பதே அனைவரதும் எதிர்பார்ப்பாகவிருக்கின்றது.

அதிரடி அய்யாத்துரை

வழிதவறி ரெண்டெழுத்தாரின்ர பகுதிக்குப் போன காக்கிச்சட்டைக்காரர் ஆண்டவன் புண்ணியத்தில உயிரோடு மீண்டு வந்திருக்கினம். கண்ணை முடிக்கொண்டு பாலத்தாலை ஜீப்பை விட்டுப் போட்டு பொடியன்கள் ஆயுதத்தோடு சுத்தி நிக்கேக்கதான் திரு திரு வென்று விழிச்சவையாம். போர் நிறுத்தம் என்றதால உடனே உயிர் போயிடாது எண்டு நம்பினோம். ஆனாலும் நெஞ்சுக்குள்ள திக் திக் என்று அடித்துக்கொண்டது. தங்களின்ர கெட்டித் தனத்தை சிரித்துக்கொண்டே சொல்லியிருக்கிறார் மீண்டுவந்த ஒரு பொலிஸ் அதிகாரி. காக்கிச் சட்டை களோட கட்டுப்பாடற்ற பகுதிக்கு வழிதவறிப்போறளவுக்கு புத்திகெட்டுப் போன அதிகாரிகளை எல்லாம் வச்சுக் கொண்டு யுத்தம் நடத்துற இந்த நாட்டு பாதுகாப்புத் துறையை கடவுள்தான் காப்பாத்தோணும்.

குடாநாட்டுக்குப்போன புனர்வாழ்வு அமைச்சரை முதலில வர்த்தகப் புள்ளிகள் சந்திச்சு தங்கட பிரச்சினையை விலாவாரியா விபரிச்சினம். அமைச்சரை கோயிலுக்குக் கூட்டிக்கொண்டுபோய் அத்தனை சாமியின்ரை நலன்களையும் விசாரிக்க வழிசெய்தினம். ஆனால் யாழ்ப்பாணத்தில அடிப்படை வசதிகள் கூட இல்லாமல் இருக்கிற அகதி மக்களை கண்டு கொள்ளாமல் விட்டிட்டினம். இவையின்ர பேச்சைக் கேட்டு வழிநடந்தால் தமிழ் மக்களுக்கு ஏதும் நல்லது செய்ய நினைச்சாக்கூட ஜயலத்தால் அது முடியாமல் போகும். மனுஷன் கொஞ்சம் விழிப்பாக இருப்பாராக!!

குடாநாட்டு கோயில்களில இருக்கிற சீருடைக்காறரை வெளியேத்த வேண்டும் என்று கொழும்பில டி.வி.க்கு பேட்டி கொடுக்கிறார் நம்மட கலாசார அமைச்சர். ஆனால் குடா நாட்டுக்குப்போன புனர்வாழ்வு அமைச்சரின் பாதுகாவலர்கள் சப்பாத்துக் கால்களுடன் கோயிலுக்குள் ஒடித்திரிஞ்சதை ஒரமாக இருந்து ரசிச்சுப்போட்டு இங்கு வந்து டி.வி.யில பக்திப் பரவசத்தை அள்ளிக் கொட்டுறார். மகேஸ்வரா உன்ர பிஸினஸ் புத்தியை கடவுளிடமுமா...?

ஜனநாயகக் கட்சியின்ர பேரைச் சொல்லி காசு பிடுங்கப் பார்த்த ரெண்டுபேர் கடைசியில் சீருடைக்காராிடம் சிக்கிக் கொண்டினம். பம்பலப்பிட்டியில் நடந்த இந்த விளையாட்டில சம்மந்தப்பட்ட ஒருத்தர் பிரிட்டிஷ் பாஸ்போர்ட் வைச்சிருக்கிற நம்நாட்டு ஆசாமியாம். லீவுல வந்து தன்ர கைவரிசையைக் காட்டி கொஞ்சம் காசோட பிரிட்டன் போக நினைச்சிருக்கிறார் போல கிடக்கு. கடைசியில வி.ஐ.பி. கலியாணம்போல் போலீஸ் ஸ்கொட்டுடன் புதுமணத் தம்பதிகள் ஊர்வலம் போனவை.

இந்தப் பொன்மொழிக்குரியவரின் 9வது நினைவுநாள் கடந்த 16ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. யாரென்று சிந்தியுங்கள்.

உலகில் எல்லார் கருத்தையும் கேள்.
சிந்தி! நன்றாகச் சிந்தி!! நீயாகச் சிந்தி!!!
யாரும் உனக்காகச் சிந்திக்கமாட்டார்கள்.

கொடுத்த கடனை மறந்துவிடுங்கள் உலக நாடுகளிடம் கெஞ்சுகிறார் ஆப்கானின் புதிய தலைவர்

கொடுத்த கடனை மறந்து விடும்படி உலக நாடுகளை கேட் கிறார் ஆப்கான் தலைவர் ஹமித் கர்சாய். கடந்த 23 ஆண்டுகளாக நடந்த சண்டையில் ஆப்கான் சின்னா பின்னமாகியுள்ளது. முன்பு ஆண்ட தலிபான் அரசு அனைத்து வங்கி களிலிருந்தும் பணத்தையெல்லாம் சுருட்டிக்கொண்டு தலைமறைவாகி விட்டது. தற்போது பதிலாகப் பதவி ஏற்றுள்ள கர்சாய் அரசு கையில் காசு ஏதும் இல்லாமல் ஆட்சி நடத்தி வருகிறது. இதற்கிடையே அமெ ரிக்கா, பிரிட்டன், ஜப்பான், சவதி அரேபியா, ஐரோப்பிய கூட்டமைப்பு நாடுகள் உள்ளிட்ட 50க்கும் மேற் பட்ட நாடுகள் ஆப்கானுக்கு நிதி யுதவி செய்ய முன்வந்துள்ளன.

இதற்கான கூட்டம் ஜப்பானில் நடந்தது. இந்த கூட்டத்தில் கலந்து



கொண்ட நாடுகள் ஆப்கானிஸ்தா னுக்கு 10 ஆண்டு காலத்தில் 500 கோடி டொலர் வழங்க முன்வந்துள் ளன. சவுதி அரேபியா முதல் தவணை யாக 98 கோடி ரூபாய் அளிக்க ஒப்புக்கொண்டுள்ளது.

"ஆப்கான் மக்கள் பல ஆண்டு களாக யுத்தத்தை தவிர வேறெதையும் பார்க்கவில்லை. வறுமையிலும் அறியாமையிலும் உள்ள அவர்களின் முன்னேற்றத்திற்கு உலக நாடுகள் உதவ வேண்டும். ஆப்கான் மக்களுக் காக இரக்கப்பட்ட நாடுகள் கூட, தலிபான் ஆட்சியின் காரணமாக எந்த உதவியையும் செய்ய முடிய வில்லை.

அடுத்த நிதியாண்டு பட்ஜெட் டுக்கு 10 ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படுகிறது. ஆப்கான் ரிசர்வ் வங்கியை மீண்டும் செயல்பாட்டுக்கு கொண்டு வரக்கூட தற்போது நிதி யில்லாததால் உலக நாடுகளைத் தான் நம்பியிருக்கிறோம். முந்தைய ஆட்சியினர் ஆப்கான் சார்பில் வாங் கிய கடன்களை ரத்து செய்து விடுங்கள். உலக வங்கி, சர்வதேச நிதியம் போன்ற நிறுவனங்கள் ஆப் கானுக்கு புத்துயிர் ஊட்ட முயற் சிக்க வேண்டும்." என்று ஜப்பான் மாநாட்டில் வேண்டுகோள் விடுத்தார் கர்சாய்.

இப்படியும் சொன்னார்கள்

★ புலிகள் இப்போது பேச்சுக்கு வருகிறார்கள் என்றால் அதற்கு காரணம் உண்டு. அமெரிக்காவில் உலக வர்த்தக நிலையம் தாக்கி அழிக்கப்பட்டதனாலும், அமெரிக்காவின் இராணுவத் தலைமையகம் தாக்கப்பட்டதாலும் புலிகள் அச்சமடைந்துள்ளார்கள். அதன் காரண மாகவே பேச்சுக்கு வருகிறார்கள்.

ஜனாதிபதி சந்திரிக்கா.

★ அமெரிக்காவில் நடந்த தாக்குதலின் எதிரொலியாக எமது இயக்கத்தின் மீது பெரும் நிர்ப்பந்தங்கள் பிரயோகிக்கப்பட்டன என்பதை நிராகரிக்கிறேன். அரச பயங்கரவாதத்தைப் பிரயோகிக்கும் ஒரு போக்கிரி அரசாங்கத்துக்கு எதிராகப் போராடும் ஒரு விடுதலை அமைப்பு நாம் என்ற உண்மை ஒரு நாள் தெரியவரும்.

புலிகளின் அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தமிழ்ச் செல்வன்.

★ அமரர் குமார் பொன்னம்பலத்தின் கொலை ஒரு சதியாகும். தனது பேச்சு மற்றும் எழுத்துக் கான சுதந்திரத்தை பூரணமாகப் பயன் படுத்தியமையால் அவர் கொல்லப்பட்டார். அன்னாரின் கொலைபற்றி பாரபட்சமற்ற விசாரணை நடத்தப்பட வேண்டுமென கோருகிறோம்.

-திருமலை-பா.உறுப்பினர்-இரா.சம்பந்தன்.

★ குமார் பொன்னம்பலம், நிமல ராஜன் போன்றவர்களின் கொலைச் சம்பவங்கள் மட்டுமன்றி நீலன் திருச் செல்வம், நிம லன் சௌந்தரநாயகம் போன்ற அரசியில்வாதிகளினதும், செழியன் பேரின்ப நாயகம், அற்புதராஜா போன்ற ஊடகவியலாளர்களினதும் படுகொலை கள் பற்றிய மர்ம முடிச்சுக்களும் அவிழ்க்கப்பட வேண்டும்.

யாழ்.பா.உ.டக்ளஸ் தேவானந்தா.

★ 2003ல் ஒரேயொரு தமிழ்க்கட்சி மாத்திரமே இருக்கும். அது தமிழ் இனத்தின் ஒற்றுமையின் சின்னமாகத் திகழும். புத்திஜீவிகளின தும் ஊடகவியலாளர்களினதும் அயராத முயற்சியினால் உருவாக்கப் பட்ட தமிழ் தேசிய கூட்டமைப் பின் உச்சநிலை அதுவாகவே இருக்கும்.

மட்/பா.உறுப்பினர் ஞா.கிருஷ்ணபிள்ளை (வெள்ளிமலை)

★ மக்களின் விருப்பத்திற்கிணங் கத்தான் தமிழ் தேசிய கூட்டமைப்பு உருவாக்கப்பட்டதாக இதன் தலைவர்கள் கூறுவது உண்மையாக இருந்தால், அதனை வலுப்படுத்த வேண்டியதும், செயற்பட வைப்பதும் இவர்களது கடமையாகும். ஆனால் தேர்தல் முடிந்து இரு மாதகாலம் கடந்துவிட்ட பின்பும், கூட்டமைப்பை பலப்படுத்திக் கொள்ள எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை.

-சுரேஷ் பிரேமச்சந்திரன் (ஈ.பி.ஆர்.எல்.எப்)

★ எதிர்வரும் உள்ளூராட்சித் தேர்தலை வடக்கு கிழக்கில் அரசு தாமதமின்றி நடத்துவதுடன், புலிகள் இயக்கத்தின் ஒத்துழைப்புடன் அவர்களின் கட்டுப் பாட்டில் இருக்கும் பகுதிகளில் வாக்குச் சாவடி களை தேர்தல் ஆணையாளர் அமைக்க வேண்டும்.

-பவ்பரல் அமைப்பு அரசாங்கத்திடம் பகிரங்க வேண்டுகோள்.

★ இனப்பிரச்சனை தீர்வுபற்றிய பேச்சு வார்த்தை நடைபெற்று நிரந்தரத் தீர்வு காணப்படும்வரை உள்ளூராட்சித் தேர்தல்கள் வடக்கு-கிழக்கு மாகாணத் திற்கு அவசியமற்றவை. பேச்சு வார்த்தைகள் முடியும் வரை இத் தேர்தலை அரசாங்கம் ஒத்தி வைக்க வேண்டும்.

-ரணிலிடம் தமிழ் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதிகள்

★ தமிழ் மக்களும் விடுதலைப் புலிகளும் ஏற்றுக் கொள்ளக் கூடிய வகையில், திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில், அரசும் எதிர்க் கட்சியும் இணைந்து, நல்லதோர் தீர்வை முன்வைக்காவிட்டால், நாம் அதனை ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டோம்.

குமார் நினைவுதினக் கூட்டத்தில் பா.உ.இரா.சம்பந்தன்.

★ இப்பேச்சு வார்த்தைகள் எந்த முடிவைப் பெறுவதற்காக நடத்தப்படுகின்றன என்பது குறித்து எமக்கு எதுவும் தெரியாது. பிரச்சனைக்குள்ளான மக்களுக்கு உரிமை வழங்குவதைத் தவிர்த்து இனவாதத் தலைவர்களுக்கு கப்பம் கொடுப்பதே இப்பேச்சு வார்த்தை களின் நோக்கம்.

ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா.

கொல்கத்தாவில் அமெரிக்க மையம் மீது தீவிரவாதிகள் தாக்குதல் 4 பொலிசார் பலி

கொல்கத்தாவில் உள்ள அமெரிக்க தகவல் மையத்தின் மீது தீவிரவாதிகள் கடந்த 22.01.2002 (செவ்வாய்க்கிழமை) அதிகாலை திடீர் தாக்குதல் நடத்தினர். இதில் அங்கு பாதுகாப்புக்கு நின்றிருந்த 4 பொலீசார் கொல்லப்பட்டனர்.

கொல்கத்தாவில் நடந்துள்ள முதல் தீவிரவாதிகள் தாக்குதல் இதுதான்.

கொல்கத்தாவின் மையப் பகுதி யில் அமைந்துள்ள ஜவஹர்லால் நேரு சாலையில் பார்க் தெருவில் அமெரிக் கத் தகவல் மையம் உள்ளது.

சமீப காலமாக இந்த மையத் துக்கு மிகப் பலத்த காவல் போடப் பட்டுள்ளது. இரவில் காவலுக்கு நின்றிருந்த பொலீசார் காலையில் காவல் பணியை மேற்கொள்ள இருந்த பொலீசாரிடம் துப்பாக்கி களை ஒப்படைப்பதற்காக வரிசை யில் நின்றிருந்தனர்.

காலை 6.30 மணிக்கு இந்தப் பணி நடந்து கொண்டிருந்த போது அங்கு 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 தீவிரவாதிகள் திடீரென்று ஏ.கே. 47 ரக துப்பாக்கிகளால் பொலீசார் மீது கண்முடித்தனமாக சுட்டனர்.

இதில் 18 போலீசார் மீது குண்டு கள் பாய்ந்தன. பொலீசார் பதில் தாக்குதல் நடத்துவதற்குள் அவர்கள் மோட்டார் சைக்கிளிலேயே தப்பி யோடி விட்டனர்.

இத் தாக்குதலில் 4 பொலீசார் அந்த இடத்திலேயே இறந்தனர். 14 பொலீசார் மிகப் பலத்த காயமடைந் தனர். அமெரிக்க மையத்தின் பாது காவலர் உட்பட சில பொது மக்க ளும் இதில் காயமடைந்தனர். இதில் பலரது நிலைமை மிக மோசமாக உள்ளது. இவர்கள் அனைவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள் ளனர். திடீர் தாக்குதலால் நிலை குலைந்த பொலீசார் அங்குமிங்கும் ஓடினர். பலர் அங்கு நின்றிருந்த பொலீஸ் வேனின் பின்னால் போய் மறைந்து கொண்டதால் உயிர் தப்பி னர். கிட்டத்தட்ட 54 தோட்டாக்கள் அங்கு சிதறிக் கிடந்தன.

இந்திய குடியரசுத் தினத்திற்கு இன்னும் ஓரிரு நாட்களே இருக்கும் நிலையில் அமெரிக்கத் தகவல் மையத்தில் தீவிரவாதிகள் நடத்திய தாக்குதல் மிகுந்த முக்கியத்துவம் பெறுகிறது.

தீவிரவாதத்துக்கு எதிராக இந் தியா-அமெரிக்கா இடையிலான ஒத் துழைப்பு அதிகரித்து வரும் நிலை யில் இத் தாக்குதல் நடந்துள்ளது.

அமெரிக்க உளவுத் துறையான எப்.பி.ஐயின் இயக்குநர் ராபர்ட் முல்லர் செவ்வாயன்று இந்தியா வந்திருந்தார் என்பதும் குறிப்பிடத் தக்கது.

இராணுவத்தின் திருடன் பொலிஸ்விளையாட்டு

மிலேனியம் சிற்றி வீடமைப் புத் தொகுதியில் ஆயுதங்கள் கைப் பற்றப்பட்டு இராணுவ உளவுப் பிரிவு கப்டன் நிலாம் உட்பட வேறு சிலர் கைது செய்யப்பட்ட சம்பவத்தோடு ஆரம்பித்த இரா ணுவத்திற்கும் பொலிசாருக்கும் இடையிலான முறுகல் நிலை இன்னும் முடிவுக்கு வராத அதே நேரம் இராணுவ உயர் மட்டத்துக் குள் பதவிப் போட்டி தீவிரமடைந் திருக்கிறது. புதிய அரசாங்கம் பதவியேற்றால் ஆயுதப் படைகளுக் குள் முக்கிய பொறுப்புக்களை இலக்கு வைத்திருந்த பலர் அவை கிடைக்காமல் போகவே உள்ளுக் குள் குத்து வெட்டுக்களில் இறங்கி இருக்கின்றனர்.

தற்போது இராணுவத் தளபதி யாக இருக்கும் லெப்டினட் ஜென ரல், லயனல் பலகல்ல பொது.ஐ. முன்னணிக்கு சார்பாக செயல்படு கிறார் என்றும் அவரை கட்டாய ஓய்வில் அனுப்பிவிட்டு புதிய ஒரு வரை இராணுவத் தளபதியாக்க வேண்டும் என்றும் பாதுகாப்பு வட்டாரங்கள் அரசாங்கத்தின் கவ னத்திற்குக் கொண்டு வந்திருப் பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை இராணுவத்தின் முக்கிய பதவிகளில் இருந்த பலர் கடந்த காலங்களில் சேவை நீடிப் புக்கு உட்படுத்தப்பட்டனர். இதில் சிலரது சேவைக்காலம் திடீரென முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இலங்கை இராணுவத்தின் பிரதம செயற்பாட்டு அதிகாரியான பிரிகேடியர் நீல் டயஸின் சேவை இவ்வருடம் ஏப்ரல் மாதம் 6ம் திகதிவரை நீடிக்கப் பட்டிருப்ப தாக கடந்த வாரம் அவருக்கு பாதுகாப்பு அமைச்சினால் அறி விக்கப்பட்டது. இதன் பிரகாரம் அவர் இராணுவ தலை மையகத் திற்குச் சென்று தனது பணியைத் தொடர்ந்தார்.

ஆனால் கடந்த வருடம் நீல் டயசுடன் ஒரேநேரத்தில் சேவை நீடிப்பு செய்யப்பட்ட வேறு 6 இரா ணுவ அதிகாரிகள் தொடர்பில் இதற்கு மாறான நடைமுறை கடைப்பிடிக்கப்பட்டுள்ளது. இந்த 6 அதிகாரிகளினதும் பணி கடந்த டிசம்பர் 31ம் திகதியுடன் முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள் ளது.

பாலித்த பொன்னாண்டோ, பந்துல ரணசிங்க, சமரதுங்க, பி.எஸ்.எல்.திலேரா மற்றும் சார்ல்ஸ் ஆகிய பிரிகேடியர் களின் சேவையே இவ்வாறு முடிவுக்கு கொண்டுவரப்பட்டுள்ளது. இதி லுள்ள விசேட தன்மை யாதெ னில் இந்த அதிகாரிகளுள் 4 பேர் 50 வயதுக்கும் குறைவானவர் கள். குறிப்பிட்ட பிரிகேடியர் தரத்தில் பதவியில் இருக்கக் கூடிய உச்சக்கட்ட கால வரம்பு கடந்ததா லேயே இவர்கள் ஓய்வில் அனுப்பப் பட்டதாக தெரிவிக்கப்பட்ட போதி லும் பிரிகேடியர் நீல் டயஸ் விடயத் தில் இதற்கு மாறான கொள்கை கடைப்பிடிக்கப்பட்டிருப்பதால் இராணுவத்திற்குள் நடக்கும் கதிரை சண்டையில் விளைவாகவே இந்த சேவை ஒய்வுகள் நடை பெற்று இருக்கலாமென நம்பப்படு கிறது.

இத்தகைய நிலைக்கு தீர்வாக சேவைக் காலத்தை அடிப்படை யாகக் கொள்ளாமல் வயதை அடிப் படையாகக் கொண்டு சேவை நீடிப்பை தீர்மானிக்குமாறு ஆயுதப் படைகளின் தளபதிகளால் பாது காப்பு அமைச்சுக்கு ஆலோசனை கூறப்பட்டிருப்பதாகத் தெரியவரு கிறது. எவ்வாறெனினும் கடந்த அரசாங்கத்தின் காலத்தில் ஜனாத பதி சந்திரிக்கா குமாரதுங்க பாது காப்பு அமைச்சராக இருந்த போது சேவை நீடிப்பு வழங்கிய பலர் தற்போது ஐ.தே.க. அர சாங்கத்தினால் கட்டாய ஓய்வில் அனுப்பப்படுகின்றனர் என்ற கதையே பாதுகாப்பு வட்டாரங்களுக்குள் பரவலாக அடிபடுகின்றது.

இதற்கிடையில் தமது உயர் பதவிகளை பாதுகாத்துக் கொள்ள வும் தற்போதைய பதவிகளை உயர்த்திக் கொள்ளவும் முயற்சி செய்யும் பல உயர்மட்ட இரா ணுவ அதிகாரிகள் முன்னைய அரசாங்கக் காலத்தில் உயர் பதவிகளை வகித்த படை அதிகாரி கள்மீது புதிய பல குற்றச்சாட்டுக் களைச் சுமத்தி அவர்களை இந்த அரசாங்கத்திற்கு எதிரானவர் களாக காண்பிக்க தீவிர பிரயத் தனம் மேற்கொள்வதாக கூறப் படுகின்றது. இந்த முயற்சியின் ஒரு கட்டமாக முன்னைய ஆட்சிக் காலத்தில் ஆயுதக் கொள்வனவு களில் பாரிய ஊழல் இடம்பெற் றிருப்பதாகவும் அதற்கு தற்போது பதவியில் இருக்கும் பல முக்கிய இராணுவ அதிகாரிகளும் உடந் தையாக இருந்துள்ளனர் எனவும் கூறி அவர்களுக்கு எதிராக விசார ணை செய்யுமாறு அரசாங்கத்தை வலியுறுத்த ஆரம்பித்துள்ளனர்.

இராணுவத்துக்குள் இருக்கும் ஊழல் பேர்வழிகளை அடை யாளம் காட்ட அதே இராணுவத் துக்குள் இருக்கும் வேறு சிலர் 'பொலிஸ் வேலை' பார்த்து வரு கின்றனர். இந்த திருடன் பொலிஸ் விளையாட்டால் இராணுவத் தலை மையகம் கூடாகி வருகின்றது.

இதேவேளை மிலேனியம் சிற்றி வீடமைப்புத் தொகுதியில் ஆயுதங்களுடன் கைது செய்யப் பட்ட இராணுவ அதிகாரி அரசி யல் காரணங்களுக்காகவே தான் கைதுசெய்யப்பட்டதாகவும் தன்மீது சுமத்தப்பட்ட அனைத்துக் குற்றச் சாட்டுக்களும் போலியானவை யென கூறி பொலிசாருக்கெதி ராக அடிப்படை உரிமை மீறல் வழக்கொன்றை தாக்கல் செய்துள் ளார்.

அரசியல்வாதிகளையும் அரவணைத்தபடி சங்கிலித்தொடராக நீளும் டாக்டர் பிரகாஷின் செக்ஸ் விவகாரம்

தமிழகத்தில் செக்ஸ் டாக்டர் பிரகாஷ் கைது செய்யப்பட்டு ஒரு மாதம் கடந்து விட்ட நிலையிலும் கூட அவனது நீலப்பட விவகாரம் ஏற்றிவிட்ட சூடு இன்னும் அங்கு தணியவில்லை. நாளுக்கு நாள் இந்த வக்கிரத்துடன் தொடர்பு பட்ட புதியவர்களின் பெயர்கள் வெளிவந்த வண்ணமுள்ளன.

இப்போது இது விடயத்தில் பல அரசியல் முக்கியஸ்தர்களுக்கு தொடர்பிருப்பதாக கூறப்பட்டுள்ளது.

இவரது வெப் சைட்டில் உள்ள ஆபாசப் படங்களை நினைத்த மாத்திரத்தில் யாரும் பார்த்துவிட முடியாது. tamilsex.com மற்றும் realindiansex.com என்று பெயர்களில் நிறுவப்பட்டிருக்கும் இவர்களது வெப்சைட்டுக்குள் போனால், 'உறுப்பினர்களுக்கு மட்டும்' என்று

பளிச்சென்று எழுத்துக்கள் இருக்கும். உறுப்பினராக விரும்புகிறவர்கள் தங்கள் கிரெடிட் கார்டு நம்பர் உட்பட சில முக்கிய விவரங்களை கொடுக்கும்படி கேட்கும். அதன் படியே கொடுத்துவிட்டால், உறுப்பினராகி, இந்த வெப்சைட்டிலுள்ள ஆபாசப் படங்களை தங்கு தடையில்லாமல் ரசிக்கலாம்.

உறுப்பினரல்லாதவர்களை உள்ளே இழுப்பதற்காக சாம்பிளுக்கு சில படங்களையும் போட்டு வைத்திருக்கிறார் பிரகாஷ். 'இலவச ப்ரிவ்யூ' என்ற பெயரில் அடுக்கப்பட்டிருக்கும் இந்தப் படங்களில், இவரது வலைக்குள் விழுந்த பிரத்யேக ஜோடிகளின் படம் எதுவும் இருக்காது. மாறாக, தான் எடுத்த நிர்வாண பெண்களின் உடலோடு, தமிழ், இந்தி நடிகைகளின் தலையை ஒட்டு வேலை பண்ணியிருக்கிறார்.

மாணவ-மாணவிகள் தவிர பணத்துக்கு ஆசைப்பட்டு வருகிற குடும்பப் பெண்களையும் இந்த மன்மத நெட்வேர்க்கில் சிக்க வைத்திருக்கிறார். சென்னை தவிர, புதுவை, கோவை, பெங்களூர் போன்ற நகரங்களில் இவருக்கு புரோக்கர்கள் உண்டு. அங்கிருக்கும் மாணவர்களையும் மாணவிகளையும் நைஸாகப் பேசி வளைத்து, சென்னைக்கு அனுப்பி வைப்பார்கள் அந்த புரோக்கர்கள். ஒரு பக்கம் அலுவலகங்களில் கௌரவமான பணியில் இருக்கும் பெண்கள் யாராவது இவரது வெப்-சைட்டை பார்த்து, ஆர்வம் மேலிட உறுப்பினராகிவிட்டால், அடுத்து அவர்களை நேரடியாகவே தொடர்பு கொண்டு அழைக்கவும் ஆளனுப்பிவிடுவாராம்.

மீள வழியில்லை

"ஒரு பக்கம் ஆபீஸ்ல சம்பளம் வாங்குங்க. அதைவிட பத்து மடங்கு உங்களுக்கு நானும் தர்றேன்" என்று ஆசை காட்டுவாராம். தப்பித்தவறி ஒரு முறை இவரது வலைக்குள் விழுந்துவிட்டால் போதும்... மீண்டுவருவதற்கு வாய்ப்பே இல்லை. மறைத்து வைக்கப்பட்டிருக்கும் ரகசிய காமிராக்களில் நிர்வாணக் காட்சிகளை படம் பிடித்துக் கொண்டு, அதன் பிறகு அவற்றைக் காட்டியே தொடர்ந்து வந்து போகச் சொல்வாராம்.

"படம் எடுத்து வெப்சைட்டில் போடுவதைத் தவிர, பிரமாண்ட நெட்வேர்க்கில் பிரகாஷ் விபசாரமும் நடத்தியிருக்கிறார். மேல்தட்டு பிரமுகர்களுக்கு இந்தப் பெண்களை சப்ளை செய்வதையும் வழக்கமாக்கியிருக்கிறார். இவர்களது வக்கிரத்துக்கு தீனி போடும் வகையில் அவர்களை ஒருங்கிணைப்பதற்கென்றே ஒரு கிளப்பையும் உருவாக்கியிருக்கிறார். குறிப்பிட்ட நாட்களில் முன்னறிவிப்போடு கூடும் கிளப் உறுப்பினர்களுக்கு மது, மாது என்று சகலமும் அங்கேயே சப்ளை செய்திருக்கிறார். போதை ஆசாமிகளுக்கு வெளிநாட்டு மருந்து வகைகளை வாங்கி, சிரிஞ்சில் ஏற்றி விடும் வேலையையும் இவரே செய்திருக்கிறார்" என்கிறார்கள் போலீஸார்.

சென்னையைச் சேர்ந்த பிரபல பெண்கள் கல்லூரி ஒன்றில் மாணவிகளையும் புகழ்பெற்ற வங்கி ஒன்றில் பெண் ஊழியர்களையும் போதைக்குப் பழக்கப்படுத்தியே தன் தொழிலுக்கு இவர் மூலதனமாக்கியிருப்பதற்கும் ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

பிரகாஷ் நடத்திய செக்ஸ் கிளப்பில் உறுப்பினராக இருந்த எவரது பெயரையும் அவர் ரெஜிஸ்டர் நோட் போட்டெல்லாம் பதிவு செய்து வைக்கவில்லை. உறுப்பினர்களின் பெயர், விலாசம் மற்றும் தொலைபேசி எண்களை சங்கேத வார்த்தைகளில் கம்ப்யூட்டரில் போட்டு வைத்திருந்தாராம். அவரை என்னதான் டார்ச்சர் கொடுத்தும் ஒன்றிரண்டு பெயர் மற்றும் விலாசங்களை மட்டுமே சொல்லியிருக்கிறார். இவரது அமைப்பிலுள்ள ஒரு பெண் உறுப்பினரை அழைத்து போலீஸ் விசாரித்திருக்கிறது.



இன்டர்நெட் கிளப்

"இந்த கிளப்பில் உறுப்பினரான என் தோழி ஒருத்தி வற்புறுத்தி அழைத்ததன் பேரில் 'போய்தான் பார்ப்போமே' என்று ஒரு முறை அங்கே சென்றேன். சமுதாயத்தின் மிக அந்தஸ்தான தொழிலதிபர்கள் மற்றும் பிரமுகர்களின் வாரிசுகள் அங்கே சர்வ சுதந்திரமாக கொட்டமடித்துக் கொண்டிருப்பதை பார்த்து அதிர்ந்து போனேன். இவ்வளவு பெரிய குடும்பத்து ஆட்களெல்லாம் இங்கே வரும்போது, எப்படி போலிஸ் இவர்களை பிடிக்க முடியும் என்ற தைரியம் தானாகவே எனக்கு வந்தது. அதன் பிறகு டாக்டர் கூப்பிடும் போதெல்லாம் தட்டாமல் போய்வரத் தொடங்கினேன். என்னைக்கூட படம் எடுத்து வெப்சைட்டில் போட்டிருப்பாரா என்று பயமாக இருக்கிறது. பகல் நேரங்களில் வீட்டுக்குத் தெரியாமல் நான் வேட்டையாடப்பட்டேன். டாக்டரோடு சேர்ந்து என் கதையும் சந்தி சிரித்துவிடுமோ என்று பயமாக இருக்கிறது. என் கணவருக்குத் தெரிந்தால், வெட்டிக் கொன்றே விடுவார்" என்று இப்போது நடுங்குகிறாராம் அந்தப் பெண். டாக்டர் பிரகாஷ் கைது செய்யப்பட காரணமாக இருந்த அவரது உதவியாளர் கணேஷ் தற்போது சென்னை போலீஸ் கஸ்டடியில்தான் இருக்கிறான். அவனை தங்கள் கண்காணிப்பில் போலீஸ் வைத்திருக்கக் காரணம் உண்டு. "டாக்டர் பிரகாஷ் வெப்-சைட் நடத்தியது, ஆபாச காசெட்டுக்கள் தயாரித்தது எல்லாமே மிகப் பெரிய நெட்-வேர்க்கில் நடந்திருக்கிறது. தமிழகத்துக்கு வெளியிலும் இதன் பின்னால் அதிர வைக்கும் வகையில் வி.ஐ.பி.க்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். அந்த வி.ஐ.பிக்களின் தொடர்பு கணேஷுக்கு நன்றாகத் தெரிந்திருக்கிறது. அதனால்தான் அவனைத் தங்கள் பிடிக்குள் வைத்து விசாரிக்கிறோம்" என்கிறது போலீஸ்.

வி.ஐ.பி. தொடர்பு

குறிப்பாக, புதுவைக்க இந்த விவகாரத்தில் பெரும்பங்கு இருக்கிறது. கடந்த சில வருடமாகவே சென்னையில் இயங்கிவரும் விபசார விடுதிகள், மொபைல் விபசார வாகனங்கள், கிழக்கு கடற்கரைச் சாலையில் நிர்வாண நடன நிகழ்ச்சிகள் என்றுவரிசையாக அடித்து நொறுக்கியது போலீஸ். இம்மாதிரி சமாசாரங்களுக்கு சென்னை சரிப்பட்டு வராது என்பதால், இந்தக் கும்பல்கள் புதுவையைத் தேர்ந்தெடுத்தன. புதுவை நகரின்போஷாக்கான பகுதியிலேயே வாடகைக்கு பங்களாக்கள் எடுத்து, பாவ காரியங்களை அரங்கேற்றத் தொடங்கின.

வட இந்தியர்கள் போல் தோற்றமளிக்கும் சிலர் இந்த புதுவை பங்களாக்களுக்கு சென்று இறங்குவதும் நுனி நாக்கு ஆங்கிலத்தில் பேசியபடி வீடியோ காமிராக்களுடன் உள்ளே போய் வருவதும் சர்வசாதாரண காட்சியாகிவிட்டது. ப்ளூஃபிலிம்களில் நடிக்க பெண்களையும் வாட்ட சாட்டமான ஆண்களையும் புதுவையிலேயே வாடகைக்கு எடுத்துக்கொள்ள ஆரம்பித்தார்கள்.

இந்த நிலையில்தான் போலீஸ் கெடுபிடியையும் மீறி சென்னையிலேயே சாமர்த்தியமாக தனி ராஜாங்கம் நடத்தியிருக்கிறார் டாக்டர் பிரகாஷ். முக்கிய போலீஸ் அதிகாரிகள் சிலரும் அவருக்கு உடந்தையாக இருக்க, அவருக்கு எந்தப் பிரச்சனையும் வரவில்லை.

"புதுவையில் ப்ளூ ஃபிலிம் ஷூட்டிங் சக்கைப் போடு போடுகிறது என்று பிரகாஷுக்கும் தெரியும். கணேஷ் தவிர, புதுவையில் 'நடித்த' வேறு சில இளைஞர்களையும் சென்னைக்குக் கொண்டுபோய் 'வாய்ப்பு' கொடுத்திருக்கிறார். அவர்களை சென்னை போலீஸ் அடையாளம் கண்டுகொண்டு விட்டது. தற்போது, அந்த இளைஞர்களுக்கு வலை வீசப்படுகிறது" என்று தகவல் சொல்கிறார்கள் புதுவை போலீஸார்.

இரண்டு மாதங்களுக்கு முன்பு புதுவையின் ஒரு வாடகை பங்களாவின் காம்பௌண்டுக்குள் பசுமையான செடி கொடிகளுக்கு மத்தியில் நடந்த ஆபாச ஷூட்டிங்கை, தனது வீட்டு மொட்டை மாடியிலிருந்து பார்த்து அதிர்ந்து போய்விட்டார் பக்கத்து வீட்டுக்காரர். உடனே போலீஸுக்கும் தகவல் சொன்னார். போலீஸ் வந்து கும்பலை அள்ளிப் போட்டுக்கொண்டு போய் அடித்து நொறுக்கியது. பங்களா ஒரு அரசியல் பிரமுகருக்குச் சொந்தமானது என்பதால், அவர் ஓடோடிச் சென்று பிரஷர் கொடுத்தார். கடைசியில் அந்தக் கும்பல் விடுவிக்கப்பட்டது. "அந்தக் கும்பலும் பிரகாஷுக்கு ஒரு கிளை போல செயல்பட்டு வந்திருப்பது இப்போதுதான் தெரிகிறது" என்கிறார்கள் புதுவையின் நேர்மையான அதிகாரிகள்.

தங்களது வண்டவாளங்களும் தண்டவாளம் ஏறுமோ என்ற பயத்தில் உறைந்து போயிருக்கிறார்கள் பல தமிழக அரசியல்வாதிகள்! ■

சித்திகளின் கையில் சின்னத்திரை

"அகநானூறு, புறநானூறு போல சித்தி நானூறு" என்று 'சித்தி' தொலைக்காட்சி தொடரை வாயாரப் புகழ்ந்திருக்கிறார் முன்னாள் முதல்வர் கலைஞர்.

'சித்தி' தொடர் நானூறு நாட்களாக-விறுவிறுப்பாகத் தமிழர்களின் இல்லங்களில் வெளியானதை அகநானூறுடன் ஒப்பிட்டது அவருடைய சமயோசித புத்திக்கு உதாரணமாக இருக்கலாம். ஆனால் ஏறத்தாழ எல்லா தொடர்களுமே சித்திக்கு அடுத்தபடியாகத் தமிழர்களால் ஏகமனதாக வரவேற்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதே உண்மை. தொடர்களுக்கு இல்லங்களில் ஏற்பட்டுக் கொண்டிருக்கும் ஏகபோக வரவேற்பைத் தொடர்ந்து பல ரிடையர்ட் நடிகைகள் களமிறங்கியிருக்கின்றனர்.

குட்டி பத்மினி, கே.ஆர்.விஜயா, ஸ்ரீ ப்ரியா, ராதிகா, ரேவதி, நளினி, யுவராணி, ரூபஸ்ரீ, தாரணி, அனுஷா, ராகசுதா உள்ளிட்டோர் பட்டியலின் சமீப வரவு, குஷ்பு. மருமகள், கோடீஸ்வரி தொடர்கள் மூலம் சின்னத்திரையில் அடியெடுத்து வைத்திருக்கிறார்.

சராசரியாக இவர்கள் நடிக்கும் எந்தத் தொடருக்கும் காலவரையறை நிர்ணயிக்கப்பட்டதாகத் தகவல் இல்லை. ஆரம்பத்தில் எல்லா மெகா தொடரையும் 52 வாரம் என்று அறிவிக்கிறார்கள். ஆனால் அவற்றுக்கு ஏற்படும் விளம்பரமும் பரபரப்பும் 40 வாரங்களுக்குப் பின்புதான் சூடு பிடிக்கிறது. ஆகவே மேற்கொண்டு 50 வாரங்களாவது தொடராவிட்டால் டி.வி தயாரிப்பாளர்களின் ஆத்மா சாந்தியடையும் வாய்ப்பு இல்லை.

ஆகவே எல்லா தொடருமே நூற்றுக்கணக்கான வாரங்களுக்குத் தொடர்கிறது.

'மங்கை', 'கன்னி', 'சொந்தம்', 'வாழ்க்கை', 'குடும்பம்', 'கோகிலா எங்கே போகிறாள்?', 'கிருஷ்ணதாசி', 'தோழிகள்' உள்ளிட்ட பெண்ணுரிமைத் தொடர்கள் எல்லாவற்றையும் ஒரு பொதுத் தன்மையில் அடக்கலாம்.

எல்லாவற்றுக்கும் ஏறத்தாழ ஒரு குடும்பப் பாடல் உண்டு. பெரும்பாலும் அத் தொடரின் தலைப்பை பலமுறை வலியுறுத்துவதாக இருக்கும். (மக்கள் மனதில் பதிய வேண்டாமா?)

எல்லா தொடரிலும் துன்பங்களைச் சுமக்கும் ஒரு இளம் பெண்ணோ, அல்லது தனக்கு இழைக்கும் அநீதிக்குப் பழிவாங்கும் இளம்பெண்ணோ அவசியம். சில நேரங்களில் இரண்டு பெண்களும் ஒரே தொடரில் இருப்பார்கள்.

தன்னால் தட்டிக் கேட்க முடியாத அநீதிகளையெல்லாம் எம்.ஜி.ஆர். போன்ற ஒரு கதாநாயகன் தட்டிக் கேட்கும்போது இளவட்டங்கள் எப்படி ஆர்ப்பரித்தனரோ அதே நிலை இப்போது வீட்டில் உள்ள பெண்களுக்கு மாமியாரைத் தட்டிக் கேட்கும் தொடர்கள், காதலித்து ஏமாற்றியவனைப் பழிவாங்கும் தொடர்கள், பெண்குழந்தையை வெறுக்கும் ஆண்களைத் தோலுரிக்கும் தொடர்கள் உள்ளிட்ட பெண்களுக்கான பிரச்சனைகளின் மாயத் தீர்வாக இன்றைய தொடர்கள் உள்ளன. பெண்களுக்கு உளவியல் ரீதியான மன நிறைவையும் சில நேரங்களில் பழிவாங்கிய திருப்தியையும்கூட இத்தகைய தொடர்கள் தருகின்றன.

ஆண்கள் ஸ்டார் மூவிஸையும் பெண்கள் 'சித்தி' தொடரையும் ஒரே நேரத்தில் ஒரே டி.வியில் பார்க்கப் போட்டி போட்டு போட்டு பல வீடுகளில் உள்வீட்டுக் குழப்பங்கள். இறுதியில் தொடரைப் பார்ப்பதில் பெண்களே வெற்றி பெற்று ஆண்களைப் பழிதீர்க்கிறார்கள் என்பது என் அக்கம்பக்கத்து விசாரணையில் தெரியவந்த உண்மை.

இத்தகைய தொடர்களால் பெண்களின் மன உணர்வுகளில் சற்றே போராட்ட உணர்வுகள் ஊட்டப்பட்டு, பின்னர் அதற்கு ஒரு மானசீகமான தீர்வும் வழங்கப்பட்டுவிடுகின்றன. சின்ன வயசிலேயே காணாமல் போய் வெளிநாட்டிலிருந்து திரும்பிவரும் கோடீஸ்வர சித்தப்பா மூலமாக எல்லாப் பிரச்சனையும் தீர்ந்ததாகவோ, அவளுடைய நல்ல மனதைப் புரிந்து கொண்டு குடும்பமே அவளிடம் மன்னிப்பு கேட்பது போலவோ காட்டி சீரியலை முடிக்கிறார்கள்.

சினிமா ஆண்கள் கையில் என்றால் சின்னத்திரை பெண்கள் கையில்.. அது ஆண்களால் தயாரிக்கப்பட்டாலும்கூட, சினிமாவில் கதாநாயகனுக்குக் கிடைக்கிற வெற்றி போல, சின்னத் திரையில் பெண்களுக்கு வெற்றி நிச்சயம். ■

தமிழ்நாட்டிலிருந்து மயன்

பிரியா கில்

'பேபி'யை பொரிந்து தள்ளினார் 'காதலுக்கு மரியாதை' தந்த நாய

அந்த இளம் நடிகர் திரையுலகுக்கு நடிக்க வந்ததே ஓர் அதிஷ்டவசமான நிகழ்வுதான். திரையுலகுக்கு வந்தவருக்கு தொடர்ந்து அதிஷ்டம் கைகொடுத்த தால் இளைய சமுதாயத்தின் 'ஆசை நாயகனாக' வலம் வர ஆரம்பித்தார். எனினும், ஆரம்பம் முதலே 'அந்த' விசயத்தில் கில்லாடியான நடிகர் தன்னுடன் நடிக்கும் நடிகைகளிடம் தனது பசப்பு வார்த்தைகள் மூலம் அவர்களை மயக்கி, அவர்களிடம் சில்மிஷங்களை காட்ட தவறுவதில்லை. நடிகைகள் சிலரும் அந்த ஆசை நாயகனின் ஆசை வார்த்தைகளை நம்பி அவரின் கட்டுடலில் கட்டுப்பட என்றுமே பின் நின்றதில்லை. இவ்வாறு நாயகன் தனது திருவிளையாடல் காட்சிகளில் முழுக் கவனத்தையும் செலுத்தியதால் அவரது படங்கள் சரிவுகளை சந்தித்தது. எனினும், நடிகர் தனது வாலிப சேட்டையை கைவிடவே இல்லை.

இவ்வாறு, நடிகர் வில்லத்தனமாக நடித்து 'அமர்க்களப் படுத்திய' படத்தில் நாயகியாக நடித்த அந்த நாயகியிடமும் தனது வழமையான கைவரிசையை காட்ட ஆரம்பித்தார். அவர் தான் 'காதலுக்கு மரியாதை' கொடுப்பவராச்சே. ஆரம்பத்தில் நடிகரின் ஆசைவார்த்தைகளை நம்பி அவரின் ஆசைகளை தீர்த்த போதிலும் பின்னர் சுதாகரித்துக் கொண்ட நடிகையிடம் தப்பமுடியாது திருமணம் வரை சென்றார் அந்த நடிகர். தனது ஆற்றாமையின் வெளிப்பாட் டாலோ அல்லது தனது மனைவியின் மீது ஏற்பட்ட பாசத்தி னாலோ? தன்னை முற்றாக மாற்றி விட்டதாகவும் தனது உடல் பொருள் ஆவி அனைத்தும் தனது மனைவிக்கே இனிமேல் வழங்கப் போவதாகவும் பத்திரிகைகளுக்கு கதை சொன்னார். அதை போலவே சில காலங்கள் மனைவி தாசனாக வாழ்ந்து வந்தார்.

எனினும், நடிகர் 'வதியுரிமை' என்ற சொல்லின் ஆ வார்த்தை கொண்ட படத்தில் நடிக்கும் போது அந்த பட நடிப்பதற்காக வந்தார் 'ஷக்கலக்க பேபி'. பேபியை கண் நடிகர் தன்னுடன் அடக்கி வைத்திருந்த பேய் மீண்டும் வ ரூபம் எடுத்துக் கொள்ள மனைவியை மறந்து 'பேபியே' த என இருந்தார்.

ஒரு நாள் இரத்தத்தின் பெயர் கொண்ட படத்தின் இ கட்ட படப்பிடிப்புகள் நடைபெறும் போது மதிய உணவு படப்பிடிப்பு நிறுத்தப்பட்டது. உடனே ஒரு மூலையில் இருந்த நடிகர் தன் செல்போனில் ஒருவருடன் தொ கொண்டு ஏதோ பேசிக் கொண்டிருந்தார். நடிகரின் அசைவுகளையும், இடையிடையே செல்போன் ஊ பறந்து சென்ற 'கிஸ்'களையும் வைத்து யாருடன் பேசுகிறா குழுவினர் ஊகித்துக் கொண்டனர்.

அவர்களின் ஊகத்தை உறுதிப் படுத்துவதைப் போ நோக்கி சீறிக்கொண்டு வந்த காரில் இருந்து இறங்கி படியே நடிகரை நோக்கி பாய்ந்து வந்தார் பேபி ந மகிழ்ச்சியோடு பார்த்துக் கொண்டு நின்ற நடிகரை நோக் என்று கொஞ்சல் ஆங்கிலத்தில் கேட்டபடி ஓடிவந்த நி நின்று விடவில்லை. தன்னுடைய இரண்டு கரங்களாலு சிறைப்பிடித்து நடிகரின் கன்னங்களில் 'கிச்சா கிச்சா' வரா என்ன? பதிலுக்கு தானும் 'கிச்சா கிச்சா'!! சி தளமே கிச்சாக்களினால் நடுங்கிப் போய்விட்டது. பின்பு, தனது 'ரெஸ்ட் ரூம்' நோக்கி தூக்கிச் சென்ற நடிகர், மூடப்பட்ட கதவுகள் மதிய போசனத்திற்காக ஒதுக்கப் மணி நேரங்கள் தாண்டியும் திறக்கப்படவே இல்லை. கட்டப் படப்பிடிப்புக்காக, அனைவரும் வந்து சேர் படப்பிடிப்பை ஆரம்பிக்க முடியாது பெருமூச்சு வி இயக்குநர்.

இந் நேரத்தில் சிவ பூசையில் கரடி புகுவதை போ திடீரென ஆஜர் ஆனார் ஆசை நாயகனின் ஆசை அனைவரும் 'அலைபாய' வைத்த நாயகியின் வரவால் என்ன நடக்கப் போகிறது என்ற கேள்வியே அனைவர் கொண்டிருந்தது. அழகிய புன்னகையுடன் படப்பிடிப்பு முன்னாள் நடிகை, தனது கணவன் எங்கே என் இயக்குநரின் நிலைமை தர்ம சங்கடமானது. இயக்குந தயங்கி தயங்கி நடிகரின் 'ரெஸ்ட் ரூம்' நோக்கிப் பா

நிலைமையை விளங்கிக் கொண்ட நடிகை பத்திரமா நோக்கி பாய்ந்து சென்றார். பாய்ந்து சென்றவர் சென் கதவை தள்ளினார். கதவு திறப்பட்டது. (நடிகர் அவர ஒழுங்காக மூடப்படவில்லை.) கதவு திறப்பட்டதுதான் அங்கிருந்த அனைவரின் கண்களும் கதவுகளை தா மீதும் விழுந்ததும் அவர்கள் இருவரும் என்ன செ என்பதை அவர்களின் தோற்றங்கள் அனைவருக்கும் வெ

தனது மனைவியை கண்டதும் ஆசை நாயகன் அ யடைந்தாலும் உடனடியாக சமாளித்துக் கொண்டு பழக்கவழக்கம் தெரியாதா இப்படி கதவை திறக்கிறாயே சீறி விழுந்தார். "நீ.. நீயாடா பழக்கவழக்கம் பற்றி பே என பதிலுக்கு மனைவியும் ஒரு போடு போட்டவுடன் கப்சிப் ஆனார். தொடர்ந்து, தனது ஆக்ரோசப் பா பேபி நடிகை மீது திருப்பிய மனைவி நடிகை ஆ பொரிந்து தள்ளினார். 'அவரின் ஆங்கிலப் புலமைை டத்தான் வேண்டும். என அங்கிருந்தவர்கள் கிசு அத்தனவிற்கு பிச்ச உதறினார். பேபி நடிகை மட்டு விட்டு விடவில்லை. "நானாக உன் கணவனிடம் வ நான் நினைத்திருந்தால் உன் கணவனை விட சிறு அழகன்களை கட்டிலுக்கு கொண்டு வரமுடியும்" என

பக்க நியாயங்களை போட்டு உடைத்தார். ஒரு சில நிமி தொடர்ந்த இம் மோதலை படப்பிடிப்புக் குழுவினர் அமை பார்த்து ரசித்துக் கொண்டிருந்தனர். அங்கு நின்ற தா நகைச்சுவை நடிகர் தான் வந்து இரு வருக்கும் சமா கூறி பிரச்சனையை முடிவுக்கு கொண்டு வந்தார். யாருக்காகவும் எதுவும் பேச முடியாது முகத்தை போட்டுக் கொண்டு நின்றார். மனம்... இதெல்லாம் சின சகஜமப்பா!!

மினி சினி

✪ நடிகர் கமலஹாசனின் பிறந்தநாளை யொட்டி மாநில அளவிலான தமிழ் பேச்சுப் போட்டிக்கு கமலஹாசன் ரசிகர்கள் நற்பணி மன்றம் ஏற்பாடு செய்துள்ளது.

✪ நடிகர் கார்த்திக் தாதாக்களால் கடத்தப் பட்டதாகக் கூறப்படுவதை அவரும், அவரை ஆள் வைத்துக் கடத்தியதாகக் கூறப்படும் பட அதிபர் காஜா மைதீனும் மறுத்துள்ளனர்.

✪ 'லகான்' படத்தில் வெளிநாட்டு உரிமையைத் தர மறுத்த நடிகர் அமீர் கானை கொல்ல முயன்ற தாவூத் இப்ராஹிம் கூட்டாளி கள் 4 பேர் கட்டுக் கொலை.

✪ 'ஜெமினி பிக்சர்ஸ்' என்பது அந்தக் காலத்தில் பெரிய பட நிறுவனம். இப்போது அந்தப் பெயரிலேயே ஒரு படத்தைத் தயாரிக் கிறது. அதே போன்ற பெருமையைப் பெற்ற ஏவி.எம்.நிறுவனம்.

✪ திருட்டு வி.சி.டி. ஒழிப்புக்கு புதிய சட்டம் இயற்ற வேண்டும் என்று ஜெயலலிதாவிடம் நடிகர் சங்கத் தலைவர் விஜயகாந்த் கோரிக்கை விடுத்துள்ளார்.

✪ அஷ்டாவதானி (சில நேரங்களில் நமக்கு கஷ்டாவதானி) டி.ராஜேந்தரின் செல்லப் புத்திரன் சிலம்பரசன் அவ்வப்போது அப்பாவின் படங்களில் டான்ஸ் ஆடுவது, சண்டை போடுவது, பாடுவது என தலை காட்டிக் கொண்டிருக்கிறார். இப்போது தேவாவின் இசையில் பாடல் ஒன்று பாடியுள்ளார்.

✪ அன்னதானம், சிறப்பு புஜைகள், இலவச உதவிகள் என சூப்பர் ஸ்டார் ரஜினிகாந்தின் 52வது பிறந்த நாள் விழா அமர்க்கள மாகக் கொண்டாடப்பட்டது.

குணால்-சோனாலி பாந்த்ரே
படம்: காதலர் தினம்

செக்ஸ் டாக்டருடன் தொடர்பு? நடிகை தற்கொலை முயற்சி!!

'செக்ஸ்' டாக்டர் பிரகாஷுடன் தன்னைத் தொடர்புபடுத்தி வரும் தகவல்களால் பயந்து போன நடிகை ரோஜா தற்கொலை செய்து கொள்ள முயற்சித்துள்ளார்.

தமிழ் திரையுலகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட படங்களில் நடித்தவர் ரோஜா. அவரும் 'செம் பருத்தி'யில் அவரை அறிமுகப்படுத்திய டைரக் டர் செல்வமணியும் நீண்ட நாட்களாக காத லித்து வருகின்றனர். இவர்களின் திருமணம் தள்ளிப் போய்க் கொண்டே இருக்கிறது.

பிரகாஷின் பண்ணை வீட்டுக்கு ரோஜாவும், செல்வமணியும் சென்றதாக தகவல்கள் கசிந் துள்ளன. அப்போது அவரே அறியாமல் ப்ளூ மிலிம் விவகாரத்தில் சிக்கிக் கொண்டார் என்ற தகவல் சில நாட்களாக சினிமா வட்டாரத்தில் பேசப்பட்டு வருகிறது.

மேலும், போலீஸிடம் இது தொடர் பான படங்களை பிரகாஷ் கொடுத்து விடுவார் என்ற பயம் ரோஜாவுக்கு ஏற்பட்டிருக்கிறது. இதனால் தனது இமேஜ் பாழாகிவிடும், சினிமா உலகி லேயே தலை காட்ட முடியாது. போலீஸ், நீதிமன்றம் என்று அலைய வேண்டியிருக் கும் என்று ரோஜா கருதினார்.

இதனால் மனம் குழம்பிய நிலையில் காணப்பட்ட ரோஜா தற்கொலை செய்து கொள்ளும் நிலைக்கு தள்ளப்பட்டிருக் கிறார்.

திடீரென்று விஷம் குடித்து வீட்டில் மயங்கி கிடந்த அவரை, உறவினர்கள் சென்னை, அடையாறிலுள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். ஆனால் அதை யாருக்கும் தெரியாமல் மூடி மறைத்து விட்ட னர்.

3 நாட்களாக சிகிச்சை பெற்று வந்த ரோஜா, சமீபத்தில்தான் குணமடைந்து வீட்டுக்கு சென்றார். இது குறித்து அவரது காதலர் செல்வமணி கூறுகை யில், கடந்த 93ம் ஆண்டு அதிரடிப்படை படத்தின் சண்டைக்காட்சியின் போது காலில் அடிபட்டு ஆபரே ஷன் நடந்தது.

மீண்டும் அதே இடத்தில் வலி ஏற்பட்டதால் சிகிச் சைக்காக மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று செல்வமணி கூறினார்.

ரோஜாவுக்கு சிகிச்சை அளித்த டாக்டர் கூறுகை யில், ரோஜா விஷம் குடித்தது உண்மையல்ல. அவ ரது கர்ப்பப்பையில் கட்டி இருந்தது. ஆனால் லேப்ர ஸ்கோபி சிகிச்சை மூலம் கட்டி அகற்றப்பட்டது என்று கூறினார்.

டாக்டரும், செல்வமணியும் முரண் பட்ட கருத்துக்களை கூறியதிலிருந்தே விஷயத்தை மூடி மறைக்க முயற்சிகள் நடப்பதாக பேசப்படு கிறது.

வருத்தத்தில் இருக்கிறார் விக்ரம்!

ரியா சென்

பெரும் வருத்தத்தில் இருக்கிறார் 'சீயான்' விக்ரம். கஷ்டப்பட்டு கண்ணை வருத்தி நடித்த காசி படத்திற்கு ரசிகர்கள் கூட்டம் குறைவாக வருவதாக அவர் காதுக்கு வரும் செய்திகள் அவரை இந்த வருத்தத்தில் ஆழ்த்தியுள்ளன.

மலையாளத்தில் வெளியாகி தேசிய விருது வரை அடிபட்ட படத்தின் ரீமேக்தான் காசி. மலையாளத்தில் இயக்கிய அதே வினயன்தான் தமிழிலும் இயக்கினார்.

இந்தப் படத்திற்காக கண்களை இழந்த குருடன் போல மிகத் தத்ரூபமாக நடித்து கலக்கியிருக் கிறார் விக்ரம். இதற்காக கண் விழிகளை மேலே உயர்த்தியவாறு மிகவும் சிரமப்பட்டு நடித்துள்ளார்.

ஆனால் படத்தின் ரிசல்ட் விக்ரமுக்கு ஏமாற்றத்தைத் தந்துள்ளதாம். தனது நடிப்பும் இளையராஜாவின் இசையும் படத்திற்குப் பெரிய பக்க பலமாக இருக்கும் என்று அவர் பெரிதும் நம்பியிருந்தார்.

இரண்டும் நன்றாக இருந்தும் ரசிகர்கள் பெரிய அளவில் படத்திற்கு ஆதரவு தரா தது ஏன் என்று அவர் குழம்பிப் போயிருக் கிறார். தமிழ் ரசிகர்களைப் புரிந்து கொள்ள முடியவில்லையே என்று விரக்தியுற்றிருக் கிறார்.

ஆனால் திரைக்கதை சரியில்லை என்று கோடம் பாக்கம் வித்துவான்கள் பேசிக் கொள்கிறார்கள். மலையாளத்தில் எடுத்ததை அப்படியே எடுத்திருக்கக் கூடாது. கொஞ்சமாவது தமிழ்ப்படுத்தியிருக்க வேண்டும் என்று அவர்கள் கூறுகிறார்கள்.



மாதவன்

படப்பிடிப்பில் அனர்த்

விஜய், உலக அழகி சோப்ரா நடிக்கும் 'தமிழன் பிடிப்பு அண்மையில் மகாவலிபுரத்தில் நடைபெற்ற தலறுதலாக குண்டு ஒன்று வெடித்ததில் துணை நடிகை படுகாயம் அடைந்தார்.

வில்லன் கூட்டத்தை பார்த்து பயந்து பொது ஓடுவதை போலவும் அப்போது அங்கு குண்டுகள் வெ போலவும் காட்சி படமாக்கப்பட இருந்தது. அ ஆயத்தங்களை ஸ்டன்ட் மாஸ்டர் சுப்பராயனும், இ மதித்தும் செய்து கொண்டிருந்தனர். படப்பிடிப்பி பயன்படுத்தும் வீரியம் குறைந்த குண்டுகளை நில அடியில் புதைத்துக் கொண்டிருக்கும் போது ஏற்பட தினால் திடீரென குண்டுகள் வெடிக்க ஆரம்பித்தன.

அப்போது அங்கு கூடியிருந்த 250க்கும் மேற்பட்ட நடிகர், நடிகைகள் அலறிக்கொண்டு சிதறி ஓடினார்கள். வெடித்த தளத்திற்கு மிக அருகில் நின்ற துணை லலிதா தூக்கி எறியப்பட்டதால் படுகாயத்திற்கு உள்ளான அவரது ஒரு கையும் தீயில் கருகியுள்ளது. இதையடுத்து அவர் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். குண்டு வெடிப்பால் அவ பெரும் பரபரப்பு ஏற்பட்டதோடு படப்பிடிப்பும் உடனடியாக ரத்து பட்டது.

பிரபுதேவா-ஜெயாரே
படம் உள்ளம் கொள்ளை போகுதே

தமிழ் சினிமாவின் நெத்தியடி!

சின்னத்திரை தடுமாற்றம்!!

அத்தி பூத்தாற் போல திரையுலகினர் இடையே ஏற்பட்ட திடீர் ஒற்றுமையாலும் அவர்கள் மேற்கொண்ட அதிரடி நடவடிக்கைகளாலும் தனியார் டி.வி சானல்களின் பொங்கல் சிறப்பு நிகழ்ச்சிகள் பொலிவிழந்து விட்டன.

மேலும் இவர்களின் உறுதியான நடவடிக்கை காரணமாக தனியார் சாட்டிலைட் டி.வி சானல்களில் ஒளி பரப்பான பொங்கல் சிறப்பு நிகழ்ச்சிகள் பொலிவிழந்து விட்டன. தனியார் டி.வி சானல்களினால் திரையுலகே அழிந்து விடும் நிலை ஏற்பட்டுள்ளது. இது இனியும் நீடித்தால் சினிமா எடுப்பதையே விட்டு விட்டு அத்தனை தயாரிப்பாளர்களும் டி.வி பக்கம் போய் விடுவார்கள்.

இதைத் தடுக்க தனியார் டி.வி சானல்களுக்கு நடிகர், நடிகையர் உள்ளிட்ட அனைத்துத் திரையுலகினரும் பேட்டியோ, நிகழ்ச்சிகளோ தரக்கூடாது, படக் காட்சிகளையும் கூட 3 நிமிட கிளிப்பிங்குகள் மட்டுமே கொடுக்கலாம் என்பது உள்ளிட்ட பல்வேறு அதிரடி முடிவுகளை கடந்த டிசம்பர் மாதம் உருவான தமிழக திரைப் படக் கூட்டமைப்பு எடுத்தது.

பல்வேறு திரைப்பட சங்கங்களை உள்ளடக்கியது இந்தக் கூட்டமைப்பின் முடிவுகளை மீறிய நடிகர் கமலஹாசன், நடிகை சிம்ரன் உள்ளிட்ட பலர் மீது கடும் நடவடிக்கையையும் இது எடுத்தது. கமல்ஹாசன் மீதே நடவடிக்கையா என்ற அதிர்ச்சி ஒரு பக்கம் இருக்கையில், கூட்டமைப்பின் இந்த முடிவினால் சர்டிலைட் சானல்கள் பெருமளவில் பாதிக்கப்பட்டதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

காயத்ரி ஜெயராம்

பிரசாந்தின் அடுத்த படம்

'விரும்புகிறேன்' வருகிற வழியைக் காணோம். அதற்குள் நடிகர் சங்கத்தின் தடை வந்து விட்டது. இந்தக் கவலைகளையெல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு புதுப்படம் ஒன்றில் புக் ஆகியுள்ளார் பிரசாந்த். படத்தின் பெயர் 'நீ... நான்... காதல்...'

படத்தைத் தயாரிக்கப் போவது வெற்றிப் படங்களின் தயாரிப்பாளர் ஆர்.பி.சௌத்ரி. ஏற்கனவே பிரசாந்தை வைத்து 'பூமகள்' என்ற படத்தை தயாரித்தவர் தான் சௌத்ரி. முதலுக்கு மோசமில்லாமல் அதுவும் ஓடியது.'நீ.. நான்... காதல்....' படத்தின் மூலம் இயக்குனர் சூர்யாவிடம் உதவியாளராக இருந்த ரவி மௌரியா டைரக்டர் அந்தஸ்துக்கு உயருகிறார். கதை, திரைக்கதை, வசனம் அவருடையதுதான். 'லொடுக்கு'ப் பாண்டியாக வந்து 'நந்தா'வில் அசத்திய கருணாஸுக்கு இதில் முக்கியமான வேடம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

பாடகர் தீபன் சக்கரவர்த்தியும் நடிக்கிறார். 'டும் டும் டும்' படத்தில் அசத்திய மலையாள நடிகர் முரளியும் படத்தில் வருகிறார்.

மணிஷர்மாவின் இசையில் வளரவுள்ள இந்தப் படத்தை விரைவாக முடிக்க சௌத்ரி திட்டமிட்டுள்ளார். படத்தின் பெயர் ரொம்ப புதுமையாகத்தான் இருக்கிறது. கதையைச் சொதப்பாமல் விட்டால் சரி.

சிம்ரன்

அசோகாவில் புதிய வாய்ப்பு

இந்தியில் பல படங்களில் நடித்துள்ள ஆஷிஷ் வித்யார்த்தி 'தில்' மூலம் தமிழிலும் கால் பதித்தார். முதல் படத்திலேயே ஆக்ரோஷமான வில்லனாக வந்து கலக்கிய ஆஷிஷ்ஷிற்கு தற்போது அன்பாலயா பிரபாகரன் தயாரிக்கும் 'அசோகா' படத்திலும் வாய்ப்புக் கிடைத்துள்ளது.

காதோடு சொல்லுகிறோம்

ஒரு காலத்தில் ரசிகர்களை தூங்க விடாமல் தவிக்க விட்ட நான்கெழுத்து 'கஸ்' நடிகை, அட்ரெஸ் கூட இல்லாமல் இருந்தார். அவரைப் பற்றிய டும்டும் வதந்தியும் சில மாதங்களுக்கு முன் வந்த வேகத்திலேயே 'புஸ்' ஆகி விட்டது. ஆனால் இப்போது, பில் கிளின்டனின் நாட்டில் டாக்டர் ஒருவரை கைக்குள் போட்டு விட்டாராம். சுற்றுலா ஒன்றின்போதுதான் காதல் வைரஸ் பரவிக்கொண்டதாம். மிக விரைவில் டும் டும் டும் கொட்டலாம் என செய்திகள் கிசுகிசுக்கின்றன. காலத்துக்கு காலம் நம்ம ஹீரோயின்கள் கிளிண்டனின் நாட்டுக்கு போய்கொண்டு தான் இருக்கிறார்கள். ஏதோ.. திரும்பி வராவிட்டால் சரி.

எப்படியாவது பீல்டில் நிலைக்க வேண்டும் என்ற கற்பனையில் மனதை திருடிய படத்தில்' கன்னா பின்னா என்று உரிச்சகோழியாக தோன்றினார் மந்திரத்தின் பேர் கொண்ட 'கா' நடிகை. இதனைப் பார்த்த சென்சார் போட் அம்மணிகள் முகத்தை சுளித்துக் கொண்டு நடிகையின் படையலில் 80 வீதத்தை கத்தரித்து விட்டார்களாம். இனி, 'ம்ஹீம்.. படம் தேறாது' என்று கன்னத்தில் கை வைத்துக் கொண்டு இருக்கிறார்கள். தயாரிப்பாளரும், இயக்குநரும், கூடவே 'கா' நடிகையும் தான்.

'மூன்று ரோஸ்' படத்தில் மூன்று கவர்ச்சி கன்னிகளுடன் இந்தி நடிகர் 'கோ'வும் தமிழுக்கு இறக்குமதியாகிறார். இப்போது சிறப்பு வேடத்தில் 'ஆக்ஷன் அரசன்' நடிகரையும் இறக்கி இருக்கிறார்கள். அந்த மூன்று கவர்ச்சிக் கன்னிகளும் தமக்கு நாயகன் இல்லை என்றார்கள். இப்போது ஒவ்வொருவராக வலை வீசிக் கொண்டிருக்கிறார்கள். இறுதியில் ஒவ்வொருவருடன் டூயட் பாடாமல் விடமாட்டார்கள் போலும்.

பிரகாச நடிகையின் சம்பளம் 50 லகரத்தை தாண்டியதும் நிறைய பட வாய்ப்புகள் கைநழுவிப் போய் விட்டது. முன்றெழுத்து படநிறுவனம் தயாரிக்கும் பழம் பெரும் பட நிறுவனத்தின் பெயரைக் கொண்ட படத்திற்காக கேட்ட போதும் சம்பளத்தை குறைக்க சான்சே இல்லை என்று கூறிவிட்டாராம். ஆனால் நடிகைக்கு அது பற்றியெல்லாம் கவலையே இல்லை: செருப்பு விளம்பரம், கடை திறப்பு விழா, நல்லெண்ணெய் விளம்பரம் என்று புகுந்து விளையாடுகிறார். அதுவும் இல்லாவிட்டால் இருக்கவே இருக்கிறது கலைச்சேவை. பிறகு என்ன கவலை..?

நடிகர் சங்க தலைவரை வைத்து 'இராமனின் தம்பி பெயரைக் கொண்ட படத்தை இயக்கிய நான்கெழுத்து 'சு' இயக்குநருக்கு கைவசம் படங்களே இல்லை. அவரிடம் இருப்பது, காதல் திருமணம் என்ற சொல்லின் ஆங்கிலப் பொருள்படும் படம் ஒன்றுதான். அதற்காக அவர் வாங்கியிருக்கும் சம்பளம் 9 லகரங்கள் மட்டும் தான். அட பாவமே!

சினி விசிட்

அல்லி அர்ஜுனா ரத்துச் செய்யப்பட்டது

பொங்கலுக்கு ரீலிஸ் செய்யப்பட்ட படங்களில் ஒன்றான அல்லி அர்ஜுனா வெளியிடப்பட்டு இரண்டாம் நாள் காட்சிக்கு ஆறு பேர் மட்டுமே வந்திருந்ததால் காட்சி ரத்து செய்யப்பட்டது.

பிரபல டைரக்டரான பாரதிராஜாவின் மகன் மனோஜ் கதாநாயகனாக நடித்த இப் படத்தை அமர்க்களம் புகழ் சரண் இயக்கியுள்ளார்.

தேனியில் ஓர் திரையரங்கில் வெளியிடப்பட்ட இப்படத்தின் உரிமையாளர், வாசலில் தோரணம் மாவிலை கட்டி, கேபிற் டிவி. மூலமும் ஆட்டோக்கள் மூலமும் மிகவும் அட்டகாசமாக விளம்பரப்படுத்தியிருந்தார். எனினும், இதன் இரண்டாம் நாள் காட்சிக்கு 6 பேர் மட்டுமே வந்திருந்ததால் தியேட்டர் உரிமையாளரால் காட்சி ரத்து செய்யப்பட்டது. இவ்வாறு காட்சி ரத்து செய்யப்பட்டது சமிப காலத்தில் இது தான் முதல் தடவை என கூறப்படுகிறது.

மும்தாஜ்

மும்தாஜ் என்ன மும்தாஜ்... வருகிறாரே கும்தாஜ்!!!

'கவர்ச்சி கன்னி' மும்தாஜ் தனது படத்தில் நடிக்க முரண்டு பிடித்ததால் ஆத்திரமடைந்த டைரக்டர் பாபு கணேஷ், புரட்சிகரமான முடிவை எடுத்தார்.

மும்தாஜ் இல்லாவிட்டால் என்ன, அவரை விட சூப்பர் பிகரை பிடித்துக் காட்டுகிறேன் பார் என்று சவால் விட்ட அவர் கும்தாஜ் என்ற பெயரில் கேரளத்து குட்டி ஒன்றை கோடம்பாக்கத்திற்குக் கூட்டி வந்திருக்கிறார்.

முகத்தைத் தவிர மற்ற எல்லா 'அம்சங்களிலும்' மும்தாஜை நினைவுபடுத்துகிறார் இந்த கும்தாஜ். 'இரவுப் பாடகன்' என்ற பெயரில் தான் எடுக்கப் போகும் படத்தில் கும்தாஜை ஹீரோயினாக நடிக்க வைக்கப் போகிறார் பாபு கணேஷ்.

பாபு கணேஷ் எதிர்பார்ப்பதை விட (அவர் மட்டுமா?) கூடுதலாகவே கவர்ச்சியாட்டம் ஆடியிருக்கிறார் கும்தாஜ் என்கிறார்கள். அவரது ஒத்துழைப்பைப் பார்த்து வியந்து போன பாபு கணேஷ் தனது அடுத்த படமான (அட) 'பிளஸ்' என்ற படத்திலும் கும்தாஜுக்கு ஹீரோயின் வேஷம் கொடுக்க முடிவு செய்து புக் செய்து விட்டாராம்.

சபாஷ், சரியான போட்டி!

ஜோதிகா

முகப்பில்

மாதவன் மாளவிகா

லைலா

விடியல்

ஐயகோ...
உலகம் இருண்டு
கிடக்கின்றதே என்று
தன்னையே
தீ வைத்துக்கொண்டு
அந்தச் சூரியன்
பவனி வருகிறானே!
***
இங்கோ
இன்னமும்
உறங்கிக் கிடக்கின்றனவே
இந்த விழிகள்!
என்றாலும்
கண்கள் திறப்பது
மட்டுமல்ல
உணர்வுகளின் சூட்டில்
உள்ளங்கள் பிரகாசிப்பதுதான்
விடியல்!
***
இன்னும்
உலகம்
அதிசயங்களாலும் அளப்பரிய
சாதனைகளாலும்
அலங்கரிக்கப்படவில்லை!
அது
அக்கிரமங்களாலும்
ஆக்கிரமிப்புகளாலும்
அழிக்கப்படுகின்றது!
உடல்களின் அசைவால்
அல்ல-நம்
உயிர்களின்
புரிந்துணர்வில் தான்
உலகம் அர்த்தப்படும்!

வே.கர்ணாநிதி-
டயகம கிழக்கு.

காலங்கள் தாண்டி

விரல்சூப்புகையில்
வெட்கப்பட்டு
உன் முந்தானைக்குள்
முகம் மூடிய
ஐந்து வயது காலம்!
***
அவசரப்பசியில்
அவிக்காத இட்டிலியை
வேகமாய் விழுங்கி
வேதனையெடுத்த
வாய்க்கு,
தேன்கொடுத்து
துயிலச்செய்தாயே
தாயே
அந்த ஆறுவயது காலம்!
***
பெரியக்கா
பெரியவளாக...
பொறுப்புகள் கூடியதாய்
நீ கூறி...
என்னை தள்ளிவைத்து
தனியனாக்கிய...
என் எட்டுவயது காலம்!
***
பருவமாற்றத்திற்கான,
பக்குவம் சொல்ல
நீயில்லாமல்...
நிர்க்கதியனாய்,
தூரமாயிருந்த
பள்ளியில்
பாடம் படித்த
பதிமூணு வயது காலம்!
***
எப்போதாவது
விடும்விடுமுறையில்
கூட்டமாயிருக்கும்
நம்
குடும்பத்திற்கிடையில்
நிகழும்
சந்திப்புகளில்
எனக்காய் ஒரு கணமும்
நீயில்லாதிருந்த
இருபது வயது காலம்!
***
இத்தனை காலங்கள் தாண்டி
இன்று...
அலை கடலுக்கு
அப்பாலிருந்தாலும்,
எல்லோருமிருந்தாலும்,
அம்மா...
நீ அருகிலில்லாததால்,
அனாதைக்கால,
அவஸ்தைகள்தான்
அதிகமாயிருக்கிறது...
***
எப்போதாவது,
நீ
ஓய்ந்திருக்கையில்
சொல்லிவிடு தாயே!
நான்
தாவிவந்து
விரல் சூப்பி
உன்
முந்தானையால்
முகம் மூடிக்கொள்கிறேன்...

ஆகஸா-கத்தார்.

உன் விருப்பதுவென்றால்...

அறுப்புக்குப்பின்
எரித்துவிட்டுப் போன வயலாய்
தீஞ்சு கிடக்கின்றது
என் மனது.
***
இறகின் தடவுதல்களாயிருந்த
உன் குரலில்
எப்போது சிலிம்பியது
விகாரமுற்ற
வார்த்தை முட்கள்?
***
தூரத்தேயிருந்து எறிந்ததாலா
செத்துப்போகுமென் முகம்பற்றிய
கவலைகூட
இல்லாது போயிற்று?
ஓ!
உனக்குத்தான்
என் முகமே தெரியாதே
பிறகெப்படி
இதயத்தில் வலி எடுக்கும்?
***
ஒதுக்கித் தள்ளிய பின்னும்
ஓயாது அழைப்பெடுக்க
நான் நாடியதெல்லாம்
காதலையல்ல
அழுக்குறா நட்பைத்தான்
ராவுகளையெல்லாம்
(ஜீ)ரணிக்காது
அவஸ்தைப் படுத்தவா
வன்னியிலிருந்து
வளாகம் வந்தாய்?
***
என் மொழிகள்
நாகரீகத்தின்
எல்லையைத் தாண்டியிருந்தால்
இனிமேல்
மௌனத்தில் பேசிக்கொள்கின்றேன்
உன்னுடன் மட்டுமல்ல
உலகத்துடனேயே
ஒரு குயிலை
ஊமையாக்கிய சந்தோசத்தோடு
உறங்கப்போ
உன் விருப்பதுதானே.

தர்ஷினி-மட்டக்களப்பு.

ஒருநாள் கழிந்தது...

அதிகாலை-12.
விடியலை புரியாத-நான்
புதைக்கப்படாத
ஹிருதயம் அடிக்கும் சவம்
***
அதிகாலை-3
பனித்துளி பூவுடன்
சலனித்திருக்கையில்
நான் என் படுக்கையுடன்
சண்டை
***
அதிகாலை-6
கடன்களுடன் ஆரம்பிக்கும்
நாளை-கடனே
என வரவேற்க
முயற்சி
***
காலை-9
புரிபடாத புத்தகங்களுடன்
புதிர்களை போடும் ஆசானுக்கு
துஷ்டனாய் தூர நின்று
வேடிக்கை.
***
மதியம்-12
இரைப்பையில் இருந்து
இறக்கப்பட்ட உணவை
நிரப்பும் முயற்சியில்
'கன்டீனில்' இடம் தேடி
அவஸ்தை.
***
பின்னேரம்-3
ரியூசன் மோகத்தில் பட்ட
பெற்றோரின் துரத்தலுக்கு
துறவறம் செல்ல துடிக்கும்
மனதுடன்-அலங்காரம்
***
மாலை-6
சச்சின் 'ஸ்டைலுடன்'
பேட்டுடன் நிற்கும்
என்னை-முரளியாய்
"கிளீன் போல்டாக்கும்-அவனை
பாராட்ட முயற்சி
***
இரவு-9
படி படி என்று அம்மா
பாடும் பாட்டை
ரகுமானின் ஸ்டைலில்
இசையமைத்து-வெற்றி
பெற்ற மனதுடன்
படுகையுடன் சமசரம்பண்ணி
மீண்டும் சவமானேன்.

அமி-கல்முனை.

விளக்கொன்றின் விருப்பம்

சிலமாதங்களின் முன்னர்தான்
விடுதலை கிடைத்து
வீடு திரும்பினர் மக்கள்
முற்றத்து மண்ணில்
முகம் புதைத்துக்கிடந்தது
அந்த அனாதை விளக்கு!
அங்கே வந்த ஓர்
ஆன்மீகச் சிறுவன்
அதை எடுத்தான்
"இல்லை! விடு விடு
கருணையை
கல்லில் தேடும் மனிதா!
உண்மையைத் தொலைத்துவிட்டு
பொய்களைப்பாடும் உனக்காக
உன் விக்கிரகங்களுக்கு
என்னால் வீணாய் வெளிச்சம்தர
முடியாது விடுவிடு" என்று
விளக்கியது விளக்கு
கோபித்த சிறுவன் வீசினான்
வீழ்ந்து கிடந்தது-மீண்டும்
வேதனையோடு மண்ணில்...
அங்குவந்தான் ஒரு
வறுமைப்பட்ட, பித்தளை வியாபாரி
பொன்கிடைத்ததாய் எடுத்தான்
போராடியது விளக்கு
"உன்பொருளுக்காக என்னால்
உருகமுடியாது என் உடம்பு
மண்ணுக்குள் மடிந்தாலும்
பரவாயில்லை" என்றது
ஒரு விவசாயி
கண்டான்; மகிழ்ச்சிகொண்டான்
தீபாவளிக்கு உதவும் என்றபடி
குனிந்தெடுத்தான்
"விட்டுவிடு உன்வீட்டில்
இருளைத்தான் பிரசவிப்பேன்
போ!" என்றது.
விளங்காத விவசாயி
தலை சொறிந்தான்
போனதிசை போனான்
அந்த வீட்டுக்காரர்கள்
இன்றுதான் வந்தார்கள்
அழுதுகொண்டு
சுவரில் படம் ஒன்றை
மாட்டினார்கள்
இளையமகன் குனிந்தெடுத்தான்
விளக்கை-விளக்கினான்
எண்ணையூற்றி திரியிட்டு
படத்துக்கு ஏற்றினான்;
போராளித் தோழர்கள் சிலர்
மௌனமாக நின்றனர்
விளக்கும் வெளிச்சத்தை
மௌனமாகவே
பிரசவித்துக்கொண்டிருந்தது..!

என்.தனுசுஜன்-சண்டிலிப்பாய்.

பேனா நண்பர்கள்

பெயர்: ம.ஆயிசா பானு,
வயது: 23
முகவரி:
ஸ்டேஸ்புர ஸ்ரேஜ்,
134/105, முனிசிப்பல்
வீட்டுத் திட்டம்,
ஸ்டேஸ் வீதி,
கொழும்பு-14.
பொழுது போக்கு:
பத்திரிகை, வானொலி.

பெயர்:
ஏ.எச்.எம்.இர்சாத்,
வயது: 17
முகவரி:
148, K.K.P.Road,
Kalmunai-03.
பொழுது போக்கு:
பத்திரிகை,
வானொலி, ரி.வி.



பெயர்:
ஏ.ஐ.சுரேஷ்கமல்
வயது: 28
முகவரி:
வெவஸ்ஸ குரூப்
பதுளை.
பொழுது போக்கு:
வழமையானவை.

தேன்கிண்ணம்

இன்றைய நாளில் கணவனும், மனைவியும் வேலைக்குப் போய் சம்பாதிப்பது என்பது நடைமுறை வழக்கமாக இருக்கிறது. பொருளாதார அமைப்பிலும் இருவருடைய வருமானம் அவசியமாகத் தேவைப்படுகிறது.

கணவன்- மனைவி இருவரும் அலுவலகம் சென்றுவிட்டு, வீட்டிற்கு வரும் பொழுது அவர்களுடைய மனநிலை எவ்விதம் இருந்தால் இல்லறம் நல்லறமாகத் திகழும் என்பதனைத் தெரிந்து கொள்ள வேண்டும். முதலில் உணர்ந்து கொள்ள வேண்டியது என்வென்றால்:-

அன்பு, பண்பு, பாசம், பொறுமை, உழைப்பு, புரிந்து கொள்வது, மனம்விட்டுப் பேசுவது போன்ற உணர்வுகளால் கட்டப்பட்டிருக்கும் கட்டடம்தான் இல்லறம்.

அலுவலகத்திலிருந்து வீட்டிற்கு வரும் பொழுது முன் அறையில் காலணிகளைக் கழற்றி வைப்பது போல அலுவலகச் சிந்தனைகளையும் அங்கேயே அகற்றிவிட வேண்டும்.

அங்குள்ள பிரச்சனைகளை நெஞ்சில் சுமந்து கொண்டு வந்து வீட்டிலும் மனப்பாரத்துடன் இருக்கக் கூடாது. அலுவலகமும் வீடும் ஒன்றல்ல. இரண்டும் வெவ்வேறானவை. வீட்டிற்கு என்று சில அமைப்புகள் உண்டு.

வீட்டிலும் பெற்றோர் சகோதர, சகோதரி இருந்தாலும் அவர்களுடைய மனப்போக்கிற்கு ஏற்ப நடந்து கொள்வது மிகவும் அவசியமாகும். அலுகலகத்திலிருந்து வீட்டுக்கு வரும்பொழுது முகத்தில் சோக ரேகைகளைப் பதித்து கொண்டு வர வேண்டாம்.

இந்தச் சோக கீதம் வீட்டிலுள்ளவர்களையும் சோக கீதம் பாடச் செய்யும். அதனால் முகமலர்ச்சியுடனும் மனக் குளிர்ச்சியுடனும் வீட்டிற்குள் காலடி எடுத்து வைக்க வேண்டும். மனைவியும் நம்மைப் போல பணியாற்றி விட்டு வருகிறாள் என்பதனைப் புரிந்து கொள்ள வேண்டும். மன உணர்வுகள் எல்லோருக்கும் உண்டு. அதற்கு மதிப்புத் தருவது அவசியம். வீட்டிற்குள் நுழைந்ததுமே கூப்பாடு போடுவதும் கோபம் காட்டுவதும் அறவே கூடாது.

வீட்டில் சில பொருட்கள் அலங்கோலமாக இருந்தால் அதனைப் பார்த்து உணர்ச்சி வசப்பட்டு கடுமையான வார்த்தைகளைப் பயன்படுத்தக்கூடாது. கோபமான சொற்கள் இன்பமான சூழ்நிலையை மாற்றிவிடும்.

இன்பமாக இனிமையாகக் கழிய வேண்டிய நேரம் துன்பமாக சோகக் கடலாக மாறிவிடும். இனிமைச் சூழ்நிலையை முற்றிலும் அகற்றுவது எது என்றால் அது கோபம் தான். அதனால் கோபம் கொள்ள வேண்டாம்.

எதிலும் நிதானமாக நடந்து கொள்வது நல்லது. வீட்டிலுள்ளவர்களுக்கு பிரச்சனைகள் இருக்கக்கூடும். நமக்கு மட்டுமே பிரச்சனை உண்டு என்ற எண்ணத்தில் இருக்கக் கூடாது.

வீட்டிற்குள் வந்தவுடனேயே குளித்து விட்டு ஆடையை அணிந்து அமைதியாக உட்கார்ந்தாலே மன இறுக்கம் தளர்ந்து விடும். மனச்சோர்வு எல்லாவற்றுக்கும் அடிப்படையாக அமைகிறது. அதனை அகற்றி விட்டால் மகிழ்ச்சியுடன் இருக்க முடியும்.

பிரச்சனை இருக்கிறதே அதனை எப்படிப் போக்குவது என்று மலைத்துவிட வேண்டாம். ஒவ்வொரு வீட்டிலும் பிரச்சனை உண்டு. அதனை மனம் விட்டுப் பேசி தீர்த்துக் கொள்ள முடியும்.

மௌனமாக இருப்பதன் மூலம் பிரச்சனையைப் போக்கிட முடியாது. மனைவி நல்ல துணைவி என்று எண்ணி பிரச்சனையை பற்றி விவாதித்து நல்ல முடிவுக்கு வரவேண்டும் கடுகடுப்பான முகம் என்றைக்குமே பிரச்சனைக்குத் தீர்வு தராது.

மகிழ்ச்சியான முகமே எதனையும் எளிதாகத் தீர்வு காண வைக்கும். அலுவலகப் பளுவை மனதில் சுமந்து கொண்டு வந்து விடக்கூடாது. மனைவி கூறும் விஷயத்தையும் காது கொடுத்து கேட்க வேண்டும்.

இல்லத்தில் எப்பொழுதும் இன்பக் காற்று வீசிக் கொண்டிருக்க வேண்டுமானால் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுத்தும் அனுசரித்தும் போக வேண்டும். அதனால் தான் குடும்பம் ஒரு கோவில் என்ற புனிதமானப் பெயரைப் பெற்றது.

இல்லறம் நல்லறமாகத் திகழ்வதற்கு நாமே காரணம் என்பதனை உணர்ந்து அதற்கு ஏற்றபடி நடந்து கொண்டால் நிச்சயம் குடும்பம் குதூகலமாகத் தான் இருக்குமே தவிர குறையாக, மனச்சிறையாக இருக்கவே இருக்காது.

இந்தவாரம் உங்கள் பலன்

27.01.2002தொடங்கி 02.02.2002வரை

கிரக நிலை

மகரம்	- சூரியன், புதன், வெள்ளி.
மீனம்	- செவ்வாய்.
இடபம்	- சனி., இராகு
மிதுனம்	- வியாழன்
விருட்சிகம்	- கேது.

சந்திரன்-மிதுனம், கர்க்கடகம், சிங்கம், கன்னி இராசிகளில் இந்த வாரம் சஞ்சரிப்பார்.

மேடம்:
(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்) பலவித பேறு, மனக்கவலை குறையும். பொருள்வரவும், காரியானுகூலமும் ஏற்படும். உத்தியோகஸ்தர்கள் தமது பதவிகளில் மாற்றங்களை பெறுவர். மாணவர்களின் கல்வியில் மாற்றம் உண்டாகும். விவசாயிகள் வியாபாரிகள் திட்டமிட்டு கருமமாற்றுவது நல்லது.
அதிஷ்ட நாள்: வியாழன்.
அதிஷ்ட இலக்கம்: 07.

இடபம்:
(கார்த்திகை பின் முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை,) பெரியோர் சகவாசம், அன்னியர் உதவியுண்டு, வார இறுதியில் பொருள் கஷ்டம் ஏற்படும். உத்தியோக ரீதியாக ஏற்பட்டிருந்த தடைகள் மறையும். மாணவர்கள் கல்வியில் உயர்ச்சி பெறுவர். விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

மிதுனம்:
(மிருக சீரிடத்துப் பின்னரை, திருவாதிரை புனர்பூசத்து முன்முக்கால்,) புதிய முயற்சிகளில் வெற்றியுண்டு. பொருள்வரவு காரியசித்தி ஏற்படும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்பினால் கஷ்டம் உண்டாகும். மாணவர்கள் கல்வியில் கூடிய முயற்சி எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 06.

கர்க்கடகம்:
(புனர்பூசத்து நாலாங்கால், பூசம் ஆயிலியம்) எடுத்த கருமங்களில் சிறுதடையுண்டு. பொருள் வரவு திருப்தி தரும். நண்பர்களால் சிலர் ஏமாற்றப்படுவர். உத்தியோகத்தில் சிறு பிரச்சனை தோன்றி மறையும். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனமெடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் இலாபம் அடைவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 05.

சிங்கம்:
(மகம், பூரம், உத்திரத்து முதற்கால்,) கருமங்கள் தாமதமாகும். குடும்பத்தில் வீண் பிரச்சனையொன்று ஏற்படும். பணவரவு வார இறுதியில் திருப்தி தரும். உத்தியோக ரீதியாக முன்னேற்றம் உண்டு. விவசாயிகள், வியாபாரிகள் முதலீடுகளில் அவதானமாக இருப்பது நல்லது.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

கன்னி:
(உத்தரத்து பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை,) உறவினர் பகை, மனக்கலக்கம், அன்னியர் உதவி, கௌரவம், குடும்பசிக்கல், உத்தியோக கஷ்டம், மாணவர்கள் கல்வி மேன்மை, விவசாயிகள், வியாபாரிகள் முதலீட்டு இலாபம் உண்டாம்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 03.

சோதிட மாமணி தில்லை

துலாம்:
(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன்முக்கால்,) வெளியிட பிரயாணம், குடும்ப மகிழ்ச்சி, கணவரால் கவலை, செலவு மிகுதியுண்டு. உத்தியோகஸ்தர்கள், கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வி மந்தமடையும். விவசாயிகள், வியாபாரிகள் உரிய இலாபமடைவர்.
அதிஷ்ட நாள்: செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 07.

விருட்சிகம்:
(விசாகத்து நாலாங்கால், அனுஷம் கேட்டை,) முயற்சி பலிதம், குடும்பசுகம், தேகாரோக்கியம் பாதிப்பு, பொருள் வரவுண்டாம். உத்தியோகத்தில் ஏற்பட்டிருந்த பிரச்சனைகள் மறையும். மாணவர்கள், கல்விச் சிறப்படைவர். விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்: புதன்.
அதிஷ்ட இலக்கம்: 01.

தனு:
(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்) கருமங்களில் வெற்றியும், காரியானுகூலம், பொருள் சிறப்பு, அன்னியர் உதவியுண்டாம். உத்தியோகத்தில் சிலர் வீண் சிரமங்களுக்கு ஆளாகுவர். மாணவர்களுக்கு கல்வியில் உயர்ச்சியுண்டு. விவசாயிகள், வியாபாரிகள் மத்திம இலாபமடைவர்.
அதிஷ்டநாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 02.

மகரம்:
(உத்தராடத்து பின்முக்கால், திருவோணம் அவிட்டத்து முன்னரை,) முயற்சிகளில் வெற்றி, சந்தோஷமிகுதி, பெரியோர் நன்மை, கடன் பயம் உண்டாம். உத்தியோகத்தில் பதவி உயர்வுகளுக்கு இடம்தரும். மாணவர்களுக்கு கல்வியில் சிறப்பு ஏற்படும். விவசாயிகள் வியாபாரிகள் முதலீடுகளில் கூடிய கவனம் எடுக்கவும்.
அதிஷ்ட நாள்: வெள்ளி.
அதிஷ்ட இலக்கம்: 04.

கும்பம்:
(அவிட்டத்து பின்னரை, சதயம், பூரட்டாதி முன்முக்கால்,) இனசன நன்மை, காரியசித்தி, பிரயாண மிகுதி, பொருள் விரயம், அன்னியரால் தொல்லையுண்டு. உத்தியோகத்தில் வீண் சிரமங்களை சிலர் எதிர்கொள்வர். மாணவர்கள் கல்வியில் கூடிய கவனம் எடுப்பது நல்லது. விவசாயிகள், வியாபாரிகள் குறைந்த இலாபம் பெறுவர்.
அதிஷ்ட நாள்? செவ்வாய்.
அதிஷ்ட இலக்கம்: 06.

மீனம்:
(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி ரேவதி,) பெரியோர் பகை, வீண் கலக்கம், பொருள் விரயம், கடன் பயம் குடும்பத்தில் எதிர்பாரா செலவுண்டு. உத்தியோகஸ்தர்கள் எதிலும் கவனமுடன் செயற்படுவது நல்லது. மாணவர்களுக்கு கல்வியில் மந்தநிலை காட்டும். விவசாயிகள், வியாபாரிகள் கூடிய முதலீடுகளை தவிர்த்துக் கொள்வது நல்லது.
அதிஷ்ட நாள்: திங்கள்.
அதிஷ்ட இலக்கம்: 04.

தாய் தெரிந்திருக்க வேண்டிய குழந்தைகளின் மனோநிலை

குழந்தைகளைப் பராமரிப்பது என்பதும் ஒரு கலையே, அந்தக் கலையை தாய்மார் தெரிந்திருப்பது மிக அவசியம்.

குழந்தை தவழுமுன்னே தாய் இன்னொரு குழந்தையைப் பெற்றால் 5 வயதுக் குழந்தைகூட கவலை கொள்ளும். இதற்கு மனோநிலை ஒரு காரணம். தன்னை ஆராட்டிச் சீராட்டிப் பாராட்டிக் கொஞ்சி குலாவிய குழந்தையைத் தூக்காமல் போட்டியாக வந்த பாப்பாவைத் தூக்கும் போது, பால் ஊட்டும் போது அந்த பாப்பாவிடம் பரிவுகாட்டும் போது, பெரிய பிள்ளை ஏமாற்றம் அடைகிறது. பொறாமை கொள்கிறது. தனக்குக் கிடைக்க வேண்டிய சலுகைகள் பாப்பாவுக்குக் கிடைக்கிறதே என மனம் வெதும்புகிறது. வெறுப்படைகிறது. சரியாகச் சாப்பிடாமல் சரியாகத் தூங்காமல் மன விரக்தி அடைகிறது. இதனால் உடல் உளபாதிப்பு ஏற்படுகிறது. பெற்றோர்கள் இதனை நிவர்த்தி செய்ய வேண்டும். சவலைக் குழந்தைகளை எப்போதும் போல் தூக்க வேண்டும். கொஞ்சவேண்டும். பாராட்ட வேண்டும். சமச்சீரான சத்தான உணவுகளை அன்புடன் பரிவுடன் பாசத்துடன் கொடுக்க வேண்டும். தனிக் கவனம் செலுத்த வேண்டும். பாப்பா மேல் அந்தச் சவலைப் பிள்ளை பிரியம் கொள்ளும்படி ஆவலைத் தூண்ட வேண்டும். அப்போது நிலைமை சீர் பெறும்.

குழந்தைக்குப் போதிய தாய்ப்பால் கொடுத்திருக்க வேண்டும். புழுதி, குப்பை, அசுத்தமான இடங்களில் விளையாட விடக்கூடாது. இதனால் நச்சுக் கிருமிகள் உடலில் உட்புகுந்து சத்துக்களைச் சாப்பிட்டு விடும். குழந்தை மண் தின்னாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். மண் தின்றால் கல்லீரல் வீக்கம் காணப்பட்டு அனிமியா, ரத்தசோகை ஏற்படும். அமீபியாபோன்ற கிருமிகளால் வயிற்றுப் போக்கு உண்டாகி பலம் குன்றி விடும். ஈ மொய்த்த தின்பண்டங்களை வாங்கிச் சாப்பிடாமல் தடுக்க வேண்டும்.

உடலில் போதிய சத்துக்கள் இருக்கும்படி ஊட்டச்சத்து உணவுகளைக் கொடுக்க வேண்டும். பால், பருப்பு, கீரை, முளைக்கட்டிய வேகவைத்த தானிய உணவுகள், முட்டை, ஈரல் பழங்களில் பேரீச்சம்பழம், மற்றும் பழங்கள் கொடுக்க வேண்டும். குழந்தை மருத்துவரிடம் காட்டி தகுந்த மருத்துவம் பார்க்க வேண்டும். விட்டமின் ஏ சத்துள்ள மீன் எண்ணெய், மீன் 'பி' 'ஸி' விட்டமின்கள் நிறைந்த உணவுகளையும் இரும்புச்சத்து மிகுந்த கீரைகள் போன்ற உணவுகளையும் கொடுக்க வேண்டும். குழந்தைகளைக் குளிப்பாட்டி சுத்தமாகவும் சுகாதாரமாகவும் வளர்க்க வேண்டும். மருத்துவர் உதவியுடன் கிருமிக்கு மருந்து கொடுத்து கிருமிகளை வெளியேற்ற வேண்டும். ●

1வது அதிஷ்டசாலி இவர்தான்

செல்வாஸின் சல்வார் பரிசுப் போட்டியில் முதலாவது அதிஷ்டசாலியாகத் தெரிவுசெய்யப்பட்ட செல்வி ஜோ. சோபினிக்கு செல்வாஸ் நிறுவன உரிமையாளர் திரு.பி.எஸ்.செல்வரட்னம் அவர்கள் பரிசினை வழங்குவதை படத்தில் காண்கிறீர்கள்.

செல்வாஸின்
சல்வார் பரிசுப் போட்டி

நவநாகரீக மங்கையர்
தரமான சல்வார்களுக்கு
தலைநகரில் நாடும் ஒரே இடம்

SELVAS

No. 4, Nelson Place (Near H.N.B)
Wellawatta, Colombo-06. Tel: 552328

மகளிர் மட்டும் : மகளிர் மட்டும்

★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே சல்வார் பரிசு வழங்கப்படும்.
★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)
★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்

பெயர்:.....
முகவரி:.....
.....
தொழில்:.....

உண்மை–நேர்மை–வெளிப்படைத் தன்மை

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப் படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 02- 02-2002
அனுப்பவேண்டிய முகவரி:- 'செல்வாஸின் வாரம் ஒரு சல்வார்', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.

இந்த வாரம் யாருக்கு சல்வார்?
வவுனியா வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் சல்வார் பரிசுபெறும் வாசகி இவர்தான்

மகேஸ்வரன் பாரதி,
ஆஸ்பத்திரி வெளி வீதி, 43 குடியிருப்பு, வவுனியா.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்
அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!
இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

நவீன எழுத்துலக வேந்தன்
சுஜாதா

"ஏய், சும்மாரு வாயை வெச்சுக்கிட்டு!" என்று அதட்டினான் துரை.

"அவங்க எங்க இருக்காங்க?"

"ப்ளூ அவஸ்' லங்க!"

"இந்த காம்பௌண்டுல எத்தனை வீடுங்க இருக்குது?"

"மொத்தம் பத்துங்க.. இன்னும் முணு கட்டிக்கிட்டிருக்காங்க!"

"மொத்தம் எத்தனை பேருங்க மகன், மகள்?" என்று அனிதா கேட்க...

வேணி அவளை ஆச்சரியத்துடன் பார்த்து, "உங்களுக்குத் தெரியாதா?" என்றாள்.

"நிஜமாவே தெரியாது!"

"முதல் சம்சாரத்துக்கு முணுங்க. வைரவன் ஐயா தாங்க ஒரே மகன். அப்பறம் சிவகாமியம்மா, மதியம்மா... மதியம்மா வடைய மகள்தான் சிதாரா. சிவகாமியம்மா வோட மகள் அபி. ரெண்டாவது சம்சாரம் சரோஜாம்மா, அவங்களுக்கு ரெண்டு பொட்டைப் புள்ளைங்க.. 'லவ் டேல்'ல படிக்கிறாங்க. கல்யாணத்துக்கு வந்திருந்தாங்களே... பார்க்கலை? சரோஜாம்மா வோட தம்பிங்க ரெண்டு பேர் இருக்காங்க... அவங்களுக்குக் கல்யாணமாயிடுச்சு..."

"வைரு என்னைத்தான் கல்யாணம் செய்துக்கறதா இருந்தது. வெயிட் பண்றேன்னு நான் சொன்னேன். அதுக்குள்ள உன்னைப் பார்த்துட்டான். மனசு மாறிட்டான். அதனால என்ன இப்போ..? வாழ்க்கைல இதெல்லாம் சகஜம்..." என்றாள்.

"சிதாரா!" என்று உள்ளேயிருந்து அதட்டலாகக் குரல் கேட்க, "மம்மி கூப்பிடறாங்க. நான் போறேன். வைரு இஸ் எக்ரேட்... க்ரேட் லவர்... ஒரு தடவை எங்க வீட்டுக்கு வா... போட்டோ எல்லாம் காட்டறேன்!" என்று அனிதாவின் அருகில் வந்து கண்ணடித்துவிட்டுப் போனாள் சிதாரா. அமெரிக்காவுக்கே உரிய கோலோன் வாசனை அடித்தது.

அனிதா குழப்பத்துடன் அறைக்குச் சென்று, தன் கதவைச் சாத்திக் கொண்டு உடைகளைக் களைந்துவிட்டு, பாத்ரூம் தொட்டியில் தண்ணீர் நிரப்பிக் கொண்டு அதில் மிதந்தாள்.

ஆயிரத்தெட்டு ஷாம்புக்களும் கண்டிஷனர்களும் லோஷன்களும் வாசனைப் பொடிகளுமாக, குளிப்பதையே ஒரு வாழ்நாள் கலையாக்கும் அளவுக்குத் திரவியங்கள் இருந்தன. அவற்றைத் தேய்த்துக் கொண்டு அனிதா லேசாகப் பாட ஆரம்பிக்க, கதவு மெள்ளத் திறந்தது!

அனிதா தன் அறை பாத்ரூம் தொட்டியில் தண்ணீரில் மிதந்து கொண்டிருந்தபோது, அறைக் கதவு மெள்ளத் திறந்தது. கதவு திறந்ததும் அனிதா திடுக்கிட்டுத் தன் டவலை வேகமாக உடம்பில் சுற்றிக்கொள்வதற்குள், சிதாரா அவளை நிறைய பார்த்துவிட்டாள்.

"என்ன இது.. ரொம்ப மோசம்" என்றாள் அனிதா.

சிதாரா சகஜமாகச் சிரித்து, "என் சோப்பை எடுத்துக்க வந்தேன் கதவு திறந்திருந்தது... அதுக்குத்தான் ப்ளாஸ் டில் கார்ட்டன் எல்லாம் இருக்கு பாரு... இதை யூஸ் பண்ணத் தெரியுமா?" என்றாள்.

"கதவைச் சாத்திட்டுத்தானே வந்தேன்"- அனிதா.

"இந்த வீட்டுல எல்லா பாத்ரூமுக்கும் ரெண்டு கதவு. ஒரு தடவை வைரு என்னை முழுசா அரைமணி குளிக்கறதைப் பார்த்திருக்கான்..." என்றவள், "இதெல்லாம் சகஜம்... ஆ..ப்டர் ஆல் உடம்பதானே" என்று சிதாரா சொல்ல, அனிதா எச்சில் விழுங்கிக் கொண்டாள்.

"வைரவனுக்கு 'மாலர்'னு ஒரு செண்ட் ரொம்பப் பிடிக்கும். அதைப் போட்டுக்க.. நல்லா காதல் பண்ணுவான். ஸீ யு" என்று புறப்பட்டாள்.

அனிதா சொட்டச் சொட்ட காத்திருந்து, மேலே குளிக்கத் தைரியமில்லாமல் தொட்டியிலிருந்து இறங்கி வந்து பாத்ரூமின் அமைப்பை ஆராய்ந்தாள். இரண்டு கதவு இருந்தது.

புடவை உடுத்திக்கொண்டு காரை அழைத்தபோது பிற்பகல் மணி பன்னிரண்டரை இருக்க, அம்மாவைப் பார்க்க வேண்டும் போல இருந்தது. 'கால் காயம் ஆறியிருக்குமா... மேலும் இன்ஜெக்ஷன் போட்டுக் கொள்ள வேண்டுமா' என்று கவலையாக இருந்தது. புறப்படும் போது போன் அடித்தது.

"அனிதா, நான் மது... எங்கேருந்து பேசறேன் சொல்லு..."

"தெரியல. நீயே சொல்லு."

"உங்க கம்பெனியிலருந்துதான்."

"அப்படியா!"

"வைரவன் எனக்கு பர்மனண்டா வேலை போட்டுக் கொடுத்துட்டார். நான் எதுக்கு மேல படிக்கணும்...' அனி... எப்படி இருக்கு?"

"எது எப்படி இருக்கு?"

"கல்யாண வாழ்க்கை."

"இப்பத்தானே இரண்டு வாரம் ஆயிருக்கு,"

"போதாதா... ஒரு வாரத்திலேயே டிவோர்ஸ் பண்ணவங்கல்லாம் இருக்காங்க."

அனிதா மௌனமாக இருந்தாள்.

"சே... அபத்தமா பேசறேன். வைரவன் மேஜை மேல் அழகான உன் போட்டோவைப் பார்த்தேன். உன்னைத் தெய்வமா புஜிக்கறாரு. உங்களுக்கு மொத்தம் பதினெட்டு கெம்பனி! எனக்கு இங்க பி.ஆர். டிபார்ட் மெண்ட்ல வேலை! என்னா கம்ப்யூட்டர்.. என்னா டேட்டா பேஸ்... அப்படியே ஜொவொண்டர் வைரவன் தி கிரேட்" என்றாள் மது. தொடர்ந்து "இன்னிக்கு மத்தியானம் லஞ்சுக்கு எங்க ஸ்டா..ப் அத்தனை பேரையும் கூப்பிட்டிருக்காரு.. ஜப்பான் காரங்ககூட" என்றாள்.

"அப்படியா... சந்தோஷம்"

"அனி... நீ ஏன் ஆபீஸே வரமாட்டேங்கறே?"

"முதல்ல வீடு பழகட்டும்" என்றாள் அனிதா.

"அப்பறம்... என்ன?"

"மது... நான் அம்மாவைப்பார்க்கக் கிளம்பிண்டிருக்கேன்."

"அம்மாவைன்னா உங்கம்மாவா?"

"அமாம்."

"அவங்கள்லாம் காஞ்சிபுரம் போயிருக்காங்களே. நான்தானே ட்ரிப் அரேஞ்சு பண்ணேன்"-மது சொல்ல,

"எதுக்கு?"- வியந்தாள் அனிதா.

"கோயில் பார்க்கறதுக்கு! இப்ப உங்க வீட்ல யாரும் இல்லை!"

"எங்கிட்ட சொல்லவே இல்லையே. அம்மாவுக்குக் கால் சரியா போய்டுத்தா?"- அனிதா கேட்டாள்.

"கால்ல என்ன?"

"நாய் கடிச்சுது."

"அதைபத்தி எதும் சொல்லலை... சரியாகி இருக்கணும் அனி, ரொம்ப தனிமையா இருக்கா உனக்கு?"

"ஆமா."

"ஒரு மாறுதலுக்கு ஆபீஸுக்கு வாயேன்!"

போனால்தான் என்ன என்று தோன்றியது அனிதாவுக்கு.

'எல்லோரும் என்னை ஒதுக்கி விட்டார்களா என்ன... என்னிடம் காஞ்சிபுரம் போவதைச் சொல்லவே இல்லையே?'

வைரவனை முதலில் சந்தித்த ஆபீஸ் இல்லை அது. ஹெட் ஆபிஸ் சோளா பக்கத்தில் இருந்தது. மதுதான் அனிதாவை வரவேற்றாள். கறுப்பு வெள்ளைக் கோடு போட்ட ப்ளவுஸ் அணிந்து நீல நிற ஸ்கர்ட் போட்டுக் கொண்டு உதட்டில் லிப்ஸ்டிக் எல்லாம் தீட்டிக்கொண்டு இருந்தாள்.

"மது... நீ வேற மாதிரி இருக்கே."

"நல்லால்லையா?"

"நல்லாத்தான் இருக்கு. ஆனா..."

"ஆபீஸுக்கு இதுமாதிரி ஸூட் போட்டுக்கணும். கோட்டை ரூம்ல கழற்றி வெச்சிருக்கேன்" என்று கூந்தலைப் பின்தள்ளினாள்.

"தலையைக்கூட வெட்டிட்ட"- அனிதா சொல்ல,

"வைரவன்தான் வெட்டச் சொன்னார். கொஞ்சம் இரு ..பரீயா இருக்காரான்னு பார்க்கறேன்" என்று, அருகே இருந்த போனில் எண்களை ஒத்திவிட்டு ரகசியம் பேசுவதுபோல் கேட்டாள்.

"சிவகாமியம்மா பருஷன் எங்கே?"

"அவரு பிரிஞ்சு போயிட்டாருன்னு பேசிக்கிறாங்க... நான் பார்த்ததில்லை. தாமு ஐயாதான் கூட இருக்கிறாங்க!"

"சிதாராங்கறது?"

"அது வெளிநாட்டுல படிக்குது... கல்யாணத்துக்கு வரல. இப்பத்தான் வந்திருக்காங்க!"

அனிதாவுக்கு லெமன் ஜூஸ் கொண்டு வந்து கொடுத்துவிட்டு வேலைக்காரன், "உங்களைத் தேடிக் கிட்டிருக்காங்க. வைரவன் ஐயா போன்ல கூப்பிடறாரு..." என்றான்.

உள்ளே சென்றபோது, பான் ரிஸீவர் மேஜை மேல் வைக்கப்பட்டிருந்தது. அதை எடுத்துக் கேட்டபோது, இணைப்பு விட்டுப் போயிருந்தது. "ஹாய்" என்று குரல் கேட்டு அனிதா திரும்பிப் பார்த்தபோது, ஒரு இளம் பெண் பொம்மை பனியன் போட்டுக் கொண்டு தலை முடியை அலைய விட்டுக் கொண்டு வந்தாள். கையில் ஒரு சாம்பல் நிற பூனைக்குட்டி வைத்திருந்தாள். அவள் நடந்து வரும்போது பனியன் மட்டும்தான் போட்டிருக்கிறாள் என்பது தெளிவாயிற்று.

"'ஐ'ம் சிதாரா! யு மஸ்ட் பி அனிதா... கல்யாணத்துக்கு வர முடியலை... நான் ஸ்டேட்ஸ்ல இருந்தேன்...!" என்றாள்.

"வைரு ஒன்னைப் பத்தி ரொம்ப ரொம்பச் சொல்லிச்சு... ஆனா..." பாதியில் நிறுத்தி "..பர்கெட் இட்" என்றாள்.

"எப்படி இருக்கு... நீ நல்லா இருக்கே இல்லே... இங்கே எல்லாம் பிடிச்சிருக்கில்ல...!"

"ம்" என்றாள்.

"ஏதாவது வேணுமா?"

"வேண்டாம்!"



பாப்பா முரசு சிறுகதை

ஏன் கர்ஜிக்கிறாய்?

பசுவேனில் என்ற காட்டில் மிருகங்கள் இன்பமாக வாழ்ந்து வந்தன. அந்த காட்டின் ராஜாவாக சிங்கம் இருந்தது. அதன் எதிரில் நிற்கக் கூட எல்லா மிருகங்களும் பயந்து நடுங்கும்.

ஆனால், புலி மட்டும் சிங்கத்திற்கு நண்பனாகயிருந்தது. ஒரு நாள் இரண்டும் காட்டில் வேட்டையாட சென்றன. அப்போது மிகவும் பயங்கரமாக கர்ஜித்தது சிங்கம்.

அதன் கர்ஜனை கண்டு புலிக்கு பயம் வந்துவிட்டது. அருகில் வரும் பொழுதே அத்தனை நடுக்கமாகயிருந்தது.

"என்னடா இன்று ஒரு இரையையும் காணமே. எல்லாரும் எங்கே போய் தொலைஞ்சான்க?" என்றது சிங்கம்.

"ஆமாம் நண்பா! எல்லாருக்கும் என்ன ஆச்சுன்னு தெரியல. வரவர இவன்களுக்கு நம்ப மேல கொஞ்சம் கூட பயமே இல்லாமல் போய்விட்டது. நண்பா நான் உன்னை ஒன்று கேட்டால் தவறாக நினைத்துக் கொள்ளமாட்டாயே," என்றது புலி.

"நீ என்னுடைய நண்பன் தானே அப்புறம் எதற்காக பயப்படுகிறாய்?" என்றது சிங்கம்.

"நண்பா நீ இப்படி கர்ஜிக்கும் போது எனக்கே மிகவும் பயமா இருக்கிறது. இந்த பூமியே நடுங்குவது போல் இருக்கிறது. ஏன் இப்படி செய்கிறாய்?" என்றது புலி.

அதைக்கேட்டதும் 'ஹ..ஹா..' என்று சிரித்தது சிங்கம்.

"பிரதர் இப்படியெல்லாம் நான் பயங்கரமாக கர்ஜிக்கவில்லை என்றால் ஒரு பயலும் என்னை கண்டு பயப்படமாட்டான். எனவே ஒரு பந்தாவுக்காகதான் இப்படியெல்லாம் கர்ஜிக்கிறேன். எல்லாரும் என்னை காட்டுக்கே ராஜா என ஒப்புக் கொள்வதே நான் அப்படி கர்ஜனை செய்து என்னை விளம்பரப்படுத்திக் கொள்வதால் தான்," என்றது சிங்கம்.

"அப்படியா நீ சொல்வதும் சரி தான். இந்தக் காலத்தில் எதற்கெடுத்தாலும் விளம்பரம் வேண்டியிருக்கிறது," என்றது.

இவர்கள் இப்படி பேசிக் கொண்டிருந்ததை அருகில் இருந்த புதரில் மறைந்திருந்த முயல் ஒன்று கேட்டது. 'அப்படியா விஷயம்? சிங்கம் புகழுடன் இருப்பதற்கான காரணம் இப்பொழுது தெரிந்துவிட்டது. இனி நானும் என்னை விளம்பரப்படுத்தி கொள்ள போகிறேன். அப்பொழுது தான் என்னையும் மதிப்பர்' என்று நினைத்து கொண்டது.

சிங்கமும், புலியும் அந்த இடத்தை விட்டு சென்றதும், முயல் தன்சக்தியை எல்லாம் பயன்படுத்தி கத்த ஆரம்பித்தது. அப்பொழுது வேறு பக்கமாக வந்து கொண்டிருந்த ஓநாயின் காதில் இந்த சப்தம் கேட்டது.

உடனே புதரை நோக்கி பாய்ந்து வந்து முயலை கடித்து குதறியது. சாகும் போது தான் முயலுக்கு புத்தி வந்தது. 'விளம்பரப்படுத்தி கொள்வதற்கும் ஒரு தகுதி வேண்டும். அந்த தகுதி இருந்து விளம்பரம் செய்து கொண்டால் தான் மதிப்பு. சிங்கத்தின் உடம்பில் வலிமை இருந்தது. எனவே, அது விளம்பரப்படுத்திக் கொண்டாலும் மதிப்பு இருக்கு. அப்படி இல்லாதவர்கள் விளம்பரப்படுத்தினால், தனக்கு ஏற்பட்ட கதி தான் அவர்களுக்கு ஏற்படும்' என்பதை உணர்ந்தபடியே உயிரை விட்டது முயல்.

உங்களுக்கு வேண்டிய நீதியை முயலாரே சொல்லிவிட்டார். அப்புறம் நான்வேறு சொல்ல வேண்டுமா?



படத்தில் இருப்பது என்ன என்பதை கோடுகளை இணைத்துக் கண்டு பிடியுங்கள்.

சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **02.02.2002.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **431**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 429

பரிசுக்குரியவர்:
கே. என். நிரஞ்சன்,
ஆர்.டி.எஸ். வீதி, அரசடித்தீவு, கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.

பாராட்டுக்குரியவர்கள்:

ம.லீகிதரன், புதுக்குடியிருப்பு-05, ஆரையம்பதி.	யு. மயுரன், தன்னாமுனை புனித வளனார் ம.வி., மட்டக்களப்பு.
கந்தசாமி நிதர்சன், கடற்கரை வீதி, ஒந்தாச்சிமடம், களுவாஞ்சிகுடி.	எஸ். மகிந்தகுமார், பாசிக்குடா வீதி, கல்குடா.
திவ்யா மோகன்ராஜ், லேடீஸ் கல்லூரி, கொழும்பு-07.	சு.சத்தியதர்ஷன், சரஸ்வதி கனிஷ்ட வித்., பதுளை.
க. தர்சன், விபுலானந்த வி., பாண்டாரி குளம், வவுனியா.	ம.சுகாசினி, அட்டப்பள்ளம், நிந்தவூர்-10.
த.தனுஷியா, றோ.க.த.க.வி., கொழும்பு-04.	ஷப்னா சுஹைல், வெலித்தர முஸ்லிம் மகா வித்., பலப்பிட்டிய.

விடுகதைகளும் விடைகளும்

1. நீந்தத் தெரியும் மீனல்ல, நடக்கத் தெரியும் மனிதனுமல்ல -அதுயார்?

2. வாயில்லாதவனுக்கு உடம்பெல்லாம் பல். அவன் யார்?

3. உருவமில்லாதவன் ஊரெல்லாம் சுற்றுவான் அவன் யார்?

4. உடலில் கையில்லை. முகத்தில் மட்டும் பெரிய கை உண்டு. -அது என்ன?

5. ஆழ குழி தோண்டி அதிலே ஒரு முட்டையிட்டு, அண்ணாந்து பார்த்தால் ஐம்பது முட்டைகள், அது என்ன?

6. ஏழு ஊரை சுமப்பான். ஆனால் வீதிக்குள் வர மாட்டான் அவன் யார்?

7. கருப்புச் சட்டைக்காரன் காவலுக்குக் கெட்டிக்காரன். அவன் யார்?

8. சிவப்புப் பையில் அளவில்லா பொற்காசுகள். அது என்ன?

9. தீப்பட்டால் சிவப்பக்காள், நீர் பட்டால் கருப்பக்காள். அவள் யார்?

10. வாலுள்ளவன் காற்றுக்குப் பறப்பான், அவன் யார்?

விடைகள்

1. வாத்து. 2. சீப்பு. 3. காற்று. 4. யானை. 5. ஒதுண்ணை. 6. ஒரூலி. 7. பூட்டு. 8. மிளகாய் வத்தல். 9. அடுப்புக்கரி. 10. பட்டம்.

தொகுப்பு: சத்தியா-கொழும்பு.

கம்பியூட்டர் சிதறல்

★ ஜாவா தொழில்நுட்ப அடிப்படையில் இயங்க இருக்கும் செல்லுலர் தொலைபேசியே ஜாவாபோன் என்று பெயர். கையளவு கம்பியூட்டர், கேபிள் டி.வி, கார் கம்பியூட்டர்கள் போன்றவற்றில் இந்த தொழில் நுட்பம் பயன்படுத்தப்பட ஆய்வு நடந்து வருகிறது.

★ செல்லுலர் போன், மொபைல் போன் போன்று வயர்லெஸ் லேன் முறையான டிஜிட்டல் கம்யூனிகேஷன் தொழில்நுட்ப முறையில் அறிமுகப்படுத்தப்படவிருக்கிறது. இந்த முறை ஆரம்ப காலத்தில் ராணுவத்தினர் ஒருவரை ஒருவர் தொடர்பு வைத்துக்கொள்வதற்காக டைரக்ட் சீக்வென்ஸ் ஸ்ப்ரேட் ஸ்பெக்டரம் என்ற தொழில் நுட்ப முறையை பயன்படுத்தினதின் அடிப்படையாகும்.

★ அமெரிக்காவை சேர்ந்த மோட்டாரோலா என்னும் நிறுவனம் எஸ்.எம் 56 என்ற பெயரில் சாஃப்ட்வேர் மோடம் ஒன்றை அறிமுகப்படுத்தியிருக்கிறது.

★ காம்ஸர்ச் இந்தியா நிறுவனம் மெடின்ஃபோ மருத்துவ தகவல் மையம் தொடங்கியுள்ளது. இதில் மருந்துகள், மருத்துவமனை, மருத்துவர்கள் போன்ற தகவல்கள் கிடைக்கிறது.

★ ஜப்பானின் ஸீக்கோ நிறுவனம் ரூப்புட்டர் என்ற கைக்கடிகார கம்ப்யூட்டரை அறிமுகப்படுத்தியுள்ளது.

★ 1985ல் உலகம் முழுவதும் பிரெயின் வைரஸ் பரவியது. 1989ல் இந்தியாவில் முதல் வைரஸ் பிரின்ட் ஸ்கிரீன்வைரஸ் என்ற பெயரில் வெளிவந்தது. 1990ல் இரண்டாவது வைரஸ் ஜோஷி என்ற பெயரில் வெளிவந்தது.

★ இன்டர்நெட் என்பது உலகளவில் உள்ள கம்ப்யூட்டர்களின் தகவல் இணைப்பை குறிக்கும். பல இடங்களில் உள்ளவர்கள் சேர்ந்து ஏற்படுத்திக்கொள்ளும் கம்ப்யூட்டர் தகவல் பரிமாற்று முறைக்கு இன்ட்ரர்நெட் என்று பெயர்.

குத்துச் சண்டை

குத்துச் சண்டையில் நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டிய சில முக்கிய விதிகள்:

★ குத்துச்சண்டை வளையம் 12 சதுர அடிக்கு குறையாமலும், 20 சதுர அடிக்கு மிகாமலும் இருக்க வேண்டும்.

★ கையுறைகள் ஒவ்வொன்றும் எட்டு அவுண்ஸ் எடை உள்ளதாக இருக்க வேண்டும்.

★குத்துச் சண்டை போடும்போது இடை நேரத்தில் வீரர்களை கவனிக்க சிலர் ஓடிவருவதைப் பார்த்திருப்பீர்கள். இவர்கள் ஒரு சில வினாடிகளுக்கு மேல் இருக்கக் கூடாது.

★ குத்துச் சண்டை வீரர்கள் இருவரும் இருமுறை மட்டுமே கைகுலுக்கிக் கொள்ளலாம். (போட்டி ஆரம்பிக்கும் போதும்-போட்டி முடியும்போதும்)

★ ஒவ்வொரு சுற்று போட்டியின் போதும் வீரர் எதிர் வீரரைத் தாக்கியதைப் பொறுத்து இருபது புள்ளிகள் வரை தரப்படும். குறைவாக குத்து வாங்கியவருக்கு அவர் தாக்கிய விதத்தைப் பொறுத்து குறைவான புள்ளிகள் வழங்கப்படும்.

★ நடுவர் அல்லது நீதிபதிகளின் தீர்ப்பே இறுதியானது. அதை எதிர்த்துக் கேள்வி கேட்க முடியாது. இதில் செய்யக்கூடாதது என்று சில விதிகள் உள்ளன.

மேற்கு வானில் ஒரு நட்சத்திரம்

திருமதி மனோ தாமோதரன்-வவுனியா

டாண் டாண் என்று அருகிலுள்ள, அந்தோனியார் ஆலய மணியோசை, நேரம் மாலை 6.30 என்று அறிவித்தது.

சமையல் அறையில் பரபரப்பாக வேலை செய்து கொண்டிருந்தேன். அடடா கரண்ட் கட் ஆகி விடுமே என்று விரைவாக வேலைகளை முடிப்பதற்கும் கரண்ட் கட் ஆகவும் சரியாக இருந்தது.

கோயிலுக்குப் போயிருந்த கணவர் வரும் வரை 'போர்ட்டிகோவில்' கிடந்த கதிரையில் அமர்ந்து வீதியில் செல்லும் மக்களையும் வாகனங்களையும் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்துவிட்டு தற்செயலாக நிமிர்ந்த போது என் கண்களில் பட்டது அந்த நட்சத்திரம்.

நெஞ்சுக்குள் சுளீரென்று, ஒரு வலி எப்படி? எப்படி மறந்தேன்? இந்த நட்சத்திரத்தை. என் வாழ்வின் இன்பதுன்பங்களை ஆச்சரியங்களை, அதிர்ச்சியை, பகிர்ந்து கொள்ள ஒரு சினேகிதியோ சகோதரியோ இல்லாத நிலையில், எல்லாமாக என்னோடு பழகிய இந்த நட்சத்திரத்தை எப்படி மறக்க முடிந்தது?

கண்கள் வெறித்தபடி இருக்க என் மனம் பின்னோக்கி போகிறது. கிட்டத்தட்ட 21 வருடங்களுக்கு முன்பு நாங்கள் கிராமத்திலே இருந்தோம். அதிலும் மிகவும் ஒதுக்குப்புறமான ஓர் இடத்திலே எம்வீடு அமைந்திருந்தது.

வீட்டிலிருந்து அரைமைல் தூரத்தில் எமது வியாபாரஸ்தலம் இருந்தபடியால், காலையில் கடை நடத்தச் செல்லும் என் கணவர் வீடுதிரும்ப இரவு 9 1/2 மணியாகி விடும்.

பகல் முழுவதும் வீட்டு வேலைகள் சரியாக இருக்கும். மாலை 7 மணிக்குத்தான் ஓய்வு. விறாந்தையில் அமர்ந்து 1 வயது மகனை மடியில் போட்டு தூங்க வைத்தபடி 5 வயது நிரம்பிய மகனுக்கு பாடங்களையும் அறிவுரைகளையும் சின்னச் சின்னக் கதைகளையும் சொல்லிக் கொண்டு கணவரின் வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருப்பது என் வழக்கம்.

அன்றும் அப்படித்தான் மகனை மடியில் போட்டபடியே மகனுக்கு கதை சொல்ல நினைத்தேன். நான் படித்த "நாட்டுப்பாடல்" ஒன்று நினைவில் வந்தது ஆக்காண்டிகுருவி (ஆட்காட்டி குருவி) ஒன்று குஞ்சுகளுக்கு இரை தேடிச் செல்லும் போது வேடன் விரித்த வலையில் அகப்பட்டு தன் குஞ்சுகளை எண்ணி கண்ணீர் வடிக்கும் கதையை பாடலாகப் படித்திருந்தேன்.

ஆறுதலாக அந்தப்பாடலை கதையாக விளக்கிக் கூறிக்கொண்டிருந்தேன். சின்னக்கண்களை அகல விரித்தபடி இரண்டு உள்ளங்கைகளிலும் நாடியைத் தாங்கியபடி அமர்ந்திருந்த என் சின்ன மகளின் கண்களில் கண்ணீர் பெருகிக் கொண்டே இருந்தது.

ஐயோ அம்மா அந்த ஆக்காண்டிக் குருவியை காப்பாற்ற யாராவது வரமாட்டார்களா அம்மா என்று என்னை அணைத்தபடி விம்மி விம்மி அழுதாள் என்செல்ல மகள். அக்காச்சி அழுவதால் நானும் அழுதால்தானே அம்மா நல்ல பிள்ளை என்று சொல்லுவா என்று நினைத்த என் சின்னமகன் தன் பெரிய கண்களை கசக்கி உருட்டிப் பார்த்ததும் கண்ணீர் வராதபடியால் நித்திரையாகி விட்டான்.

கதை முடிந்தும் அழுது கொண்டிருந்த மகளை என்னோடு அணைத்தபடி நிமிர்ந்தபோதுதான் முதல் தடவையாக மேற்கு வானில் அந்த நட்சத்திரத்தைக் கண்டேன். "நீ கூறிய கதையை நானும் கேட்டேன்" என்று கூறுவது போல் என்னைப் பார்த்து கண்சிமிட்டியது அந்த நட்சத்திரம்.

அது மற்றைய நட்சத்திரங்களை விட சற்று பெரிதாகவும் செந்நிறமாகவும் காட்சியளித்தது. அன்று தொடக்கம் 6 வருடங்கள் அந்தக் கிராமத்தில் வாழ்ந்த ஒவ்வொரு நாளும் நான் அந்த நட்சத்திரத்தோடு மானசீகமாகப் பேசுவேன் என்னுடைய ஒரே தம்பி வெளிநாடு போய் விட்டான் நட்சத்திரமே உன்னால் அவனைப் பார்க்க முடிகிறதா என்று கேட்பேன். அந்த நாட்களில் என்மேல் அன்பைப் பொழிந்த என் உறவுப்பெண் அரபு நாட்டிற்குப் போயிருக்கிறாள் அந்த அபலையின் முகம் உனக்குத் தெரிகிறதா? என்று அழுதழுது கேட்டிருக்கிறேன்.

மௌனமே பதிலாக என்னோடு பேசும் அந்தச் சிவந்த நட்சத்திரம். வார்த்தைகளற்ற அந்தப் பாஷை எனக்கு மட்டுமே புரியும். அதன்பின் பிள்ளைகளின் படிப்பு, தொழில், நாட்டு நிலை என்று பல நிகழ்வுகள். கிராமத்தை விட்டு நகரத்திற்கு வந்தோம். வேலை வேலை என்று யந்திரகதியில் வாழ்க்கை ஓடியது. பிள்ளைகளின் உயர் கல்வி வாழ்க்கை வசதி என்று பல பிரச்சனைகள் அந்த யோசனைகளில் இந்த நட்சத்திரத்தை அடியோடு மறந்து விட்டேன்.

ஆக்காண்டிக் குருவியை காப்பாற்ற யாருமில்லையே என்று கண்ணீர் வடித்த என் செல்ல மகள் இன்று மருத்துவக் கல்லூரி மாணவி ஆனாலும் அவள் இதயத்தின் ஓரத்தில் வலையில் அகப்பட்ட அம்மாக் குருவியின் வடிவம் அப்படியே பதிந்து விட்டதாம். வாரத்தில் ஒரு தடவை தொலைபேசியில் அம்மாவோடு மணிக் கணக்கில் பேசினாலும் வருடத்திற்கு ஒரு தடவை கூட நேரில் பார்ப்பது அரிதாகிப் போய் விட்டது.

அக்காச்சி அழுவதால் தானும் அழவேண்டும் என்று கண்ணைக் கசக்கிய என்சின்னமகன் நாட்டு நிலை காரணமாக ஐரோப்பிய நாடொன்றில் அடைக்கலம் புகுந்து விட்டான். தனிமை என்னும் வேடனின் வலையில் சிறகுகள் சிக்குண்ட நிலையில் நானும் என் கணவரும். கோயில்-நேர்த்திக்கடன்-விரதம் என்று பெரும் பொழுது கழிந்து விடும். மிகுதி நேரங்களில் சன் டிவி, சக்தி டிவி, தூக்கம் இதுவே நிரந்தரமாகிவிட்ட நிலையில்தான் கரண்ட்கட் அடிக்கடி ஏற்பட்டது. போர்ட்டிக் கோவில் அமர்ந்திருந்த என் கண்களில் மீண்டும் அந்த நட்சத்திரம் தென்பட்டது. பளீரென்று வெளிச்சம் கண்களைக் கூசவைத்தது. ஓ.கரண்ட் வந்து விட்டதா? வீட்டினுள்ளே டெலிபோன் கிணுகிணுத்தது. ஓடிப்போய் எடுத்தேன். ஜெர்மனியிலிருந்து என் மகன் இரண்டு நாட்களுக்கொரு தடவை அம்மாவோடு கதைக்கா விட்டால் அவனுக்கு நித்திரை வராதே? கதைத்து விட்டு மீண்டும் வெளியே வந்து பார்த்தேன். மேற்கு வானில் அந்த சிவந்த நட்சத்திரம் உன் பிள்ளைகள் உன்னிடம் வந்து சேரும் வரை உனக்கு நானிருக்கிறேன் என்று தோழமையாகக் கண் சிமிட்டியது. ■

வைரத்தீவும்

சுதாஹரன் மட்டக்களப்பு

முதன் முதலில் நான் திஸ்ஸவை சந்தித்து 1958ம் வருடம் நாவலப்பிட்டியை சார்ந்த தேயிலைத் தோட்டத்தில் நான் கடமையாற்றும் போது, பெற்றோரை இழந்து தாய் மாமனால் வளர்க்கப்பட்டு, அவரின் முயற்சியால் அதே தோட்டத்து காரியாலத்தில் கடமையாற்ற வந்தான். ஜூனியர் தரத்தில் கடமையாற்றுபவர்களுக்கு வசிப்பதற்காக 4 வீடுகள் ஒரே வரிசையில் கட்டப்பட்டிருந்தன. எனக்கு பக்கத்து குவார்ட்டஸ் திஸ்ஸவிற்கு ஒதுக்கப்பட்டது. திஸ்ஸவின் மாமனார் கூடவே வந்து என்னை அவனுக்கு அறிமுகப்படுத்திவிட்டு, தனது மருமகன் மிகவும் பயந்த சுபாவம் உள்ளவன், ஆகையால் அவனை நீங்கள்தான் பார்த்துக்கொள்ள வேண்டுமென கூறி விடைபெற்றுக் கொண்டார். அன்றே என்னோடு ஒட்டிக்கொண்டான். இரவு சாப்பாட்டிற்கு பிறகு "மச்சான் இரவில் துணையில்லாமல் தங்குவதற்கு பயமாகவுள்ளது. உன்னோடு தங்குகிறேனே" என்றான். நான் சரியென்றேன். கொஞ்ச நாட்களில் பில்லி, சூனியம், மந்திரம் போன்றவற்றில் அதீத நம்பிக்கை கொண்டவன் என்பதை அறிந்துகொண்டேன். எங்கள் வரிசையில் கடைசி குவார்ட்டஸ்ஸில் ஒரு தமிழ் நண்பர் வசித்தார். இரவு நேரங்களில் அவரும் இன்னொருவரும் சேர்ந்து கரம், சீட்டு என்று பொழுதை போக்குவோம். அநேகமாக வெளியிடத்தில் வசிக்கும் இரு சிங்கள நண்பர்களும் எங்களோடு சேர்ந்துக்கொள்வார்கள். திஸ்ஸவின் மனப்பயத்தை அறிந்துக்கொண்ட அவர்கள், பயங்கர பேய் கதைகளெல்லாம் சொல்லி அவனைப் பயமுறுத்துவார்கள். அப்படியான நாட்களில் அவனுக்கு சிவராத்திரிதான். இந்த பகிடி வதை ஒரு சுற்று மேலே போய், கூறப்பட்ட தமிழ் நண்பரும் இரு சிங்கள நண்பர்களும் ஒன்றுகூடி யாரோ மந்திரம் செய்தது போல் அவனின் வீட்டு வாசலில் வெத்திலை, பாக்கு, பூ, மஞ்சள் ஒருதகடு என்று வைத்துவிடுவார்கள். வேலையிலிருந்து வரும் திஸ்ஸ இவற்றைக் கண்டதும் கடைசி வரை வீட்டினுள் நுழைய மாட்டான். அம்மூவரும் ஒன்றுமே அறியாதவர்கள் போல் நடித்து "இது யாரோ உன் விரோதியின் வேலையாகத்தானிருக்கும். இதற்கு தக்க நடவடிக்கை எடுக்காவிடில் உன் உயிருக்கே ஆபத்து" என்பார்கள். திஸ்ஸவின் முகத்தை பார்க்க இயலாது. பேயறைந்தது போலாகிவிடுவான். நண்பர்கள் "கவலைப்படாதே இதைப் போல எத்தினையோ மந்திரம் சூனியங்களை பாலா கட்டாடி பார்த்தவர். நீ விரும்பினால் இதற்கான மாற்று வேலையை அவரிடம் செய்து இதை இல்லாமல் செய்து விடுவோம். ஆனால் நீ பயந்த சுபாவம் உடையவனாக இருப்பதனால் நீ வராதே, நாங்கள் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்கின்றோம்" எனக் கூறி பணம் பறித்து அதில் குடித்து கொண்டாடலானார்கள். திஸ்ஸவிடம் உண்மையை புரியவைக்க முயன்றேன். அவன் புரிந்து கொள்ள வேயில்லை. நண்பர்களை இதை விட்டு விடுங்களென்று கேட்டுக் கொண்டேன். அவர்களும் செவி சாய்க்கவில்லை. நாட்கள் செல்லச் செல்ல திஸ்ஸ தூக்கத்தை இழந்தான். தன்னுடைய விரோதி யார் என்று கேட்டு தலையை பிய்த்துக் கொண்டான். அடிக்கடி தலையிடி வரத்தொடங்கிவிட்டது. எந்நேரமும் டிஸ்பிரின்தான். அளவிற்கு அதிகமாக பாவிக்காதே என்றேன். கேட்கவில்லை. தனிமையில் தனக்கு தானே பிதற்றிக்கொள்வான். இந்த சந்தர்ப்பத்தில் எனக்கு ஏற்பட்ட சில பிரச்சனைகளை முன்னிட்டு நான் வேலையை ராஜிநாமா செய்து விட்டு வெளியேறிவிட்டேன். விட்டுப் பிரியும் போது அவன் அழுத அழுகை சொல்ல முடியாதது. மீண்டும் 64ல், ஒரு நாள் என்னுடன் தோட்டத்தில் வேலை செய்த ஒரு நண்பரோடு நாவலப்பிட்டி கடை வீதியில் கதைத்து கொண்டிருந்த போது, திடீரென்று "மச்சான் திஸ்ஸ வரான்டோய்" என்று கூறிய நண்பன் காருக்குள் பதுங்கிவிட்டான். அழுக்கடைந்த உடை, கலைந்த தலை, சவரம் செய்யப்படாத முகத்தோடு என் எதிரில் திஸ்ஸ. "மச்சான் என்னை தெரிகிறதா?" என்றான் முகத்தில் பெரும் மகிழ்ச்சியுடன். அந்த கோலத்தில் அவனைப்பார்த்ததில் எனக்கு என்ன பேசுவதென்றே புரியவில்லை. அதற்கு இடமளிக்காமல் சுமார், ஒரு பத்து நிமிடங்கள் சம்பந்தமில்லாமல் என்னவென்னமோ கதைத்தான். பிறகு, உன்னை கண்டது எனக்கு எவ்வளவு பெரிய சந்தோஷமும், நிம்மதியும் தெரியுமாவென்று கூறினான். கையில் பணமேதும் இருந்தால் தருவாயா எனக்கேட்டான். கையில் கிடைத்த இரண்டு ரூபா நோட்டை கொடுத்ததும், முகத்தில் மகிழ்ச்சிக்களை. "நன்றி மச்சான், நான் உயிருள்ள வரை இதையும் உன்னையும் மறக்கமாட்டேன்" என்று கூறிவிட்டு மறைந்து விட்டான். நண்பனிடம் இவன் நன்றாக இருக்கிறானென்று நினைத்துக் கொண்டிருந்தேனே என்ன நடந்தது? என்று விசாரித்தேன். நான் சென்ற சில நாட்களில் மனக்குழப்பம் கூடி, தன் மாமனாலும் கட்டுப்படுத்த முடியாமல் கைவிட வேலையும் போய் எத்தனையோ வருடங்களாக இப்படித்தான் திரிகின்றான். இருந்தாலும் அடையாளம் தெரிந்து கொண்டு காசு கேட்பான் என்றார். பரிதாபமும், வேதனையும் எனது மனதில் ஏற்பட்டன. பிறகு 80ம் ஆண்டில் ஒரு நாள் எனது சிங்கள நண்பரோடு மொரட்டுவை சந்தையில் வீட்டுச் சாமான்கள் வாங்கிக் கொண்டிருக்கும் போது, ஒருவன் இனி இல்லையென்ற அழுக்கான உடைகளோடு சில காட் போட் மட்டைகளை கக்கத்தில் இடுக்கிக்கொண்டு பலத்த சத்தமாக தமிழர்களை இலங்கையை விட்டு வெளியேற்ற ஒரு சங்கம் தொடங்கியுள்ளேன். அதற்கு சிங்கள மக்களாகிய நீங்கள் எனக்கு உதவ வேண்டும் என்று சொல்லி கடைகளில் காசு பெற்றுக்கொண்டு வந்து கொண்டிருந்தான். என் முன்னிலையில் வந்ததும் ஆச்சரியமும் பெரும் மகிழ்ச்சியுடன் என்கையை பிடித்துக் கொண்டு, "மச்சான் சுதா என்னை தெரிகிறதா! நான் திஸ்ஸ" என்றவன், "நீ இங்கேயாயிருக்கின்றாய்? எப்படி இருக்கின்றாய்? குடும்பஸ்தனா? பிள்ளைகள் எத்தனை?" என்று கேள்விமேல் கேள்விக்கேட்டுக் கொண்டே போனான், நான் பதிலளிக்காமலேயே. எனக்கோ என்ன சொல்வதென்றே புரியவில்லை. ஆச்சரியத்தோடு நான் மாத்திரமில்லை பக்கத்திலிருந்தவர்களும் கூட நோக்கினார்கள். "உன்னை சந்தித்து எத்தனை வருடங்கள், கடைசி சந்திப்பின் போது எனக்கு 2 ரூபா தந்தாயே ஞாபகம் இருக்கின்றதா" எனக்கேட்டவன், "உன்னை உயிருள்ளவரை மறக்கமாட்டேன். வீட்டில் எல்லோரையும் கேட்டதாகச் சொல். இன்னொரு முறை உனது வீட்டிற்கு வருகின்றேன். தமிழர்களை இலங்கையிலிருந்து விரட்ட சங்கம் ஏற்படுத்தியிருப்பதால் நிறைய வேலைகளிருக்கின்றன. சந்திப்போம்" என மீண்டும் கூறிக்கொண்டே போய்விட்டான். என்னைச் சுற்றி ஒரு வெறுமை. எனது நண்பர் பொன்னாண்டோ எனது தோளில் தட்டி "புறப்படும்" என கூறினார். நண்பருக்கு திஸ்ஸவின் கதையைக் கூறி இவனைப் பற்றி ஏதாவது புரிகின்றதா எனக் கேட்டேன். ஒன்றுமே புரியவில்லை என்றார், நண்பர். இன்று வரைக்கும் இவன் எனக்கும் புரியாத புதிராகவே இருக்கின்றான். யாருக்காவது இவன் என்னமாதிரி பைத்தியமென புரிகின்றதா?

கண்ணாமூச்சி ஏ...ஏ... 9

பட்டுக்கோட்டை பிரபாகர்

ஸ்டார்ட் செய்து, ரிவர்ஸ் செய்து, திருப்பி, கியர் மாற்றி நர்ஸிங் ஹோமின் காம்பௌண்டைத் தாண்டி சாலையில் கலந்த நான்காவது வினாடி...

பின்சீட்டில் குனிந்திருந்த சுதிர் நிமிர்ந்தான். கண்களைத் தவிர முகத்தின் மற்ற பாகங்களை துணி கட்டி மறைத்திருக்க... ரிவால்வரின் முனையை அவளின் ஜாக்கெட்டின் சுழுத்துத் திறப்பில் வைத்தான்.

"லெஃப்ட்ல திரும்பும்மா முரண்டு பண்ணாம. உன் முதுகைத் தொட்டுக்கிட்டிருக்கிறது ரிவால்வர். சினிமா துப்பாக்கி இல்லை. நிஜமாவே பொத்தல் போடும்."

மதுலதா அரண்டாள். அதிர்ந்தாள். தடுமாறினாள். வியர்த்தாள்.

"யா..யாரு நீ?"

"காரை நான் சொல்ற மாதிரி ஓட்டிக்கிட்டே கேளும்மா.. சொல்றேன்... லெஃப்ட்ல திருப்பினியா, குட். நேரா போய்க்கிட்டே இரு. ரவுண்டானா வருதா? அதை ஒரு சுத்து சுத்திக்கிட்டு இப்ப நம்ம வந்த ரோட்லயே வாம்மா. இங்கேதான் டிராஃபிக்கும் இல்லை. வெளிச்சமும் இல்லை.

அவன் சொன்னபடி செயல்பட்டுக் கொண்டே, "எதுக்காக இப்படி செய்றே? பணம் தானே வேணும்? எவ்வளவு வேணும் சொல்லு. வீட்டுக்குப் போகலாம்.

> "ஹலோ தாஸ், நான் சுதிர் பேசறேன். செஞ்சி முடிச்சாச்சி. ஏ.சி.ரூம்ல பாப்பா நிம்மதியா தூங்கிக்கிட்டிருக்கு. கண்ணை கட்டிட்டேன். கையை பின் பக்கம் வச்சி கட்டிட்டேன். காலையும் கட்டிட்டேன். வர்றியா? சரி. வா..."

"வருவா. சின்ன குழந்தையா? ஸ்பெஷல் வார்டு. போன் கூட இருக்கு. எக்ஸ்டன்ஷன் நம்பர் போனுக்கு பக்கத்திலே குறிச்சி வச்சிருந்தா. போன் பண்ணி வேணும்னா கேளேன்."

சித்தி போன் செய்தாள்.

"ஹலோ அணில்தூத் ஹியர்."

"தம்பி, நான் மதுலதாவோட சித்தி பேசறேன். மதுவைக் கொஞ்சம் பேசச் சொல்லேன்."

"பேசச் சொல்றதா? இங்கேர்ந்து புறப் பட்டுப் போயி ஒரு மணி நேரமாச்சே. இன்னும் வரலை அங்கே?"

"வரலையேப்பா..."

"யாரையாச்சும் பார்க்க வேண்டியிருக்கும். பார்த்துட்டு வருவா. எத்தனை மணிக்கு வீடு திரும்பினாலும் எனக்கு போன் செய்யச் சொல்லுங்க."

"சரி தம்பி."

வைத்து விட்டு, "அங்கேர்ந்து புறப்பட்டு ஒரு மணி நேரமாச்சாம்."

"ஏண்டி நொய்யி நொய்யின்னு மனுஷன் உயிரை எடுக்கறே. அவ ஒரு மணிக்கு வந்து படுத்ததில்லையா? ரெண்டு மணிக்கு வந்து படுத்ததில்லையா?"

"இப்ப மூணு மாசமா ராத்திரி கால்ஷீட் கொடுக்கிறதும் இல்லை. பத்து மணிக்கு மேல பார்ட்டி, கீர்ட்டின்னு எதுவும் புரோக்ராம் வச்சிக்கிறதில்லைங்க. எனக்குத் தெரியும்."

சித்தப்பா டி.வியை அணைத்து விட்டு தூங்கிவிட...

சித்தி தூங்கவில்லை. 12 மணி. 1 மணி. மதுலதா வரவில்லை.

அவரை எழுப்பி, "இன்னும் வரல்லைங்க அவ."

"எங்கயாச்சும் தங்கியிருப்பா. ராப்பூரா வெளில தங்கிட்டு காலைல வந்ததில்லையா? என்ன அதிசயமா பயப்படறே நீ?"

"இப்பல்லாம் மதுலதா அப்படில்லாம் பண்றதில்லைங்க."

"காலைல வருவா.கப்சிப்புன்னு தூங்கு. என் தூக்கத்தையும் கெடுக்காதே."

காலையில் ஏழு மணிக்கு கௌசல்யா வந்தாள்.

"மேடம் இன்னும் தூங்கறாங்களா' எட்டரைக்கு செங்கல் பட்ல இருக்கணும். எழுப்புங்க."

"நீ வேறம்மா. ராத்திரி போனவ இன்னும் வரலை."

கௌசல்யா வந்த போன்களுக் கெல்லாம், "இப்ப வந்துடுவாங்க. இதோ வந்துட்டோம்" என்று பதில் சொல்லிக் கொண்டே காத்திருக்க...

பத்து மணிக்கு பங்களா வாசலில் அவள் ஷூட்டிங்கிற்குப் போவதை வேடிக்கை பார்க்க வெட்டிக் கும்பல் ஒன்று நின்று கொண்டிருக்க... வாட்ச்மேன் தபால்பெட்டியை திறந்து கை நிறைய அள்ளிக் கொண்டு உள்ளே சென்று கௌசல்யா முன்னால் ட்ரே மேல் வைத்து விட்டு வந்தான்.

அணில்தூத் போன் செய்து, "இன்னும் வரலை?" என்றான்.

"இன்னும் வரலை சார்" என்று பதில் சொல்லிவிட்டு வந்த கௌசல்யா கடிதங்களை ஒவ்வொன்றாக மேலோட்டமாகப் பார்த்துக் கொண்டே வர...

ஒரு வெள்ளைக் சுவரில்... 'மதுலதாவைப் பற்றி அறிய... உடனே பிரிக்கவும்' என்று மட்டும் எழுதி அடிக்கோடிடப் பட்டிருந்தது. ஸ்டாம்ப்ஸ் இல்லை. நேரடியாக பெட்டியில் போடப்பட்ட கவர்.

கௌசல்யா பதட்டத்துடன் கிழித்து, ஊதி, காகிதத்தை எடுத்தாள். அதில்...

ஒரு சினிமா பத்திரிகையில் வந்திருந்த மதுலதாவின் பேட்டிக் கட்டுரையில் இருந்து நிருபர் கேட்ட ஒரே ஒரு கேள்வியும், அதற்கு மதுலதா சொன்ன பதிலும் மட்டும் சதுரமாக வெட்டி எடுக்கப்பட்டு ஒட்டியிருந்தது. அதற்குக் கீழே சில வரிகள் கையால் சிகப்பாக எழுதப்பட்டிருந்தது.

இத்தனை திமிர் பிடித்த மதுலதாவிற்கு மிகப் பெரிய தண்டனை நாங்கள் கொடுக்கப் போகிறோம். தன் அழகின் மேல் உள்ள அகம்பாவத்தில் பேசின மதுலதாவிற்கு மகத்தான பதில் விரைவில் சொல்லப் போகிறோம். விரைவில் கிடைப்பாள்-பிணமாக அதுவரை பொறுத்திருங்கள்-சவப்பெட்டியுடன். இந்தக் கடிதம் எங்கள் ரத்தத்தில் எழுதப்பட்டிருக்கிறது.

இப்படிக்கு

சந்திரஜித் வெறியர்கள்.

கௌசல்யா அலறினாள். படித்து விட்டு சித்தி இன்னும் பெரிதாக அலறினாள். சித்தப்பாதான் கொஞ்சம் ஸ்டெடியாக...

"போலிசைக் கூப்பிடுவோம். ஒண்ணும் ஆய்டாது. பய்ப்படாம இருங்க. இதெல்லாம் சும்மா வெத்து மிரட்டல் தான்" என்றார்.

கமிஷனர் அலுவலகத்து போன் ஒலிக்க வைக்கப்பட்டது.

மதுலதாவிற்கு விழிப்பு வந்தது. கண்ணுக்கு முன்னால் இருட்டென்றால் அப்படி ஒரு இருட்டு. ஒரு பொட்டு வெளிச்சமில்லை. கண்கள் மேல் பஞ்சை வைத்து அதன் மேல் கனமான துணியினால் கட்டியிருக்க வேண்டும்.

அசைத்துப் பார்த்தாள். கைகளும், கால்களும் தனித்தனியே கட்டப்பட்டிருப் பது புரிந்தது. இது ஒரு கட்டில் போல இருக்கிறது.

இது என்ன இடம்?

இது இரவா, பகலா?

நான் எப்போது மயங்கினேன்?

நர்ஸிங் ஹோமில் இருந்து திரும்பும் போது துப்பாக்கி முனையில் காரோட்டியது, பிறகு எதையோ முகர்ந்து மயக்கத்தில் ஆழ்ந்தது நினைவுக்கு வந்தது.

அதன் பிறகு என்ன நடந்தது?

இங்கே எப்படிக் கொண்டு வரப் பட்டேன்?

யாரால்? எதற்காக இப்படி கட்டிப் போட்டிருக்கிறார்கள்?

இது அதே தினமா? வேறு தினமா?

புஜத்தில் வலி எடுக்கிறதே ஊசி போட்டது போல... என்ன ஊசி போட்டார்கள்?.

சித்தி, சித்தப்பா என்னைக் காணாமல் தேடவில்லையா?

அய்யோ! என்னை என்ன செய்யப் போகிறார்கள்?

பதிலே தெரியாத கேள்விகள் மனதிற்குள் அணிவகுப்பு நடத்தின. வயிற்றில் கலக்கம் சேர்ந்தது. வால் கிளாக்கின் முள் டிக், டிக் என்று நகர்கிற ஒலியும், தூரத்தில் எங்கோ ஓடுகிற பஸ்ஸின் சப்தங்களும், உன்னிப்பாய் கேட்ட போது மெல்லிசாய் அலைகளின் சப்தமும் கேட்டது.

கையைப் பின்பக்கமாகக் கட்டியிருந்ததில் தோள் பட்டையில் வலி தெறித்தது.

யோசனையில் மனம் அயற்சியுற்றது. மயக்கமாய் வந்தது. உறங்கிப் போனாள் மதுலதா-தி கிரேட் ஆக்ட்ரெஸ்!

(கண்ணாமூச்சி தொடரும்)

உண்மைத் தொடர் 39

உலகை உலுக்கிய சர்வாதிகாரி ஹிட்லர்



1943ம் ஆண்டு இறுதிப் பகுதியில் ஹிட்லரின் படைகளுக்கு கடும் தோல்விகள் கிடைத்த போதிலும் ஜெர்மன் எதிர்ப்புக் கூட்டணிக்குள் பிளவு ஏற்படும் என்ற நம்பிக்கையில் போர்க்களத்தில் தொடர்ந்து நிலைத்திருக்குமாறு தனது படைத்தலைமைக்கு ஹிட்லர் உத்தரவிட்டான். இதனால் பல இடங்களில் தற்காப்பில் மட்டும் ஈடுபடுவதென ஜெர்மன் படைகள் தீர்மானித்தன. எமக்கெதிராக அவர்களால் நீண்டகாலம் ஒற்றுமைப்பட்டிருக்க முடியாது ஏதாவது ஓரிடத்தில் நிச்சயம் பிளவுபடும் அதன் பின்னர் எமது படைகளுடன் தனித்தனியாக மோத வேண்டிய கட்டாயம் அவர்களுக்கு ஏற்படும் அத்தகைய சந்தர்ப்பம் உதயமாகும் வரை நாம் போர்க்களத்தில் ஈடுகொடுக்க வேண்டும் என்று தனது படையதிகாரிகள் மத்தியில் ஹிட்லர் உரையாற்றினான். ஆனால் அவனது கணக்கும் இம்முறை பலிக்காமல் போனது. ஹிட்லர் எதிர்ப்புக் கூட்டணியை பலமாக வைத்திருக்க ரஷ்யா தன்னாலான சகல இராஜதந்திர முயற்சிகளையும் மேற்கொண்டது. அதே நேரம் எதிர்பாராத விதத்தில் ஹிட்லரின் பாஸிசக் கூட்டணியில்தான் பிளவு தோன்ற ஆரம்பித்தது. ருமேனியா, பல்கேரியா போன்ற நாடுகளின் அரசாங்கங்கள், கடுமையான உள்நாட்டு அழுத்தம் காரணமாக ஹிட்லர் ஆதரவுக் கொள்கையை தளர்த்தத் தொடங்கின. ஆண்டின் இறுதிப் பகுதியில் இத்தாலி கூட்டணியை விட்டு வெளியேறுவதாக அறிவித்தது.

1944ம் ஆண்டு ஜனவரி 28ம் திகதிக்குப் பின்னர் ரஷ்ய எல்லையில் சுமார் 90 ஆயிரம் ஜேர்மனியப் படைகளை ரஷ்ய இராணுவம் முற்றுகையிட்டது. இந்த முற்றுகையை உடைத்து படையினரை காப்பாற்ற ஹிட்லர் பெருமுயற்சி மேற்கொண்ட போதும், பயனளிக்கவில்லை. அது ஆரம்பத்தில் 55 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர். ஹிட்லருக்கு போர்க்களத்தில் கிடைத்த மிகப்பெரும் தோல்விகளில் ஒன்றாக இது கருதப் பட்டது. இந்த முற்றுகையில் அகப்பட்டு தினசரி கொல்லப்படும் ஜேர்மன் வீரர்களின் எண்ணிக்கையை ரஷ்ய மற்றும் மேற்குநாட்டு வானொலிகள் கிரமமாக அறிவித்துவந்தன. அவற்றைக் கேட்கும் போது ஹிட்லரின் கண்களில் அனல் பறப்பவதையும், அவனது முகம் கோபத்தால் விகாரமடைவதையும் தான் பார்த்துள்ளதாக ஹிட்லரின் உதவியாளர் ஒருவர் பின் நாளில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த சுற்றி வளைப்பு தொடர்பாக ஹிட்லரின் பாஸிஸ ஜேர்மனியின் டாங்கிப் படையணி தலைமையகத்துக்கு அனுப்பிய கடிதத்தில் "ஜனவரி 28ம் திகதியிலிருந்து சுற்றி வளைக்கப்பட்ட இந்தத் துருப்புக்கள் அறிந்தோ அறியாமலோ வரலாற்றில் மோசமான போரியல் அனுபவமொன்றை சந்தித்து விட்டனர். இப்படிப்பட்ட சோதனையை ஒரு சிலரால் மட்டுமே ஒரு தடவைக்கு மேல் தாங்கமுடியும்" என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஹிட்லரின் படைகள் ஏற்கனவே கைப்பற்றி தம்வசம் வைத்திருந்த பல சிறிய குடியேற்றப் பிரதேசங்கள் அமெரிக்க,பிரிட்டிஷ் படைகளிடமும், செஞ்சேனையிடமும் கைமாறும் துக்கரமான செய்தி அடிக்கடி ஹிட்லரின் காதுகளுக்கு எட்ட ஆரம்பித்தது. எனினும் சளைத்துப் போகாத அவன் சிறைக் கைதிகளினதும் உள்நாட்டு தொழிலாளர்களினதும் உழைப்பை முடியுமானவரை சுரண்டி ஆயுத உற்பத்தியையும் மற்றுமுள்ள போர் தள பாடங்களின் தயாரிப்புக்களையும் அதிகரிக்கச் செய்தான். ஆனால் இராஜதந்திர ரீதியில் அவனது பல கணக்குகள் அந்தக் காலப் பகுதியில் பிழைக்க ஆரம்பித்ததால் இராணுவ ரீதியிலான பல முடிவுகளும் தவறாகவே அமைந்தன. ஜேர்மன் படைகள் நெருக்கடியை எதிர்கொண்டு இருப்பதை அறிந்த ரஷ்யா ஹிட்லர் சற்றும் எதிர்பாரத கோணங்களில் எல்லாம் தனது தாக்குதலை விஸ்தரித்தது.

ரஷ்யாவின் நிலப்பரப்பிலிருந்து ஜேர்மன் படைகள் முற்றாக விரட்டியடிக்கப்பட்டதோடு உக்ரேன் மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் நிலை கொண்டு இருந்த ஜேர்மன் இராணுவம் துண்டாடப்பட்டு பல்லாயிரக்கணக்கான வீரர்கள் கொன்று குவிக்கப்பட்டனர்.

[5ம் பக்கத் தொடர்ச்சி]

அவட்சியமாய்ச் சொல்லுது மனுசன். நீப்பாட்டாமல் இன்னும் செல்லுறார் அந்த லெக்சரர். உங்கட கப்பலை ஓட விட வில்லையெண்டுதான் சந்திரிகா அரசாங்கத்துடன் கொழுவுப்பட்டனீங்களாம். இப்ப யூஎன்பியில மந்திரியானது, கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் தடையில்லாமல் உங்கடை யாவாரத்தை நடத்தத்தானாம். தரைப் பாதையைத் திறந்தால் யாவாரம் பிழைச்சுப் போடுமெண்டுதானாம் அந்தக் கதையை விட்டிட்டு நீங்களும் அரசியல் கோஷ்டிகளில இறங்கியிருக்கிறியள் எண்டு சொல்லிக் கொண்டு போகுது மனுசன்.

எனக்குப் பொறுக்கேலாமல், "சேர், அதெல்லாம் முந்தி வேணுமெண்டால் செய்திருக்கலாம். இப்ப அமைச்சரான பிறகு எதுக்கு அவருக்கு வேற பிஸினஸ்?" எண்டு கோவமாவே கேட்டன்.

அதுக்கு அந்த லெக்சரர் சொல்லிப் போட்டுப் போன விசயங்கள்தான் எல்லாத்துக்கும் உச்சம் மாதிரித் தெரிஞ்சுது. கட்டாயம் நீங்கள் மறுப்புவிட வேணுமெண்ட அக்கறையிலதான் நான் இந்தக் கடிதத்தையே எழுத வேண்டி வந்தது.

பொங்கலுக்கு முந்தி கொழும்பிலிருந்து 'பிறைற் ஒவ் சவுத்' கப்பலில ஏழு லொறி லோட் கீழங்கும், 1000 மூடை சீனியும் ஏத்தினனீங்களாம்.

'ருகுணுபுர' கப்பலில அஞ்சு லொறி லோட் கீழங்கும், தேங்காயும் ஏத்தினனீங்களாம்.

"இந்தா இப்பவும் போய் அம்பிகா களஞ்சியத்தில பார், கீடக்கிற கீழங்குச் சாக்குகள் மூடைகளுக்கெல்லாம் 'எம்.எஸ்.' குறிதான் குத்தியிருக்குது, எம்.எஸ் குறி குத்தித்தான் அவற்றை எல்லாச் சாமானும் இஞ்சை வாறது.

உன்ர அமைச்சற்றை கெட்டித்தனத்தைப் பாராட்டுற தெண்டால், யூ.என்.பி அமைச்சராய் இருந்து கொண்டு இப்பவும் ஜனாதிபதிக்குக் கீழ வாற அத்தியாவசியத் தேவைகள் தீளைக்களத்திட்ட இதுக்கெல்லாம் அனுமதியை வாங்க வேண்டிய விதத்தில வாங்கி வியாபார கொடி நாட்டுற வித்தையைப் பாராட்டு" என்று கொட்டி முழக்குது மனுசன்.

நான் வாயடைச்சுப் போனன். உங்களுட்ட இதுக்கெல்லாம் சரியான காரணம் இருக்குமெண்டு தெரியும், கொஞ்சம் குரலைத் தாழ்த்தி, "சரி அவற்றை தொழில் அவர் செய்யிறார்" எண்டு சொல்லிப் பாத்தன்.

பொங்குது மனுசன். "கொழும்பில 40ரூபா கீழங்கு இஞ்ச 'ஹோல்சேல்' விலையே 150 ரூபா சில்லறைக்கு 200 ரூபா வரை போகுது. சீனி கொழும்புல 30 ரூபா இங்க 50 ரூபா விக்கினம். ஒரு கீலோ சீனிக்கு ஏத்துக்கூலி 3 ரூபா எண்டு போட்டாலும் கூட 20 ரூபா அதிகம் வைச்சு ஏன் விக்கிறார்? அநியாய விலைக்குத் தான் யாவாரம் செய்துகொண்டு மக்கள் பிரச்சனை தீர்க்க மந்திரியானதாய் ஏன் சொல்லுறார்?

இதுக்குள்ள யாழ்ப்பாண மக்களின் கஷ்டத்தைப் புலம்பி சிங்களத்திலயும் ரீவிக்களுக்கு பேட்டி வேறை...." எண்டு மூச்சு வாங்குது மனுசன்.

எனக்கு என்னவோ படிச்சவை உப்புடித்தான் விண்ணாணக் கதையள் கதைப்பினம்.... தமிழனர்வும் அவையளுக்கு கொஞ்சம் மட்டுதான் எண்டு எண்ணம். ஆனாலும், சிங்களத்தில நீங்கள் அப்புடி உள்விழுந்து கதைச்சதைப் பாக்க என்னமோ மாதிரித்தான் இருந்தது. குமாரண்ணை எண்டால் எப்பிடி வெருட்டுவார்! ஆமிக்காரனோட சேர் சேர் எண்டு வளவளவெண்டு கதைச்சு சாமான்களை வெளிய எடுக்கிற மாதிரி ரீவியிலயும் கதைக்கிறது தமிழ் வீரத்தைக் காட்டின மாதிரி வராது. 'தனக்கடாச் சிங்களம்' எப்பவும் பிடரிக்கு நல்லதில்லை எண்டு தானே எங்கட ஆக்கள் சொல்லுறவை. 'சிங்களத்திலயும் பேசுவன்' எண்டு நீங்கள் வெளிக்கிடுறது உங்கட மற்றக் கெட்டித் தனங்களையும் மட்டந்தட்டிப் பேசுறவைக்குத்தான் வாய்ப்பாகிப் போகும். அதில கொஞ்சம் நீங்கள் யோசிக்க வேணும். ரீவி எண்டவுடன் ஞாபகம் வந்து யாழ்ப்பாணத்தில பொங்கல் விழா கோலாகலமாய் நடத்தினதையும், சிங்கள மந்திரிமாரையும் கூட்டிவந்து ரீவில எல்லாம் காட்டி (வேட்டியும் வெறும் மேலுமாய் என்ன ஒரு தமிழ்ப் பொலிவுடன் நின்றீர்கள்!) எவ்வளவு காலத்துக்குப் பிறகு எங்கட கலை கலாசாரத்தை தெற்கும் வியக்கக் காண்பிச்சீங்கள் எண்டதை அந்த லெக்சருக்குச் சொன்னால், "சைக்கிள் கடை முதலாளி நாகரத்தினம் வீட்டுப் பொங்கல்தான் யாழ்ப்பாணப் பொங்கலா?" என்று படாரெண்டு கேக்குது மனுசன்.

"உப்பிடிக் கதைக்கிறது சரியில்லை. எங்கடை கலை கலாசாரமெல்லாம் காட்டினவைதானே?" எண்டன்.

அதுக்கும் அந்தாள் கோவம் குறையாமல் சொல்லுது. "முந்தியும் உப்பிடித்தான் சிங்கள மந்திரியாரைக் கூட்டிவந்து இஞ்ச பொம்பிளைப் பிள்ளையளைக் கும்மியடிக்கச் சொல்லிக் காட்டிப் போட்டுப் பேச்சு வாங்கிறவை பழைய ஏஜெண்டுமார்.

மகேஸ்வரன் மந்திரியா வந்தவுடன சிங்கள தமிழ் வித்தியாசம் அழிஞ்சு போச்சா?

மந்திரியின் ஏற்பாட்டில ஏதோ ஒரு வீட்டில டாம்பீகமா, பொங்கலைக் காட்டினால், யாழ்ப்பாண மக்களே டாம்பீகமாய் பொங்கலைக் கொண்டாடுகினம் எண்டு அர்த்தமாகிவிடுமா?

அப்ப இப்ப முழுச் சனத்துக்கும் தீர்வு வந்துவிட்டதா? மந்திரிமாரைக் கூப்பிட்டு பொட்டு வைச்சு புக்கை குடுத்து, சீனடி சிலம்படி வித்தை காட்டி, குமார்ப்பிள்ளையளை வரச் சொல்லி கும்மியடிக்க வைத்து (போதாததுக்கு சங்கரியண்ணர் வேற ரோஸிக்குப் பக்கத்தில நின்று புக்கை வாங்கித் தின்ற அந்தப் புளுக்கத்தையும் முகத்தில் காட்டி) இதுகளை மட்டும் ரீவியில எடுத்துக் காட்டிவிட்டு எல்லா மக்களும் ஆனந்தப் பெருக்கில் திளைக்கின்றனர் என்று அளக்க முற்படுறது ஆருக்கு லாபம்?

அமைச்சருக்கா? சனங்களுக்கா?

சனங்களுக்கு அமைதியை அரச புலிகளுடன் பேசிக் கொண்டுவர வேண்டும். அதுவரை அமைச்சர் களியாட்டங்களைக் காட்டி காசு சம்பாரிக்கும் கடமையிலிருப்பாரா?

மக்கள் விலையுயர்வைக் குறைக்கச் சொல்லிக் கேட்கிறார்கள்; பாதையைத் திறக்கச் சொல்லிக் கேட்கிறார்கள்; பாஸ் முறைகளை ஒழிக்கச் சொல்கிறார்கள்; சுதந்திரமாய் மீன்பிடிக்க அனுமதி கேட்கிறார்கள்; மின்சாரம் கேட்கிறார்கள்; பொருட்களின் தட்டுப்பாட்டை நீக்கும்படி கேட்கிறார்கள்...

மந்திரியோ விழாக்களைக் காட்டிக் கொண்டு யாவாரத்தை நடத்துகிறார். மற்ற எம்பிமாரைக் கண்ணிலேயே காண முடியவில்லை..." எண்டு, விட்டால் கம்பஸில அறுக்கிற மாதிரி அறுத்துக் கொண்டே போகுது மனுசன்.

இந்த வித்தண்டாவாதங்களுக்குப் பதில் சொல்ல முடியாமல் முழிக்க வேண்டியிருக்கு எனக்கு. அதிலும் படிச்சவையின்ர வித்தண்டாவாதங்களுக்கு ஆரால் சொல்ல முடியும்?

நீங்கள் இவையை விடக்கூடாது. இல்லாட்டில் தமிழன்ர மானமே கப்பலேறிப் போற மாதிரி கேள்வி கேட்டுத் தீரவினம். தேர்தலுக்கு வேலை செய்த அடிதடிக்காரரையும் வைச்சிருங்கோ. அனுப்பிப் போடாதையுங்கோ. ஏற்கனவே, சில யாவாரியளைத் தான் உங்களோட அண்டி வைச்சிருக்கிறியள் எண்டும் மற்றவையைக் கைகழுவிப் போட்டியள் எண்டும் தேர்தலுக்கு மும்முரமாய் வேலை செய்த யாவாரியள் கனபேர் உங்களை இப்ப அதிருப்தியோட பேசுகினம். அவை இல்லாட்டியும் பறவாயில்லை. அடிதடிக்காரர் அவசியம். அவையைப் பகைக்க வேண்டாம். மற்றது, முக்கியமாய் நொண்ணை பேசித் தீரியிறாக்களுக்கு ஒரு மறுப்பறிக்கை விடுங்கோ. அதைப் பாத்துத்தான் லெக்சரர் மாரோட கதைக்கிறதுக்கும் நான் பொயின்ற்ஸ் எடுக்க வேணும்.

மற்றவை பின்பு.

என்றும் உங்கள் பட்சமுள்ள சாதாரணன்

(5ம் பக்கத் தொடர்ச்சி)

விடுதலைப் புலிகளுக்கு....

முப்பது ஆண்டுகளுக்கும் மேலாக மாறி மாறி ஆட்சி செய்து வரும் திராவிடக்கட்சிகள் இன உணர்வை முற்றிலுமாக மழுங்கடித்து விட்டனவே. சுய மரியாதையோ, பார்ப்பன, மற்றும் வட இந்தியர் எதிர்ப்போ, நாத்திகக் கொள்கைகளோ எல்லாமே காற்றில் பறக்க விடப்பட்டாயிற்று. ஜெயலலிதா யாகம் செய்தால் கருணாநிதி மஞ்சள் துண்டு போடுகிறார். மாநிலத்தில் பக்தி பரவசம் பெருக்கெடுத்தோடுகிறது. ஜோசியர்களும் சாமியார்களும், சாமியாரிணிகளும் சக்கைபோடு போடுகிறார்கள்.

பிரதமரானவுடன் இந்தியா வந்த ரணில் விக்கிரமசிங்க, சென்னையில் சந்தித்த மிக முக்கியமானவர்களில் ஒருவர் காளியூர் நாராயணன் என்ற சோதிடர்தான். அவர்தான் ரணில் பெரும் வெற்றி பெறுவார் என்று அடித்துக் கூறியிருந்தாராம். அதே நாராயணன் தான் ஜெயலலிதா விற்கும் நெருக்கமானவர். ஜெயா டிவியில் தினந்தோறும் ராசிபலன் கூறுபவர். மன்னனை எதிர்த்து முழக்கமிட்டு அவனையே வீழ்த்திய கண்ணகி, கையில் காற்சிலம்பினை ஏந்தி, கண்கள் அனல் கக்க நின்று கொண்டிருக்க, அவரது பார்வையில் பட்டவண்ணமே இன்றைய ஆட்சியாளர்கள் செல்கிறார்கள். (கடற்கரைச் சாலையில்தான் தமிழக அரசின் தலைமைச் செயலகம் அமைந்திருக்கிறது.) அது அவர்களுக்கு நன்மை



பயக்காது என்று பத்திரிகையாளர்களிடம் கூறுகிறார் நாராயணன்.

அதே சமயம் தான் ஏதும் ஆலோசனை புரட்சித்தலைவிக்கு அளிக்கவில்லை என்றும் அவர் தெரிவிக்கிறார். ஆனால் என்ன நடந்திருக்கும் என நம்மால் ஊகிக்க முடியுமே! அப்படி ஆணவத்துடன் நடந்து கொள்ளும் அரசைக் கண்டித்து, மக்களிடம் சிறிதளவும் எழுச்சி இல்லையென்றால், அந்த அளவு எல்லாமே மரத்துப்போய்விட்டது என்றுதான் பொருள்.

அது ஒரு புறமிருக்க, கண்ணகி சிலை பிரச்சனை வந்த நாளிலிருந்து, கலைஞர் மீண்டும் தமிழின வாதம் பேசத் துவங்கியிருக்கிறார். கவிதை மழையாய்ப் பொழிகிறார். தனது கரிசனத்தைக் கொட்டுகிறார்.

அதை மனதில் வைத்துத்தான் பாவலரேறின் அபிமானிகள் அவரை சனிக்கிழமை நிகழ்ச்சிக்கு அழைத்திருக்கிறார்கள். ஆனால் அவர் மசிவதாக இல்லை. அவருக்குத் தெரியும் ஆபத்து எங்கேயிருக்கிறதென்று. மறந்தும் பாரதீய ஜனதாவைப் பகைத்துக் கொள்ள அவர் தயாராக இல்லை.

ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில் திருநீறு பூசுவதை எள்ளி நகையாடிய கலைஞர், பாரதீய ஜனதாதலைவர்களிடமிருந்து கடும் கண்டனம் வந்தவுடன், வேகமாக ஜகா வாங்கினார். நான் அப்படிக்கூறவில்லை, யார் மனதையும் நான் புண்படுத்த மாட்டேன் என்று விளக்க மளிக்க வேண்டியதாயிற்று. புலிகளானாலும் சரி, திருநீறானாலும் சரி, தேசீய ஜன நாயக்கூட்டணியைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டிருக்கிறார் அவர். வாணியம்பாடியிலும், சைதாப் பேட்டையிலும் இடைத்தேர்தல்கள் ஒத்திப்போடப்பட்டுவிட்டன. ஆனால் ஆண்டிப்பட்டியில் நடக்கிறது. அம்மா நிற்கிறார். த.மா.கா, இடது சாரிக்கட்சிகள், காங்கிரஸ் ஆகியவை அ.இ.அ.தி.மு.க.வை ஆதரிக்கமாட்டோம், ஆயினும் ஜெயலலிதாவிற்கு எதிராக வேட்பாளரை நிறுத்தப் போவதில்லை என்று அறிவித்துவிட்டன.

ஆண்டிப்பட்டி அ.இ.அ. தி.மு.க.வின் கோட்டை-தேவர்கள் அதிக எண்ணிக்கையில் வாழ்கிறார்கள். போதாக்குறைக்கு ஆயிரக் கணக்கில் புதிய வாக்காளர்கள் அ.இ.அ.தி.மு.க.வினரால் பதிவு செய்யப்பட்டிருக்கிறார்கள். அமைச்சர்கள் அங்கே முகாமிட்டு பல்வேறு வளர்ச்சித்திட்டங்களை அசுரவேகத்தில் நிறைவேற்றி வருகிறார்கள். பணம் தண்ணீராய் ஓடுகிறது. இச் சூழ்நிலையில் ஜெயலலிதாவின் வெற்றியில் சந்தேகம் கிடையாது.

விரைவில், உச்சநீதிமன்றம் குறுக்கிடாமல் இருந்தால் அவர் முதல்வராகிவிடுவார். கருணாநிதி, ஸ்டாலின் மற்றும் பல தி.மு.க. வினர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என அவரே அறிவித்துக்கொண்டிருக்கிறார். அப்படிப்பட்ட சூழலில் மத்திய அரசின் தயவு கருணாநிதிக்கு மிக அவசியம்.

வாணியம்பாடி, சைதையில் முறைகேடுகள் என்று கூறி அவ்விரு தொகுதிகளிலும் இடைத்தேர்தல் களை ஒத்தி வைத்த மத்திய தேர்தல் ஆணையம் அதே போன்ற பிரச்சனைகள் ஆண்டிப்பட்டியிலும் உண்டு என அனைத்து எதிர்க்கட்சிகள் கூறியும், ஏன் அங்கு மட்டும் கண்டும் காணாமல் விட்டிருக்கிறது?

வாக்காளர் சேர்ப்பில் எந்த அரசின் கீழும் முறைகேடுகள் நடப்பது வாடிக்கை. இம்முறை அப்படிப் புகார்கள் வந்தவுடன் விழுந்தடித்துக் கொண்டு அதிகாரிகளை அனுப்பி, விசாரணை செய்யச்சொல்லி, இரு தொகுதிகளில் தேர்தல்களை ஒத்தி வைத்ததே தி.மு.க.வை திருப்திப் படுத்தத்தான் என்று நம்பப்படுகிறது.

அதேநேரம் ஆண்டிப்பட்டியில் ஜெயலலிதா போட்டியிடப் போகிறார் என்பதும் முன்கூட்டியே அறிவிக்கப்பட்டிருந்ததால், அத் தொகுதியில் பிரச்சனை ஏதும் செய்யவில்லை. ஜெயலலிதா முதல்வராகி இன்னும் நான்கு ஆண்டுகளுக்கும் மேலாக செங்கோலோச்சப் போகிறார் அடுத்த நாடாளுமன்றத் தேர்தல்களில் அவரது தயவு தேவை. எனவே அவரை ஒரேயடியாக புறந்துள்ள பாரதீய ஜனதாவிற்கு மனதில்லை. இனி அ.இ.அ.தி.மு.க அரசை விமர்சனம் செய்யக்கூடாது என தமிழக தலைவர்களுக்கு கட்சி மேலிடம் வாய்மொழி உத்திரவிட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த வாரம் மத்திய அமைச்சர் வசுந்தரா ராஜே ஜெயலலிதாவை போயஸ் தோட்ட இல்லத்தில் சந்தித்தார். 1999ல் தேசீய ஜனநாயக்கூட்டணியிலிருந்து ஜெயலலிதா விலகியபின் இப்போது தான் முதன்முறையாக ஒரு பா.ஜ.க தலைவர் ஜெயலலிதாவை சந்தித்துப் பேசுகிறார் என்பது குறிப்பிடத் தக்கது.

நான் அரசியல் பேசவில்லை என்கிறார் ராஜே. இன்னும் சிலர் விடுதலைப்புலிகளை சென்னையில் தங்க விடலாமா என்றறியவே ஜெயலலி தாவை சந்தித்திருக்கிறார் அமைச்சர் என்கிறார்கள்.

எது உண்மை என்று தெரிய வில்லை. எது எப்படியாயினும் பா.ஜ.க- அ.இ.அ.தி.மு.க உறவு மீண்டும் முகிழ்க்கத் துவங்கும் காலம் நெருங்கிக்கொண்டிருக்கிறது என்பதில் ஐயமில்லை. இப்படிப்பட்டதொரு சூழலில் கலைஞர் நடுங்குவதிலும் வியப்பில்லை.

புலிகளை எதிர்ப்போர் தூக்கி எறியப்படுவர் என்று மாவீரன் நெடுமாறன் பயமுறுத்துகிறார். ஆனால் புலி ஆதரவு அணிதான் கேட்பாரற்று கிடக்கிறது தமிழகத்தில். அடுத்து ஜெயலலிதா என்ன செய்வாரோ என்று அவர்கள்தான் பயந்து கொண்டிருக்கிறார்கள். அப்படியிருக்கிறது தமிழின உணர்வு. ■

ஸ்போர்ட்ஸ்

இங்கிலாந்தை இந்தியா வென்றது

நடுவர்கள் மீது அதிருப்தி

இந்தியா-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் சர்வதேச போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றபோது, இந்திய அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது. எனினும் நடுவர்களின் தீர்ப்பு குறித்து இங்கிலாந்து அணித்தலைவர் அதிருப்தி தெரிவித்துள்ளார்.

மேற்படி இரு அணிகளுக்கும் இடையிலான போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணித் தலைவர் சவ்ரவ் கங்குலி முதலில் துடுப்பெடுத்தாட தீர்மானித்தார். இதன்படி ஆட்டத்தை ஆரம்பித்த இந்திய அணியின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர்களின் அபாரமான துடுப்பாட்டத்தினால் இந்திய அணி 50 ஓவர்கள் முடிவில் 8 விக்கட் இழப்பிற்கு 281 ஓட்டங்களைப் பெற்றுக் கொண்டது. இந்திய அணியின் சார்பாக இளம் வீரர் தினேஷ் மொங்கியா 75 பந்துகளுக்கு முகங்கொடுத்து 71 ஓட்டங்களைப் பெற்றார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியினர், தமது பந்து வீச்சின் போது, குறித்த நேரத்திற்குள் 50 ஓவர்களை வீசத் தவறியதால் 49 ஓவர்களில் 282 ஓட்டங்கள் என்றவெற்றி இலக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்தது. குறித்த இலக்கை நோக்கி தமது துடுப்பாட்டத்தை ஆரம்பித்த இங்கிலாந்தின் ஆரம்ப துடுப்பாட்ட வீரர் நிக்னைட் முதல் ஓவரின் இரண்டாவது பந்திலேயே ஆட்டமிழந்தார். எனினும், தொடர்ந்து வந்த துடுப்பாட்ட வீரர்களின் உதவியுடன், மறுமுனையில் ஆரம்பத் துடுப்பாட்ட வீரராக களமிறங்கியிருந்த ட்ரஸ்கோதிக் மிகவும் அபாரமாக துடுப்பெடுத்தாடி 121 ஓட்டங்களை பெற்றிருந்த போது எல்.பி.டபிள்யூ முறையில் ஆட்டம் இழந்தார். இந்நிலையில் இங்கிலாந்து அணி 5 விக்கட்டுக்களை இழந்து 224 ஓட்டங்களை பெற்றிருந்து. தொடர்ந்து வந்த வீரர்கள் அனைவரும் 35 ஓட்டங்களுக்குள் ஆட்டம் இழந்தனர்.

எனவே இங்கிலாந்து 44 ஓவர்களில் 259 ஓட்டங்களுடன் தமது துடுப்பாட்ட வீரர்கள் அனைவரையும் பறிகொடுக்க இந்திய அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றது. அஜித் அகர்கர் சிறப்பாக பந்து வீசி 50 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டை வீழ்த்தினார். ஆட்ட நாயகனாக ட்ரஸ்கோதிக் தெரிவு செய்யப்பட்டார்.

எனினும், போட்டியின்போது நடுவர்களால் வழங்கப்பட்ட தீர்ப்பு பலத்த சர்ச்சையை கிளப்பியுள்ளது. இங்கிலாந்து அணியின் வீரர்கள் 5 பேர் எல்.பி.டபிள்யு முறையில் ஆட்டம் இழந்தனர். இதனால், அடுவர்கள் அணிக்கு சார்பாக செயற்பட்டதாக குற்றஞ்சாட்டப்பட்டது.

ஆட்ட நாயகனாக தெரிவு செய்ப்பட்ட ட்ரஸ்கோதிக்கின் ஆட்டமிழப்பு பெரும் சர்ச்சையையும் ஏற்படுத்தியுள்ளது. இது குறித்து தனது கருத்தை வெளியிட்ட இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர், டங்கன் ஃபிளட்சர் "இப்போட்டியின் நடுவர்களின் தீர்ப்பினால் நாம் மிகவும் கவலை அடைந்திருக்கிறோம். இது தொடர்பாக போட்டி மத்தியஸ்தர் டெனிஸ் லின்ட்ஸேவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பினோம்" என்று கூறினார். மேலும், இது தொடர்பாக இங்கிலாந்து அணித் தலைவர் நஸீர் ஹுசைன் கருத்துக் கூறும் போது, "சில முடிவுகள் எங்களுக்கு பாதகமாகி விட்டது. சில முடிவுகளை கண்டு நான் வெறுப் படைந்து விட்டேன். இது தொடர்பாக ஐ.சி.சிக்கும் எழுதியுள்ளேன். " என்றார். இக் கருத்துகளை ஏற்றுக் கொண்ட முன்னாள் இந்திய அணித் தலைவர் சுனில் கவாஸ்கர், இங்கிலாந்து அணியின் வெற்றி கொள்ளை அடிக்கப்பட்டுள்ளது என்றார்.

எது எப்படி இருப்பினும் இந்திய அணி 23 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளமையே இறுதி முடிவாகும்.

★ புலிகள் மீதான தடையை அகற்றலாம் என்று அஸ்கிரிய பீடம் சொல்லியிருக்கிறதே?

வி.வாணி-வவுனியா.

ஆமாம், ஜனாதிபதி ஆதரவு, குருமார் ஆதரவு பொதுமக்கள் ஆதரவு, தமிழ்க்கட்சிகள் ஆதரவு என்று யார் மீதும் பழியைப் போட்டு நழுவிக் கொள்ள முடியாதவாறு ஒரு சூழ்நிலை இன்றைய அரசுக்கு அமைந்திருக்கிறது. யார் தவறுவிடப் போகிறார்கள் என்பதைப் பார்த்துக் கொள்ள மற்றுமொரு சந்தர்ப்பம்.

★★

★ அன்றைய நடிகர்களில் உங்களைக் கவர்ந்தவர் யார்?

பி.விக்னேஸ்வரன்-ஹட்டன்.

டி.எஸ்.பாலையா. அலட்டிக் கொள்ளாத நகைச்சுவை, வில்லத்தனம், உடல்மொழி அனைத்தாலும் சிறந்த குணச்சித்திர நடிகராக இன்றும் வியக்க வைப்பவர்.

★★

★ சிந்தியா, எங்களுக்கெல்லாம் எப்போது விமோசனம் கிடைக்கும்?

எம்.கே.செல்வரத்தினம்-சீனன்குடா.

சரியாகச் சொல்லத் தெரியவில்லை. முரசு ஆசிரியர் எப்போது நிறுத்தச் சொல்கிறாரோ, அப்போது தான் இதை நான் நிறுத்துவேன்.

★★

★ பஸ்களில் சன நெருக்கடிக்குள் லொள்ளு விடும் ஆண்களைத் திருத்தவே முடியாதா?

ஐ.வதனா-நெலுக்குளம்.

ஆண்களாக இருக்கும் வரை முடியாது, (கவிஞர் அறிவுமதி சொல்கிறார்: "ஒவ்வொரு ஆணும் பெண்ணாக இருந்து பார்த்தால்தான் காதல் புரியும்.")

★★

★ அசைக்க முடியாத அலைவரிசை சக்திதான் என்று அபர்ணாவும், என்றும் சூரியனோடு இணைந்திருங்கள் என்று லோஷனும் சொல்லும்படியாகிவிட்டதே.?

எம்.எம்.மிஹ்லார்-கொழும்பு-10.

ரசிகர் மன்றங்களைக் கலைத்து விட்டு நல்ல நிகழ்ச்சிகளை ரசிக்க நேயர்கள் தயாராவதற்கு, இப்படியான தாவல்கள் அடிக்கடி நடந்தாலும் நல்லது.

★★

★ வாழ்க்கையில் வெற்றிபெற- அன்பா? நம்பிக்கையா? விடாமுயற்சியா? பொறுமையா? எது முக்கியம்?

முக்கன் புனிதன்-பசறை.

நம்பிக்கையோடு விடாமுயற்சி இருந்தால் வெற்றி நிச்சயம். வெற்றி கிடைத்தாலும் சந்தோஷமாக இருக்க அன்பு வேண்டும். ஒருவேளை வெற்றி தள்ளிப்போய்க் கொண்டிருந்தாலும் அவசரப்பட்டு வாழ்வைக் கெடுத்துவிடாதிருக்க பொறுமை அவசியம்.

★★

★ 'ரெட்' படத்தில் அஜீத்தின் 'கெட்அப்' எப்படி?

கே.ரமேஷ்-பொத்துவில் நகர்.

அஜித் ஆகட்டும், சூர்யா ஆகட்டும், விஜய் ஆகட்டும், பிரசாந்த் ஆகட்டும் ஆரம்ப காலத்தில் தங்களிடமிருந்த மென்மையான காதலர்களைத் துரத்திவிட்டு, சதாநாயக வில்லன்களாகிக் கொண்டிருக்கிறார்கள். 'நாயக'னில், 'சத்யா'வில் வன்முறையை எடுத்துக் கொண்ட கமல், "இதை விட்டா செத்துப் போயிடவேன்" என்று அந்தக் கதா பாத்திரங்களில் சொன்னார். இப்போது இவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். என்னுடைய கவலையெல்லாம், வன்முறையை நிறுத்தினால் செத்து விடுவார்கள் என்றிருந்தால், அதை நிறுத்துவது எப்படி?

★★

★ ஒரு சொல்லில் கவிதை தர முடியுமா?

தாராபுரம் நிலாம், பாலாவி.

குழந்தை.

★★

★ உங்களிடம் ஓர் அழகான பெண் பாதையில் கண்டு கதைக்க வந்தால் நீங்கள் யாது செய்வீர்கள்?

எஸ்.சுதர்சினி-கொழும்பு-07.

நான் அசடுவழிகிறவன் இல்லை என்று காட்டிக் கொள்ள பெரு முயற்சி எடுத்துக் கொள்வேன்.

★★

★ பெண்களைப் பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

எஸ்.எல்.ராதிகா- சேதவத்த.

எல்லாவற்றைப் பற்றியும் இதுவரை ஆண்களின் அபிப்பிராயமே சமூக அபிப்பிராயமாகச் சொல்லப்பட்டு வந்ததால், பெண்களை வெறும் கவர்ச்சி பொம்மைகளாகவும், அழகால் வெருட்டி மயக்கும் மாய மோகினிகள்ள்ளா..க...வும்... விடுங்கள்ள்ள்... வார்த்தைக..ள் கூட ஜொள்ள்ளாற்றில் நீழ்ந்துகின்றன...

★★

★ லாராவின் துடுப்பாட்டம் பற்றி?

சுதாஸ் சுதாகரன்-பூண்டுலோயா.

கிரிக்கெட்டை அந்த விளையாட்டு நுணுக்கங்களுக்காகவே ரசிப்பவர்கள் பலபேர் இருக்கிறார்கள். அந்தளவு பக்குவம் எனக்கில்லை. எப்போதும் நமது அணி வென்றுவிட வேண்டும் என்ற முனைப்பிலேயே எனது விளையாட்டார்வம் இருக்கும். அதையெல்லாம் மீறி, நம் அணி தோற்றாலும் பரவாயில்லை இவர் அவுட்டாகிவிடக் கூடாது என்ற பதைபதைப்புடன் பார்க்க வைப்பவர்கள் இருவர். அதில் ஒருவர் லாரா. பெண்மை கலந்த ஒரு நளினம் அவரிடமிருப்பதாகத் தோன்றும். பந்துகளை அவர் விளாசுகிற போது நொறுக்கித் தள்ளுகிறார் என்றோ பிளந்து கட்டுகிறார் என்றோ நினைக்கத் தோன்றாது. எல்.சுப்ரமணியத்தின் வயலினிலிருந்து கிளம்புகிற கம்பீரமும் குழைவும் போல இவரது மட்டை லயத்திலும் இனிய சங்கீதம்தான்.



உன்னுள் உறைந்தவன்

"கூந்தலுக்கு வாசனை இருக்கிறதோ இல்லையோ, உன் மேனிக்கு வாசனை இருக்கிறது" என்று சொல்லியபடி அவள் கழுத்துக்கும் தோளுக்கும் இடையில் முகத்தைத் தேய்த்தான் சரவணன்.

"ம்... பிதற்ற ஆரம்பித்துவிட்டீர்கள்" என்றாள் மஞ்சுளா கேலியாக.

"பித்தம் தலைக்கேறினால் பிதற்றுவதைத் தவிர வேறென்ன வழி?"

"பித்துப் பிடித்துத்தான் அலைகிறீர்கள்" கோபம் போலக் காட்டிக் கொள்ள முயன்ற சொற்களில் கோபம் இருக்கவில்லை.

"முதல் பாதி சரி" என்று முகத்தை அவள் தோளிலிருந்து எடுக்காமலே முனகினான்.

"என்ன பாதி?" என்று கேட்கும் போதே மஞ்சுவின் உடல் கெட்டிப்படுவதை உணர்ந்தான் சரவணன்.

முகத்தை நிமிர்த்தித் தன் உதடுகளை அவள் கன்னங்களில் உராய விட்டபடி சொன்னான்: "பித்துப் பிடித்திருக்கிறது என்பது சரி. அலைகிறேன் என்பது சரியல்ல..."

அவன் கன்னத்தைத் தன் விரல்களால் கிள்ளியும் தடவியும் விட்டபடி "பின்னே என்னவாம்?" என்றாள்.

"உன்னிடமேயே அடங்கி விடுகிறேன் என்று சொல்!"

"அடங்குகிற ஆளைப் பாரேன்" என்று கன்னத்தில் செல்லமாகத் தட்டினாள்.

"இத்தனை ஆயுதங்களுக்கு முன்னால் அடங்காமல் என்ன செய்வதாம்?"

"ஆயுதங்களா?"

"ஆமாம் என்னைத் துளைத்துப் பொடிப் பொடியாய் அறுத்துப் போட்டுவிடுகிற ஆயுதங்கள்... இதோ நீதான் வைத்திருக்கிறாயே..."

அவன் சுட்டிக்காட்டிய இடங்களால் அவள் முகம் சிவந்தாள். வெட்கத்தில் மௌனமானாள்.

"இதோ, இந்த மௌனம்கூட என்னைக் கொல்லும் பயங்கர ஆயுதம்தான்!" என்றான் அவன்.

இப்போது அவள் அவன் தோளுக்குள் முகம் புதைத்து "ம்" என்று முனகினாள்.

அவள் உணர்ச்சி அலைகளில் மிதக்க ஆரம்பித்ததை அவன் உணர்ந்துகொண்டான். முழுவதுமாக அவளைத் தன் கரங்களுக்குள் அடக்கித் தழுவினான். கூந்தலை முகர்ந்தபடி, "கூந்தலுக்கு ஒரு வேளை நீ சூடும் பூக்களால் வாசனை வந்திருக்கலாம். ஆனால், உன்னுடையதேயான இந்த மேனி வாசனை என்னைக் கள்ளுக் குடித்தவன் போலாக்குவது உண்மை... வெறிகொண்டு ஆடுகிறேன் பார்..." என்று அவளை அணைத்தபடி அசைந்தான்.

அவள் முகத்தை நிமிர்த்திச் சிரித்தாள்.

அவள் பல்வரிசை பார்த்து வியந்தான்.

"குடி வெறியர்களை எனக்குப் பிடிக்காது" என்றாள்.

"மணந்தாலே வெறிப்பவனை என்ன செய்வாய்?"

"அவ்வளவு பலவீனரா நீங்கள்?" அவன் கன்னத்தை இரு கரங்களாலும் பற்றிப் பிடித்தபடி கேட்டாள்.

"பலம், பலவீனம் எல்லாம் எதிரிலுள்ளவர்களின் பலங்களைப் பொறுத்தது. அவர்களின் தாக்குதல் வலிமையைப் பொறுத்தது. பூனையின் பாய்ந்து தாக்கும் ஆற்றலுக்கு முன்னால் எலி பலவீனமுடையது. நாயின் பாய்ச்சலுக்கு முன் பூனை பலவீனமானது..."

"ஏதேது... என்னை மிருக ஜாதிக்குள் இணைத்துவிடுவீர்கள் போலிருக்கிறது...."

"இல்லை... இந்த தேவதைக்கு முன்னால் நான் பலவீனமானவன் என்று சொல்ல வந்தேன்..." என்றபடி அவள் இதழ்களை கைப்... அல்ல இதழ்பற்றினான்.

அவனிடமிருந்து விடுவித்துக் கொள்ள முயன்று தினறினாள் மஞ்சுளா. அந்த முயற்சியில் அவன் முரட்டுத் தனத்தை மேலும் அதிகரிக்கச் செய்தாள்.

விடுவித்தபோது, கோபத்தில் அவள் விழிகள் விரிந்திருந்தன.

"முரடு.... இப்படியா வீட்டுக்குத் திரும்பிப் போக முடியாதபடி அடையாளம் வைப்பது?" என்று சீறினாள்.

அவன் சிரித்தபடி, "வேல் விழியால் எந்தன் விலாப்புறத்தில் கொத்தாதே!" என்றான்.

அவன் நெஞ்சில் கைகளால் குத்தினாள். அவன் இழுத்தணைத்து விழியோடு தன் விழியைப் பொருத்தினான். பிறகு சொன்னான்.

"வேல்களுக்கு எண்ணெய் அல்லவா பூசுவார்கள், நீ மை தீட்டியிருக்கிறாயே...?" என்று,

"போதும் போதும் புலவர் மொழிகள்.." என்று சொல்லியபடி அவனைத் தள்ளிவிட்டு விலகி எழ முயற்சித்தாள்.

அவன் அவளைப் பிடித்திழுத்து மடியில் அமர்த்திக் கொண்டு, "யாராவது 'உன் காதலி யார்?' என்று என்னிடம் கேட்டால் என்ன சொல்லுவேன் தெரியுமா?"

"என்ன சொல்லுவீர்களாம்?" என்றாள் அவன் பிடியிலிருந்து திமிறிக் கொண்டே.

"முத்துப் பல்வரிசை, மூங்கிலனைய தோள், மாந்தளிரால் செய்த மேனி, மயக்கமூட்டும் நறுமணம், மையெழுதிய வேல்விழி- அவளே என் காதலி!"

முறிமேனி முத்தம் முறுவல்
வெறிநாற்றம்
வேலுண்கண் வேய்த்தோ
ளவட்கு.
(குறள்: 1113)

இலக்கிய நயம்

முழில்யன் தருவது

மன்னாதி மன்னன் 91

காமதேனுவும் கௌசிக மன்னரும்

வனவிலங்குகள் சஞ்சாரம் செய்யும் கொடிய வனத்தின் மையத்தில் ஆசிரமம் அமைத்து நெடுங்காலமாக தவம் செய்து வரும் வசிட்ட முனிவர், எதுவிதமான முன்னேற்பாடுமின்றி மிகக்குறுகிய காலத்தில் கௌசிக மன்னருக்கும் அவருடைய பரிவாரங்களுக்கும் அறுசுவை உணவளித்தார். இந்தக் கைங்கரியத்துக்கு மாமுனிவரின் மகளாகக் கருதப்படும் காமதேனு என்ற தெய்வீகப் பசுவே காரணம் என்பதனை அறிந்த கௌசிக மன்னர், காமதேனுவை தனக்குத் தந்து விடுமாறு முனிவரிடம் கோரினார். இக் கோரிக்கையை ஏற்க முனிவர் முன்வரவில்லை.

இத்தகைய சக்தி வாய்ந்த ஒரு பசு கானகத்தின் மத்தியிலிருந்து தவம் செய்யும் முனிவரிடம் இருப்பதைப் பார்க்கிலும் தன்னைப் போன்ற ஒரு மன்னனிடம் இருக்குமானால், நாட்டு மக்கள் அனைவரும் சுபீட்சமாக வாழ முடியும் என்று மன்னர் முனிவரிடம் எடுத்துக் கூறினார். ஆனால் முனிவர் அதற்கு இடம் தராததுடன் பல விளக்கங்களையும் கூறினார்.

கௌசிக மன்னன் எத்தகைய விளக்கத்தையும் கேட்க விரும்பவில்லை. முனிவர்மீது கோபமே மன்னருக்கு ஏற்பட்டது. காமதேனுவை தன்னுடன் வந்திருக்கும் ஏவலாளர்களை அனுப்பி அபகரித்துக் கொண்டு போகப் போவதாக மன்னன் அதிகாரதோரணையில் கூறினார்.

வசிட்ட முனிவர் கோபப்படாமல், "மன்னனே! உம்மால் முடியுமானால் காமதேனுவை அபகரித்துச் சென்றுபார்" என்றார். மன்னன் தனது படைவீரர்கள் பலரை ஏவி முனிவரின் ஆசிரமத்திலுள்ள காமதேனுவைக் கட்டி இழுத்துக் கொண்டு நாடு திரும்புமாறு கட்டளையிட்டான். படையினர் அனிவகுத்து ஆசிரமத்துள் சென்று காமதேனுவை கயிறு வீசிப் பிடிக்க எத்தனித்தனர். காமதேனு ஓடிச் சென்று முனிவரிடம் முறையிட்டது.

நிஷ்டையிலிருந்த முனிவர் கண்களைத் திறந்து "மகளே, உன்னைத் தனக்குத் தந்துவிடுமாறு மன்னன் கோரினான். நான் மறுத்து விட்டேன். அவனோ உன்னை பலாத்காரமாகப் பிடித்துச் செல்லத் திட்டமிட்டுள்ளான். எனவே எந்த விதமான தயவு தாட்சணியமுமில்லாமல் அவர்களிடமிருந்து தப்பித்துக் கொள்வாயாக," என்றார்.

மன்னனுடைய படைவீரர்கள் பலர் வந்து காமதேனுவைப் பிடிக்க முயன்றபோது காமதேனு பலமாக மூச்சு விட்டது. அந்த மூச்சிலிருந்து வெளியேறிய காற்றிலிருந்து ஆயுதபாணிகளான படைவீரர்கள் நூற்றுக்கணக்கில் தோன்றினார்கள். மன்னர் அனுப்பி வைத்த படைவீரர்கள் அனைவரையும் கொன்றொழித்தனர். இதனைத் தொடர்ந்து காமதேனு முனிவரிடம் விடை பெற்றுக்கொண்டு தேவலோகம் புறப்பட்டுச் சென்றுவிட்டது.

தனது படை வீரர்களை வசிட்ட மாமுனிவரே கொன்றொழித்துவிட்டார் என்று கருதிய மன்னர் தன்னுடன் எஞ்சியிருந்த வீரர்களையும் தனது நூறு புதல்வர்களையும் வசிட்ட முனிவரைக் கொன்று விட்டு வருமாறு அனுப்பினார்.

வசிட்ட மாமுனிவர், தன்னையே கொல்லுவதற்கு கௌசிக மன்னர் தனது மக்களையும் ஏவி விட்டதை ஞானதிருஷ்டியினால் அறிந்து ஒரு தெற்பைப் புல்லை எடுத்து மந்திரம் ஓதி ஆசிரம வாயிலில் போட்டார். அந்தத் தெற்பைப்புல் ஓர் ஒளிபொருந்திய தீபம் போல் சுழன்ற வண்ணம் ஆசிரமவாயிலில் நின்றது. முனிவரும் அந்தத் தம்பத்தின் அருகில் அமர்ந்து கொண்டார். கௌசிக மன்னரால் ஏவப்பட்டவர்கள் ஆசிரமவாயிலைத் தாண்ட முடியாமல் நின்றனர். முன்னேறவிடாமல் தெற்பைப்புல் தம்பத்திலிருந்து வெளியேறிய கொடிய வெப்பம் அவர்களைத் தடுத்தது. இதனால் தொலைவிலிருந்த வண்ணமே முனிவரை நோக்கிப் பாணங்களைச் சரமாரியாகத் தொடுத்தனர்.

முனிவரை நோக்கிச் செலுத்தப்பட்ட பாணங்கள் எவையும் அவரை அணுகமுடியவில்லை. அத்தனை பாணங்களையும் தம்பம் தன்னகத்தே இழுத்து எரித்துவிட்டது. முனிவருக்கும் இப்பொழுது கோபம் மேலிட்டுவிட்டது. தன் ஒரு கை அசைவிலேயே கௌசிக மன்னரின் புதல்வர்கள் நூறு பேரையும் படைவீரர்களையும் எரித்துச் சாம்பலாக்கிவிட்டார்.

தனது புதல்வர்களையும் படைவீரர்களையும் முனிவர் எத்தகைய ஆயுதங்களும் பயன்படுத்தாமல் கொன்றொழித்து விட்டார் என்ற தகவல் எட்டியதும் கௌசிக மன்னர் கலங்கினார். தனக்குப் பின் நாட்டை ஆள ஒரு மகன் கூட மிஞ்சவில்லையே என்ற கவலை அவரை ஆட்கொண்டது. மீண்டும் தன்னுடைய நாட்டுக்குத் திரும்பாமல் தன்னுடன் இருந்த அமைச்சர்களிடம் இராச்சிய பாரத்தை ஒப்படைத்துவிட்டு துறவறத்தை மேற்கொண்டு நரசிம்ம சிரி என்ற மலைச்சாரலை அடைந்தார்.

பல வருடங்களாக பசி, தாகம், தூக்கம் எதுவுமின்றி கொளசிக மன்னன் கடும் தவமியற்றியமையினால் தேவர்கள் அவர் மீது கருணை காட்டினார்கள். கௌசிகர் முன்தோன்றிய தேவர்கள் அவருக்கு ராஜரிஷி விஸ்வாமித்திர மாமுனிவர் என்ற பட்டத்தையும் வழங்கினர்.

ராஜரிஷிப் பட்டம் பெற்றதுடன் அளவிறந்த மகாசக்திகளையும் அவர் பெற்றார். அண்டசராசரத்திலுள்ள உலகங்களுக்கெல்லாம் சென்று அட்டமாசித்திகளையும் பெற்று பூவுலகம் திரும்பினார். முனிவர் வரும் வழியில் அவர் கண்களுக்கு ஓர் அழகிய நகரம் தென்பட்டது. அந்நகரின் அழகு முனிவரை வெகுவாக ஈர்த்தது. அங்குள்ள ஒரு மரத்தின் நிழலில் அமர்ந்து கொண்டார். வழிப்போக்கர் ஒருவரை அழைத்து, அந்த நகரின் பெயரையும் சிறப்புகளையும் விசாரித்தார்.

அந்த நகரத்தின் பெயர் தங்கமாபுரி என்றும், அரசனின் பெயர் தங்கேஸ்வரன் என்றும் அரசியின் பெயர் சொர்ணகாந்தரூபி என்றும் அவன் சொன்னான். தகவல் சொன்னவனிடமே முனிவர், "நீ உடனே போய் மன்னனிடம் விஸ்வாமித்திர மகரிஷி வந்திருப்பதாகக் கூறி, உடனே என்னை வந்து பார்க்கும்படியும் கூறு!" என்றார்.

அவனும் உடனே அரண்மனை சென்று மன்னன் தங்கேஸ்வரனிடம் மகரிஷி விஸ்வாமித்திரர் வந்திருப்பதாகத் தெரிவித்தான். மன்னனும் பெரு மகிழ்ச்சியடைந்து, மந்திரிப் பிரதானிகளிடமும் மகாராணியாரிடமும் தகவல் கூறிப் புறப்படுவதற்குச் சற்றுத் தாமதித்துவிட்டது.

பல்லாண்டுகள் தவமியற்றிருந்தமையினால் கடுங் கோபக்காரராகவும் ராஜரிஷி பட்டத்தை தேவர்கள் மூலம் பெற்றமையினாலும் விஸ்வாமித்திரர் சற்று தலைக் கர்வம் கொண்டவராகவும் ஆகிவிட்டார். இதனால் தான் சொல்லி அனுப்பியும் உடனடியாக மன்னன் தன்னிடம் ஓடிவராதமையினால் சினங்கொண்டார். உடனடியாக அந்த நகரத்துக்கும் அரசனுக்கும் மக்களுக்கும் சாபம் கொடுத்தார்.

'தங்க மாபுரியில் வாழும் மனிதர்கள் மற்றும் உயிரினங்கள் அனைத்தும் உயிரிழக்க வேண்டும்' என்று சாபமிட்டார். அவ்வாறே நகரில் தென்பட்ட அனைத்து மாந்தர்களின் உயிர்களும் உடல்களை விட்டுப் பிரிந்தன. ஆனால் அவ்வுயிர்கள் அனைத்தும் உடனடியாகச் செல்ல எங்குமே இடம் கிடைக்கவில்லை. இதனால் அந்தரத்தில் தவித்த உயிர்களைத் தனது கமண்டலத்தில் அடக்கிவிட்டார் விஸ்வாமித்திர மாமுனிவர்.

(மன்னன் வருவான்...)

இராஜகுமாரன்

சிரியுங்கள் சிரியுங்கள்



"எப்பவும் சாப்பிட்டவுடன் எனக்குக் குட்டித்தூக்கம் போடணும்..."
"அதுக்காக ஒவ்வொரு நாளும் சுண்டல் சாப்பிட்டுட்டு இப்படி என் மடியில குறட்டைவிட்டுத் தூங்கினா எப்படி?!"

"எனக்கு 'சங்கீதப் புயல்'னு பட்டம் கொடுத்திருக்காங்களே... எப்படி?"
"ரொம்ப சரி... நீங்க பாடறப்போ, யாருமே வீட்டை விட்டு வெளியே வர்றதில்லையே!"

"என் குரலுக்குன்னே அவார்டு கொடுத்திருக்காங்க, கவனிச்சீங்களா... பாருங்க 'ராகச் சக்கரவர்த்தி' அவார்டு."
"சரியா பாருங்க... 'காகச் சக்கரவர்த்தி'னு எழுதியிருக்காங்க."

"யோவ்... நான் தப்பா பாடினா எனக்கென்னய்யா... குத்திக் குத்திக் காட்டிட்டிருக்கீர்!"

"யாழ்ப்பாணத்திலிருந்து பெண் பார்க்க வர்றவங்க ஒரு ஸ்பெஷல் கண்டிஷனோட வராங்களா... என்ன அது?"
"காபி, சாப்பாடோட அவங்க அஞ்சு பேருக்கும் வந்து போகற பிளைட் சார்ஜும் நாமதான் தரணுமாம்...!"

Regd. as a News Paper at the G.P.O. (QD/38/NEWS/2001)

அருள் ஜுவலர்ஸ்
பெண்களின் அழகோ இரகசியம் அதை எங்களது வண்ண நகைகள் நின்னிப் பேசுகின்றன.
105, காலிவீதி, கொள்ளுப்பிட்டி சுவைத்திருந்த கிளை
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
436331

முரண்பாடு

ஜுவல்ஸ் ஸ்ரீகல்யாணி
SRI KALYANY JEWELLS
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

தனது தாயை இழந்து கவனிப்பாரற்ற நிலையில் கென்ய நாட்டு வனாந்தரத்தில் வாழ்ந்த ஒக்ஸிக்ஸ் (Oxyx) இன மான் குட்டி ஒன்றுக்கு பெண் சிங்கம் ஒன்று அடைக்கலம் கொடுத்து காத்த அபூர்வ சம்பவமொன்று குறித்து நைரோபியிலிருந்து அறியக் கிடைக்கின்றது.

இந்த வனாந்தரத்தில் சுற்றித் திரிந்த வெளிநாட்டு உல்லாசப்பயணிகள் பலரும் இந்தக் காட்சியை கண்டுள்ளனர். ஆனால் இந்த மகிழ்ச்சிகரமான முன்னுரையின் முடிவு மிகவும் சோகமானது. இந்தப் பெண் சிங்கத்துடன் மான்குட்டி நடமாடுவதை அவதானித்த மற்றொரு சிங்கம் மானுக்கு அடைக்கலம் கொடுத்த சிங்கம் சற்று அசந்தபொழுதில் மான்குட்டியை கடித்து கொன்று சாப்பிட்டுவிட்டது.

நன்றி: போர்வை றிஸான் ஸனூன், கட்டார்.

பிரமச்சாரியான இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய் தனது 77வது பிறந்தநாளை கடந்த 08ம் திகதி கொண்டாடினார்.

அவரை வாழ்த்துவதற்காக புதுடில்லி, செங்கோட்டைக்கு முன்னால் அமைக்கப்பட்டிருந்த மாபெரும் வாழ்த்து அட்டையையே இங்கு காண்கிறீர்கள்.

48 அடி அகலமும் 30 அடி உயரமும் கொண்ட இந்த வாழ்த்து அட்டை வாஜ்பாயின் காரியாலய ஊழியர்களால் தயாரிக்கப்பட்டது. வாஜ்பாய் பற்றி ஒரு மேலதிகத் தகவல்.

அவர் தற்போது இசைத் தட்டு ஒன்றில் ஒளிப் பதிவுக்காக நடிக்க பயிற்சி பெற்று வருகிறார். விரைவில் இவர் நடித்த சி.டி. வெளி வரும்.

1வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி ஜோதிகா /25.01.2002

தீபன்-சுகன்யா தம்பதிகளின் அருந்தவப்புதல்வி செல்வி ஜோதிகா தனது முதலாவது பிறந்த தினத்தை அவுஸ்திரேலியாவில் 2002-01-25ல் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றாள்.

அவரை அப்பா, அம்மா, தாத்தா (மெல்போண்) பாட்டி (ஸ்ரீலங்கா) அப்பப்பா, அப்பம்மா, பூட்டன் (சிவகடாட்ஷ குருக்கள்-முளாய்) பெரியப்பா, பெரியம்மா, மாமாமார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அண்ணாமார், அக்காமார், தாத்தாமார், பாட்டிமார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் இறைவன் அருளால் சகல சௌபாக்யங்களும் பெற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றனர்.

தகவல்: அப்பா-அவுஸ்திரேலியா.

வாழ்த்து அட்டை

3வது, 7வது பிறந்தநாள் வாழ்த்து

M.ஷம்ஷாத் 07.12.2001 | E.ஷப்னா 18.01.2002

பலப்பிட்டியைச் சேர்ந்த கஹைல்-ஹிஸ்மியா தம்பதியினரின் செல்வப் புதல்வன் ஷம்ஷாத் 07.12.2001 அன்று தனது 3வது பிறந்தநாளையும் செல்வப் புதல்வி ஷப்னா 18.01.2002 அன்று தனது 7வது பிறந்தநாளையும் விமரிசையாகக் கொண்டாடினார்கள். இவ்விருவரையும் அன்பு வாப்பா-உம்மா, உம்மும்மா பர்ஸானா ஆன்டி, றம்ஸியா ஆன்டி, அரபாத் அங்கிள் அர்ஹாம் அங்கிள், றினோஸியா ஆன்டி, ஸருக் மாமா-தவவி சாச்சா குடும்பத்தினர், பஸ்யாலையிலுள்ள அப்பா-வாப்பும்மா குடும்பத்தினர் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பல்கலையும் சுற்று அல்லாஹ்வின் அருளால் இன்பமுற்று வாழ இனிதே வாழ்த்துகிறார்கள்.

தகவல்:- அர்ஹாம் அங்கிள்

ஆகாயச் சாதனை

1960ம் ஆண்டு முதலாவது விண்வெளிப் பயணத்தின் பின்னர் அமெரிக்கா தனது 2வது விண்கலத்தை 9 ஆண்டுகளின் பின்னர்தான் ஏவியது. அதன் பின்னர் 1981ம் ஆண்டு ஒரு விண்கலம் செலுத்தப்பட்டது. அதற்குப் பிறகு நீண்ட ஆராய்ச்சிகளின் முடிவில் 1986ம் ஆண்டு ஜனவரி மாதம் 25ம் திகதி கெனடி விண்வெளித் தளத்திலிருந்து எவப்பட்ட விண்கலம் அதன் 7 விண்வெளி வீரர்களுடன் நடுவானில் வெடித்துச் சிதறியது.

உலகெங்கிலும் இலட்சக்கணக்கான மக்கள் தொலைக்காட்சியில் நேரடியாகப் பார்த்துக் கொண்டிருந்த சமயம் இந்த அனர்த்தம் கணப் பொழுதில் நடந்து முடிந்தது. அதன் பின்னர் அமெரிக்க விண்வெளி ஆராய்ச்சித் துறையில் பாரிய பின்னடைவை எதிர்நோக்கும் என எதிர்பார்க்கப் பட்டபோதும் மிகக் குறுகிய காலத்திலேயே அது தனது சட்றலைட்டுக்களை நவீன மயப்படுத்தியது. இந்த அனர்த்தத்துக்குப் பின்னர் முதல் முறையாகத் தயாரிக்கப்பட்ட விண்கலம் கெனடி விண்தளத்தில் இருந்து செலுத்தப்பட தயார் நிலையில் இருப்பதையே காண்கிறீர்கள்.

பல தோல்விகளுக்குப் பின்னரும் ஆகாயச் சாதனையில் முன்னணியில் அமெரிக்காவே இருக்கிறது.

1வது பிறந்தநாள் வாழ்த்து

செல்வி ஜெனிசா நாகேந்திரம் 25.01.2002

பண்ணைப் பிறப்பிடமாகக் கொண்ட நாகேந்திரம்-ஜெனிவாதேவி (இந்திரன் அதிசா) தம்பதிகளின் செல்வப் புதல்வி ஜெனிசா (ஜெனி) தனது முதலாவது பிறந்த தினத்தை 25.01.2002 அன்று சுவிஸ் பேர்ண மாநிலத்தில் உள்ள தமதில்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்.

ஜெனிசா குட்டியை சுவிஸ் அப்பா, அம்மா, ஜெகிலா சித்தி, இலங்கை (கொழும்பு) அப்பம்மா, வாழ்ப்பாணம் அம்மம்மா, கனடா பெரியமாமா, பெரிய அத்தை, மச்சான்மார், மச்சாள்மார், இலங்கை (கொழும்பு) ஆசை மாமா, ஆசை அத்தை, மச்சான்மார், மச்சாள், (லண்டன்) பெரியப்பா, பெரியம்மா, அண்ணாமார், அக்காமார், ஜெர்மன் சின்னமாமா, சின்ன அத்தை, மச்சான்மார், இலங்கை (வாழ்ப்பாணம்) பெரியப்பா, பெரியம்மா, அண்ணா, அக்கா, சித்தப்பா, சித்தி, அக்காமார், மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஜெனிசாக் குட்டியை எல்லாம் வல்ல இறைவன் அருள் பெற்று பல்கலையும் சுற்று சீரும் சிறப்படன் பல்லாண்டு காலம் வாழ்க்கவென வாழ்த்துகின்றனர்.

தகவல்: திரு திருமதி இந்திரன் அதிசா, செல்வி ஜெனிசா-சுவிஸ்.

இப்பத்திரிகை கொழும்பு-08, வெள்ளவத்தை, நெல்சன் பிளேஸ், 16A ஆம் இலக்கத்தில் டி.டி. என்டர்பிரைசஸ் (பிரைவேட்) லிமிடெட் ஸ்தாபனத்தால் பொரலஸ்கமுவலில் உள்ள சி.பி.டி. அச்சகத்தில் ஜன.27 ஆம் திகதி அச்சிட்டு வெளிவிடப்படுகிறது.